
REGD. NO. M. 4392



நெல்லூர் ஸ்ரீ கஸ்தூரிதேவி வித்யாலயா உயர்தரப் பெண் பாடசாலை நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

○●○

சங்கீத ரத்ன ஸ்ரீ டி. சௌடய்யா ... வயலின்
கல்பாத்தி ஸ்ரீ ராமநாதன் ... மிருதங்கம்
ஸ்ரீ வில்வாத்ரி ஐயர் ... கடம்

2-4-50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

வித்யாலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விசேஷப் பந்தலில்

சென்னை முதல் மந்திரி கனம் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள்
தலைமையில் நடைபெறும்

டிக்கட்டுகள்: ரூ. 250, 100, 50, 25 & ரூ. 10

டி. ராமி ரெட்டி, தலைவர்

ஒலிபெருக்கி ஏற்பாடு: திருச்சி ரேடியோ சேல்ஸ் அண்டு சர்வீஸ்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள் நம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங். கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள். எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை. நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்: ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

கல்கி




KALKI ஏப்ரல் ௨, 1950

4 அண

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
110-119 Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

உமா ஆபரணங்களை எல்லா விசேஷ பண்டிகைகளிலும் உபயோகியுங்கள்



800 டிசைன்கள் கொண்ட கேட்லாக் இனாம்

வி. பி. செலவு அணா 15 தனி

○●○

உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ்

மசூலிப்பட்டிணம்

"நீ போ, அம்மா. அவனைக் கூப்பிடு. சற்றுத் தலையைப் பிடித்து விடட்டும்," என்றார் 'அவர்'. என் மாமியாரிடமா அப்படிப்பட்ட தந்திரங்கள் பலிக்கும்?

"நானே பிடித்து விடுகிறேன்.... சின்னஞ் சிறிசுகள் என்கிறது சரியாக இருக்கிறது. வெட்கம், மரியாதை ஒன்றுமே இல்லாமல்......" என்று சொல்லிவிடவே நான் அயர்ந்து விட்டேன்.

• • •

நான் தூங்கிப் போனதே எனக்குத் தெரியவில்லை. மனத்தில் நிறைந்து வந்த இளமைப் பருவத்து நினைவுகள் பசுமை மாறாமலிருந்தன. கிருஷ்ணஸ்வாமியும், ரங்கநாயகியும் ஸினிமாவிலிருந்து திரும்பி வந்து கதவை இடித்த போதுதான் எனக்கு நித்திரை கலைந்தது.

அவர்கள் சாப்பிடப் போனதும் நான் பாயை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்தேன். சமையலறையில் கிருஷ்ணஸ்வாமி சாப்பிட்ட வண்ணம் ரங்கநாயகியுடன் பேசிக்கொண்டிருந்தான்.

"இனிமேல் நான் உங்களுடன் எந்த இடத்திற்கும் கிளம்பவே மாட்டேன்" என்று மெதுவாகச் சொன்னாள் ரங்கநாயகி.

"நானும் கூடத்தான் தனியாக எங்கேயும் போகப் போகிறதில்லை" என்றான் கிருஷ்ணஸ்வாமி சாதத்தை விழுங்கிக் கொண்டே.

"பின்னே என்ன? பார்க்கிறவர்கள் நம்மைப் பரிகாசம் செய்யமாட்டார்களா? வீட்டில்தான் சேஷ்டை என்றால் வெளியில் போன இடத்திலேயும்......"

ரங்கநாயகியின் குரலில் தொனிக்க வேண்டிய கோபத்தை அவளுடைய ஆனந்தம் முழுக்க முழுக்க மறைத்து விட்டது. அந்த ஆனந்தத்தில் எனக்கு உண்மையான பங்கு இருப்பதை நான் கண்டு கொண்டு விட்டேன். அதில் எனக்கு எவ்வளவோ ஆனந்தம்!

"அப்படியானால் இனிமேல் உன்னிடம் பேசக் கூடாது என்கிறாயா? சொல்லிவிடு" என்று அவளைப் பயமுறுத்தினான் கிருஷ்ணஸ்வாமி.

"ஆமாம். வெறுமனேயாகிலும் குதர்க்கம் பேசாதீர்கள்!"

கிருஷ்ணஸ்வாமி ஒரு வழியாகச் சாப்பிட்டுவிட்டுக் கையலம்பிக் கொண்டான். ரங்கநாயகியின் சிரிப்பொலி என் உள்ளத்தில் நிரம்பிற்று. அவள் அதோடு அவனை விட்டதாகத் தெரியவில்லை.

"ரங்கா, நான் பரிமாறட்டுமா?"

"இப்போது நீங்கள் வெளியே போகிறீர்களா, அம்மாவைக் கூப்பிடட்டுமா?"

"உனக்கு இந்த மட்ட புத்திதான் கூடாது என்கிறேன்."

"வீட்டில் நம்மைவிடப் பெரியவர்கள் இருக்கிறார்கள் என்பதே உங்களுக்கு வர வர மறந்து போய்விடுகிறது!"

"ஆகா!......உன் புத்திசாலித் தனம் வேறு யாருக்கு வரும்?"

அதற்குப் பிறகும் விழித்துக் கொண்டிருக்க அவ்வளவு கடின சித்தம் எனக்கு இல்லை. வேண்டுமென்றே அயர்ந்து தூங்குகிற பாவனையில் பலமாகக் குறட்டை விடத் தொடங்கினேன்.

○ ● ○

கொண்டு விட்டேன். 'அவரை' விடச் சிறந்த வரனையா அப்பா தேடிப் பிடித்து விடப் போகிறார்?......

ஊருக்கு வந்து சேர்ந்ததுமே அப்பா, "மஹாமக ஸ்நான பலன் பார்த்தாயல்லவா? நாம் தேடாமலேயே வரன் வலிய வந்திருக்கிறது!" என்று பெருமையுடன் சொல்லிக் கொண்ட பொழுது எனக்குச் சற்று கர்வம் உண்டாயிற்று.

கையோடு கையாக என்னுடைய விருப்பத்தையும் கேட்டு வைத்தாள் அம்மா. உண்மையில் யாரும் தங்களுடைய அபிலாஷையை வெளிப்படையாகக் கூறுவது வழக்கம் இல்லையே! அதன்படியே நானும் என்னுடைய பெற்றோர்களின் இஷ்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கச் சித்தமாகி விட்டேன்.

கல்யாணம் ஆனதும் 'அவருடைய' குறும்புத்தனங்களைச் சகிக்க முடிய வேண்டுமே! அந்தப் படாத பாட்டிலும் நிலவிய இன்பம் வாழ்க்கையில் மீண்டும் கிடைக்கக் கூடியதா?

4

புக்ககம் வந்து சேர்ந்தேன்......

நிலைத்திருக்கிற சுகம் வரப்போகிற துன்பத்திற்குச் சூசகம் என்று சொல்லுவார்கள். பிறந்தகத்தில் எவ்வளவு சீரும் சிறப்புமாக வளர்ந்தேனோ, அவ்வளவுக்கும் புக்ககத்தில் பிராணாவஸ்தை அநுபவித்து விட்டேன்.

என்னுடைய கல்யாணத்திற்கு முன்பே என் மாமனார் காலமாகி விட்டார். ஆகையால் நான் என்னுடைய புக்ககத்தில் காலடி எடுத்து வைத்தபோது அங்கு என் மாமியாரின் ராஜாங்கம்தான்!

வேளை தவறிய வேளைகளில் புருஷனுடன் கொஞ்சிக் குலாவுகிறேன் என்றும், குடும்பத்திற்கு லாயக்குள்ள பெண்ணாக நான் நடந்து கொள்ளுவதில்லை என்றும் ஏதேதோ குற்றங்கள் வந்து குவிந்த வண்ணமிருக்கும். அவ்வளவிற்கும் காரணம் யார் என்று எண்ணுகிறீர்கள்? சாக்ஷாத் 'அவரே'தான்! தன் தாயாரைக் கண்டு விட்டால் மட்டும் மகா சாதுப் பிள்ளையாகி விடுவார். 'அவருடைய' செல்வப் புதல்வன் மட்டும் விஷமத்தில் குறைந்து விடுவானா?

அன்று காலையில் நடந்த சச்சரவையும் கேளுங்கள்:

ஸ்நானம் செய்வதற்கு வெந்நீரை விளாவி வைத்து விட்டு 'அவரை'க் கூப்பிடப் போனேன். ஜன்னல் திண்ணையில் தலையை வைத்தபடி படுத்து ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். நான் அழைத்ததும் 'அவருக்கு' வழக்கமான 'வக்கிர புத்தி' வந்து விட்டது.

அவைகளை யெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் நாணம் மீறி என் உடலையும் பூரிக்கச் செய்கிறது! சொல்லிக் கொள்ளாமலும் இருந்துவிட முடிகிறதா?

'என்னுடைய கையைப் பற்றித் தூக்கி உட்கார வைத்தால்தான் வருவேன்' என்று பிடிவாதம் செய்ய ஆரம்பித்தார். வேறு சமயங்களாயிருந்தால் கூடச் சம்மதித்திருப்பேன்; ஆனால் குளித்து விட்டு மடியாக நிற்பவளிடம் அவ்வாறு சொன்னால் எப்படிக் கேட்பது? தப்பித் தவறி எங்கள் செய்கை என் மாமியாரின் கண்களில் பட்டு விட்டதானால்......! ஆகையால் நான் மறுத்து விட்டேன்.


உடனே 'அவருக்கு'க் கோபம் வந்து விட்டது. நான் கெஞ்சிக் கெஞ்சி அழைத்ததையும் 'அவர்' காதில் போட்டுக் கொள்ளவில்லை. அதற்குள் என் மாமியார் கூக்குரலிடத் தொடங்கவே 'அவர்' பெட்டிப் பாம்பாகி விட்டார். என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாமலேயே குளித்துச் சாப்பிட்டு விட்டுப் போய் விட்டார்.

சாப்பிடும்போது கூட தினசரி தமாஷாக அரட்டை அடிப்பவர் அன்று 'உம்'மென்று உட்கார்ந்து சாப்பிடவே எனக்குப் பரிமாறினாற் போலவே தோன்றவில்லை! என் மீது 'அவர்' கோபம் கொண்டிருக்கிறார் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

சாயங்காலம் 'அவர்' ஆபீஸிலிருந்து திரும்பி வந்த போது முகம் வாடிப் போயிருந்தது! பற்றாக் குறைக்கு தலைவலி என்று வேறு சொல்லிக் கொண்டு படுத்து விட்டார்.

வழக்கமாக பட்சணம் சாப்பிட வரும் சாக்கில் என்னுடன் வம்பளக்க 'அவர்' வராமற் போகவே என் மனம் நிலை கொள்ளவில்லை. மன்னிக்க முடியாத பெரிய தவறு செய்து விட்டதைப் போல் பயந்து கொண்டிருந்தேன். தலைவலிக்குச் சிசுருஷை செய்கிறவளைப் போல் 'அவர்' படுத்துக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்றேன்.

எனக்கு முன்பாக என் மாமியார் 'அவர'ருகில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்த பிறகும் என் மனம் பின்னடையவில்லை. என்னுடைய மாமியாரின் பார்வையில் அனல் வீசுவதை நான் உணர்ந்தேன். நான் மட்டும் உரிமை இல்லாதவளா, என்ன?



அஜீரணபவன் ஹோட்டலில் சாப்பிட்டவர், முதலாளியிடம் :—டிபன் சாப்பிட்டு விட்டேன், ஸார்! நான் போய் விட்டு, பிழைத்துக் கிடந்தால் நாளைக்குத் திரும்பி வருகிறேன்!

தாயார் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தாள்.

வேறு வழி எதுவும் தோன்றாமல் திகைத்துப் போயிருந்த தருணத்தில் 'அவர்' வந்து சேர்ந்தார்! ஆரம்பத்தில் நானோ அல்லது 'அவரோ' ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள வில்லை. ஆபத்துக் காலங்களில் எல்லோரும் எல்லோருக்கும் செய்கிற உதவியையே 'அவரும்' அப்போது செய்தார்.

சிறிதும் தயங்காமல்......வாய் விட்டுச் சொல்லிக் கொள்ள இப்பொழுது கூட எனக்கு வெட்கமாக இருக்கிறது......என்னைக் கடைசிப் பெட்டியில் ஏற்றி விட்டவர் 'அவர்'தான்! நான் தவிப்பதைக் கண்டு ஓடும் வண்டியில் 'அவர்' என்னைப் பிடித்துக் கொண்டு ஏறிய விதம் எல்லையில்லாத வியப்பில் ஆழ்த்தி விட்டது.

"வண்டியின் கதவைத் தாளிட்டு விட்டு, சின்ன ஸ்டேஷன்களில் இவ்வளவு அஜாக்கிரதையாக இருக்கலாமா?' என்று கேட்ட வண்ணம் என்னை நோக்கித் திரும்பியவர் மலைத்துப் போய் விட்டார்; ஆச்சரியத்தில் அவர் முகத்தில் உண்டான மாறுதல் கூட அழகாகத்தானிருந்தது. "நீ...இங்கே எப்படி வந்தாய்?" என்று பேச்சு வராமல் என்னவோ உளறினார்.

எனக்கு மட்டும் அடையாளம் கண்டு கொள்ள முடியாமற் போய் விடுமா? பெண்களுக்குத்தான் ஆண்களை விட ஞாபக சக்தி அதிகமாயிற்றே! புரிந்து கொண்ட வேகத்தில் நானும் என்னுடைய நிலைமையை மறந்து விட்டேன்.

"நீயா......?" என்று சிறிதும் யோசியாமல் கேட்டுவிட்டேன். சிறு வயதில் பழகிப்போன தோஷம் 'நீங்கள்' என்று சொல்ல எனக்கு வாய் வரவில்லை.

எப்படியோ ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டு விட்டோம் என்பதை உணர்ந்தோம்! அப்புறம் 'அவரை' ஏறிட்டுப் பார்க்கக்கூட நான் சக்தியிழந்து விட்டேன். தலையைக் குனிந்த வண்ணம் 'அவர்' கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஒருவாறு பதில் கூறி வந்தேன்.

"மறுா மகத்திற்கு வந்தோம். அப்பா, அம்மா எல்லோரும் முதல் பெட்டியில் இருக்கிறார்கள். என்னைக் காணாமல் தவித்துக் கொண்டிருப்பார்கள்..." என்றேன் நான்.

நான் 'பிளாட்பாரத்தில்' திண்டாட நேர்ந்ததன் காரணத்தைக் கேட்டவுடன் "வருகிற போதே கூஜாவில் தண்ணீர் கொண்டு வந்திருக்கக் கூடாதோ?" என்று 'அவர்' அநுதாபம் காட்டியதும் எனக்குச் சிரிப்பு வந்தது. சிரிப்பை மறைக்க முயன்று கொண்டே 'அவரை' நோக்கினேன். 'அவரும்' என்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றதும் கூஜாவின் மூடியை முன்னும் பின்னுமாகத் திருகியபடி நின்று கொண்டிருந்தேன். என்னுடைய தாயார் தகப்பனார் ஆகியவர்களின் நினைவு என் மனத்தில் ஏற்படவே இல்லை; அதற்கு மாறாக, 'அவர்' காட்டிய பரிவும் அன்பும் தான் பரிபூரணம் பெற்று ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன!

அடுத்தாற்போல் வண்டி நின்ற ஸ்டேஷனில் இறங்கி நானும் 'அவரும்' என் பெற்றோர்கள் இருந்த பெட்டியை அடைந்தோம்.

என்னைக் கண்டவுடன் என் பெற்றோர்களுக்கு உண்டான மகிழ்ச்சியைச் சொல்லி மாளாது. என் அண்ணாவுக்கும் தன்னுடைய பழைய சிநேகிதனைப் பார்த்த சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை; என்னைப் பற்றிக்கூட அடிக்கடி ஏதோ உளறிக் கொட்டினான். எனக்கோ 'அவர்' எதிரில் அண்ணாவுடன் சண்டை பிடிக்க வெட்கம் பிடுங்கித் தின்றது!

'அவர்' கலாசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு ஏதோ பெரிய கம்பெனியொன்றில் வேலை பார்த்து வந்தார். நான்கு குடும்பங்கள் ஏக காலத்தில் கவலையின்றி வயிறு வளர்க்கக்கூடிய சம்பளம்! அப்பாவின் மனம் அங்கேயே சாய்ந்து விட்டதை நான் தெரிந்து

போது ஏற்பட்ட ஓயாத அலைச்சல் என்னுடைய உடம்பை அதிகமாகப் பாதிக்கத் தொடங்கிற்று. வேளா வேளைகளில் சரியான ஆகாரமில்லாமலும், தூக்கமில்லாமலும் இருந்தால் உடம்பு என்னத்திற்காகும்? தாகம் அதிகமானாற்போல் நாக்கை உலரச் செய்து விட்டது. அதற்குத் துணையாகப் பக்கத்திலிருந்து கிளம்பிய சுருட்டுப் புகையும் சேர்ந்து கொண்டது. என்னால் சமாளிக்க முடியவில்லை.

தண்ணீர் குடித்தாலாவது சற்றுத் தெம்பு உண்டாகும் என்று என்னுடைய தாயாரிடம் தண்ணீர் கேட்டேன். எல்லா சந்தர்ப்பங்களிலும் முன் ஜாக்கிரதையுடன் இருக்கும் என் தாயார் அவசரத்தில் தண்ணீர் கொண்டுவர மறந்து விட்டிருந்தாள்! வர வர நா வறட்சி என்னை தின்று கொண்டிருக்கவும் விடவில்லை. கண்கள் இருண்டு வருவனபோல் தோன்றவே அருகிலிருந்த பெட்டியின் மீது உட்கார்ந்து விட்டேன்.

வண்டி ஏதோ ஸ்டேஷனில் நின்றது. சிறிது தூரத்தில் 'பிளாட் பாரத்தில்' தொங்கிக் கொண்டிருந்த 'குடி தண்ணீர்' என்று எழுதப்பட்டிருந்த பலகை என் கண்களை உறுத்தியது. ஓடிப்போய் ஒரு டம்ளர் சாப்பிடலாமா?

நினைத்துக் கொண்டவுடன் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வண்டியிலிருந்து இறங்கிச் சென்று விட்டேன்; அவசரம் அவசரமாக ஜலத்தைக் குடித்து விட்டுத் திரும்பினேன். அதோடு பேசாமலிருந்திருந்தால் என் தலையெழுத்து எப்படி மாறியிருக்குமோ! ஆனால் அம்மாவின் வார்த்தையைக் கேட்டுக் கூஜாவில் தண்ணீர் நிரப்பப்போய் கூஜா நிரம்புவதற்குள் வண்டி ஊதிக்கொண்டே நகரத் தொடங்கி விட்டது.

அவ்வளவுதான்; நான் எவ்வளவோ வேகமாக ஓடிப் பார்த்தேன். நாங்கள் ஏறியிருந்த வண்டியைப் பிடிக்க முடியவில்லை. இம்மாதிரியான விஷயங்களில் எல்லாம் பெண்களின் சாமர்த்தியம் வெற்றியடைய முடியுமா, என்ன? என்



போலத்தானே அப்போது? குடும்பக் கவலைகள் எள்ளளவும் நான் உணர்ந்ததில்லை. எங்கள் குடும்பத்திற்கு நானும் என்னுடைய தமையனாரும்தான் வாரிசு. என்னுடைய தகப்பனாரின் பிதுரார்ஜித சொத்துக்களிலிருந்து சாப்பாட்டுக்கு வேண்டிய நெல் வந்து கொண்டிருந்தது. நிம்மதியான காலக்ஷேபத்திற்கு வேறு என்ன வேண்டும்?

'அவர்' சிறுவயதில் என் தமையனாருடன் படித்துக் கொண்டிருந்தார். 'அவரும்' என்னுடைய தமையனாரும் வெகு அந்நியோந்நியமாகப் பழகி வந்தார்கள். அந்த முறையில் என்மீதும் 'அவருக்கு' அளவற்ற அன்பு உண்டாகி யிருந்தது.

ஆனால் இடையிலேயே அவர் எங்களை விட்டுப் பிரிந்து செல்லும்படியாகி விட்டது. 'அவருடைய' தகப்பனார் ரயில்வே உத்தியோகஸ்தர்; திடீரென்று அவரை மாற்றிவிட்டதால் தம்முடைய குடும்பத்துடன் சென்றுவிட்டார். அந்தப் பிரிவு 'அவருக்கு' எப்படி இருந்ததோ; நான் அதை உணர்ந்து வேதனைப்படக் கூடிய அளவிற்கு இல்லை; அன்றாட நிகழ்ச்சிகளின் மதிப்பீடுதான் அதற்கும் கிடைத்தது!

2

நாட்களும், மாதங்களும், வருஷங்களும் என்னைச் சம்சார பந்தத்திற்குப் பணயப் பொருளாக்கி விட்டன. எனக்குக் கல்யாண வயது வந்து விட்டதாக என்னுடைய தகப்பனார் துடி துடித்தார். அந்தச் சமயம் 'அவரை'ப் பற்றிய ஞாபகம் எங்களுக்கு உண்டாகவில்லை. வேறு ஏதேதோ வரன்கள்தான் ஆலோசனைக்கு வந்து தட்டிக் கழிக்கப்பட்டன. என்னைப் பிடிக்கவில்லை என்று மட்டும் யாரும் குறை கூறி மறுக்க முன்வரவில்லை. 'கொடுக்கல் வாங்கல்' விஷயத்தில் இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட அதிருப்தியால் எல்லாம் விலகிக் கொண்டு வந்தன. என்னுடைய வாழ்க்கை முடிச்சு 'அவருடன்' பிணைக்கப்பட வேண்டும் என்பதாகப் பிராப்தம் இருக்கும்போது மாறிப் போய்விடுமா?

நான்தான் மணப்பெண் என்று ஒரு நாளும் எனக்குள் தோன்றியதில்லை. கல்யாணப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் போது உண்டாகும் கூச்சமும் பரபரப்பும் கொஞ்சநேரந்தான் என்னிடம் நிலைத்திருக்கும். வெகு சீக்கிரத்திலேயே எனக்கு எல்லாம் சகஜமாகி விட்டாற் போல் தோன்றும்! ஆனால் 'அவரை'ப் பார்த்த மாத்திரத்திலேயே என்னுடைய விளையாட்டுப் புத்தியெல்லாம் எப்படியோ இருந்தவிடம் தெரியாமல் மறைந்து கொண்டனவோ தெரியவில்லை!

3

நான் 'அவரை'ச் சந்தித்த கதையையும் கூறி விடுகிறேன்.

என்னுடைய தகப்பனாருக்கு உற்சவங்கள், திருவிழாக்கள் என்றால் போதும்; மோட்ச சாம்ராஜ்யத்திற்கு அவைகளே குறுக்குப் பாதைகள் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தவர். எந்த ஊரிலாவது விசேஷ தினம் என்றால் 'ஆபீஸில்' கூத்தாடியாகிலும் 'லீவு' சம்பாதித்து விடுவார். எங்களையும் அழைத்துக் கொண்டு குறிப்பிட்ட புண்ணிய க்ஷேத்திரங்களில் ஆஜராகி விடுவார். நாங்கள் அவருடன் இல்லா விட்டால் உற்சவங்கள் அவருக்கு ரஸமற்றுப் போய்விடும்!

அந்த வருஷம் கும்பகோணத்தில் மஹாமகம். மஹாமக ஸ்நானம் லேசில் கிடைக்கக் கூடிய பிராப்தமா? ஒரு தடவை தவறி விட்டால் மறுபடியும் பன்னிரண்டு வருஷங்கள் அல்லவோ காத்துக் கொண்டு கிடக்க வேண்டும்? அந்தப் பன்னிரண்டு வருஷங்களில் எது எப்படியோ? யார் கண்டார்கள்? நான் பெரியவளாகி விட்டதையும் பொருட்படுத்தாமல் என்னையும் அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டார் அப்பா.

பதினைந்து நாட்கள் வரை நாங்கள் கும்பகோணத்திலேயே ஐக்கியமாகி இருந்தோம். சுற்று வட்டாரங்களில் ஒரு ஸ்தலத்தையும் பாக்கிவிடவில்லை. கடைசியில் என்னுடைய தகப்பனாருக்கே அலுத்துப்போய் ஊருக்குத் திரும்பிப் போய் விட வேண்டியதுதான் என்று தோன்றும்படியான நிலை ஏற்பட்ட பிறகுதான் கும்பகோணத்தை விட்டுப் புறப்பட்டோம்.

ரயில் பிரயாணத்தின் போது தான் அந்தச் சுபவேளையும் ஜனித்தது.

மஹாமகக் கூட்டம் கரைந்து விட்டிருந்த போதிலும் வசதிக்குறைவு தென்படாமலில்லை. பிரயாணிகளின் சாமான்களே வண்டியை அடைத்துக் கொண்டு கிடந்தன. ஓடும் ரயிலில் நின்று கொண்டு பிரயாணம் செய்ய வேண்டும் என்கிற என்னுடைய நெடுநாளைய மனோபீஷ்டம் பூர்த்தியாகக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டுவிட நான் விரும்பவில்லை. ஆகையால் நான் நின்று கொண்டு வர சம்மதித்து விட்டேன்.

சிறிது நேரம்தான் என்னால் நின்று கொண்டிருக்க முடிந்தது. உற்சவத்தின்



அந்தக் காலத்திலே..

டி. ஜி. பத்ருஸ்வாமி

கிருஷ்ணஸ்வாமியும் ரங்கநாயகியும் ஸினிமாவுக்குப் புறப்படத் தயாராக நின்று கொண்டிருந்தார்கள். அன்று வெள்ளிக்கிழமை யானபடியால் குத்து விளக்கைத் தேய்த்து எண்ணெய் வார்த்துக் குங்குமமிட்டுப் பூஜை அறையில் ஏற்றிவைக்க நான் கூடத்திற்கு வந்தேன்.

என்னைக் கண்டவுடன், ''மாமி...... உங்கள் பிள்ளை......'' என்று இழுத்தாள் ரங்கநாயகி. மேலே சொல்ல வந்த வார்த்தைகளை விழுங்கத் தூண்டிய உணர்ச்சி அவளுடைய முகத்தின் கவர்ச்சியைப் பெருக்கிக் காட்டிற்று.

''பாதியிலேயே நிறுத்தி விட்டாயே, ரங்கா. நீயே சொல்லக்கூடாதா? ...... அம்மா, ரங்கம் உன்னையும் ஸினிமாவுக்கு அழைத்து வரச் சொல்லுகிறாள். தனியாக என்னுடன் வருவதற்கு அவளுக்கு வெட்கமாக இருக்கிறதாம்'' என்று மனத்தில் பொங்கி வந்த மகிழ்ச்சியை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சொன்னான் கிருஷ்ணஸ்வாமி.

இருவருடைய கோரிக்கைகளையும் கேட்டபொழுது நான் என்ன பதில் சொல்லுவது?

'சின்னஞ் சிறுசுகள்தானே? வெட்கமாக இராதோ?...அவர்களுடைய விளையாட்டில் நானும் கலந்து கொண்டு சுயேச்சையான மனப் பண்பிற்கு இடையூறாக இருக்க வேண்டுமா, என்ன?' என்று என் மனம் இடித்துக் கூறியது. சரி, போகலாம்'' என்று சொல்ல வந்தவள் உடனேயே மாற்றிக் கொண்டு விட்டேன்.

''வேண்டாம் அம்மா, ரங்கம்! நீங்கள் இரண்டு பேரும் போய் வாருங்கள். நான் கிழவி. என்னால் அலைச்சல் தாள முடியவில்லை'' என்று கூறினேன்.

ரங்கநாயகி சற்றுத் தயங்கி நின்றாள். புருஷர்களின் விவகாரம்தான் தெரிந்ததாயிற்றே! ஆட்டத்திற்கு நேரமாகி விட்டது என்று அவளை அவசரப்படுத்தி அழைத்துக் கொண்டு வெளியேறி விட்டான் கிருஷ்ணஸ்வாமி.

அவர்கள் இருவரும் சென்றதும் என் உள்ளம் பெரும் சுமையைத் தட்டிக் கழித்துவிட்டது போல் பெருமிதம் அடைந்தது.

'வயதுக் காலத்தில் தானே நான்கையும் அநுபவிக்கத் தோன்றும்? ரங்கநாயகி பைத்தியக்காரப் பெண். மனத்தில் கொள்ளை கொள்ளையாக ஆசைக் கோட்டைகளை கட்டிக் கொண்டு என்னையும் அழைத்து விட்டாளே! நானும் அவர்களுடன் இருந்தால் எவ்வளவு பாதிக்கும்! என் முன்னிலையில் அவர்களால் வாய் விட்டு—மனம் விட்டுப் பேசிக் கொள்ள முடியுமா?'

அட பாவமே! என்னென்னவோ யோசனைகளில் மூழ்கி விளக்கேற்றவே மறந்துவிட்டேனே!

• • •

ஆமாம்; அந்தக் காலத்தில்—நான் என்னுடைய மாமியாருக்கு மாட்டுப் பெண்ணாக இருந்தேனே, அப்போதைய ஞாபகம், எவ்வளவுதான் துன்பம் தோய்ந்திருந்த போதிலும் எனக்கு அவை கசப்பதில்லை!

என்னுடைய தகப்பனார் முனிஸிபல் ஆபீஸ் குமாஸ்தா. இப்போது இருப்பதைப் போல் அந்தக் காலத்தில் பஞ்சப் படி வகையறுக்கள் ஒன்றும் கிடையாது. மாதம் முதல் தேதி பிறந்தவுடன் நாற்பது ரூபாய் சம்பளமாக வந்து விடும். அதுவே லட்சம் ரூபாய் சம்பாதிப்பது

உன்னத நிலைமையிலிருக்கும் ஜில்லா கலெக்டர் மனைவி கூடத் தன் குழந்தை “அப்பாவைப் போல் நான் கலெக்டர் ஆவேன்” என்றால் அதைக் கேட்டு அஞ்சுவாளே தவிர ஆனந்திப்பதில்லை!

ரிவினியூ இலாகாவில் வேலை செய்பவருக்குச் சாதாரண வருஷங்களில் 365 நாட்களும், ‘லீப்’ வருஷத்தில் 366 நாட்களும் ஓய்வின்றி வேலைதான். பிரதி மாதமும் 3-வது சனி ஓய்வுநாள் என்று சர்க்காரால் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது ரிவினியூ இலாகாவுக்கு அல்ல. இதற்கு எல்லாச் சனிக்கிழமையும் வேலைதான். ஞாயிறு விடுமுறை என்று காலண்டரில் அழகாகச் சிவப்பு நிறத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது கடைகளுக்கும் மில் முதலியவைகளுக்குமே என்று நான் நினைக்கிறேன். எல்லாப் பண்டிகைகளுக்கும் விடுமுறை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அது பள்ளிக்கூடங்களுக்கேபோதும். கோடையா, மழையா, பனியா, வெள்ளமா ஒன்றும் இந்த ரிவினியூ இலாகாவுக்கு ஓய்வு கொடுப்பதில்லை. சரி, எட்டு மணி நேரம் வேலை செய்தால் போதும் என்று ஒரு சட்டம் இருக்கிறதே, அதாவது இந்த இலாகாவுக்கு உண்டா? கிடையாது.

ஆம்; சரீரத்திற்குத்தான் இந்த இலாகாவிலுள்ளவர்களுக்கு ஓய்வில்லை என்றால், மனதிற்காவது நிம்மதி உண்டா?

எந்த மந்திரி வந்தாலும் ரிவினியூ இலாகா உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் என் ஆஜராக வேண்டும்? “வைத்திய மந்திரியல்லவோ வருகிறார், நான் ஏன் போக வேண்டும்?” என்று ரிவினியூ இலாகா அதிகாரி ஒருவர் சொல்ல முடியுமா? எல்லா மந்திரிகளும் வரும்போது இவர்கள் ஆஜராவதுமல்லாமல், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு டக், டக்கென்று பதில் சொல்ல எல்லா விஷயங்களும் அறிந்து தேர்ந்தவர்களாய் அங்கு நிற்கவேண்டும். இந்த இலாகாவிலுள்ள என். ஜி. ஓ. என்னும் உத்தியோகஸ்தர்களின் பணக் கஷ்டத்திற்கு ஓர் அளவுண்டா? இந்தியாவின் எதிர்கால மக்களாக வேண்டிய தம் சிறு குழந்தைகளைப் படிப்பிக்கவும், உண்பிக்கவும், உடுப்பிக்கவும் முடியாமல் இந்த இலாகா அதிகாரிகளின் குடும்பங்கள் தவிப்பதை எங்கும் காணலாம். எழுத எழுதக் கதை நீண்டுகொண்டே போகும். ஆகையால் இத்துடன் முடிக்கிறேன். ரிவினியூ இலாகாவில் வேலை பார்ப்பவரின் மனைவி தன் குழந்தைக்கு “என் அப்பா வேலைக்குப் போவேன்” என்று கூறச் சொல்லித்தரமாட்டாள் என்று நான் உறுதியாகச் சொல்லுவேன்.

ஒரு தாசில்தாரின் மனைவி

கேள்விகள்



இந்த வருடம் மார்ச் மாதம் 15உ யிலிருந்து நடைபெற்ற எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் கேள்வித் தாள்களில் கேள்விகள் சரியானபடி புரிந்து கொள்ள முடியாதவாறு குறிக்கப்பட்டிருந்தன.

உதாரணமாகக் கணக்குக் கேள்வித் தாளில் கொடுக்கப்பட்ட வரிவடிவ(Graph)க் கணக்கும் ஜியோமதி (Geometry)க் கணக்கும் சரியானபடி புரிந்து கொள்ள முடியவில்லை. அதுவுமன்றி கவர்ன்மெண்டாரால் சப்ளை செய்யப்பட்ட வரி வடிவத்திற்கான தாள் ரொம்பவும் கீழ்த்தரமானது. சாதாரணமாக வரிவடிவத் தாளில் கோடுகள் சிகப்பு மையினால் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் கொடுக்கப்பட்ட அந்தத் தாளில் ஒன்றும் வித்தியாசம் இல்லாமல் போடப்பட்டிருந்தது. அதனால் அவற்றை எண்ணிப் போட நேரம் செலவழிந்தது. சாதாரணமாகக் கணக்கில் மிகக் குறைவாக மார்க்குகள் வாங்கும் பையன்கள் வரிவடிவும், ஜியோமதி இவற்றையே நம்பிச் செல்லுவார்கள். ஜியோமதிக் கணக்கும் புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டதனால் முதலில் இவ்வகையான கணக்குகளை எடுத்துக் கொண்ட மாணவர்கள் முதலிலேயே நம்பிக்கை இழந்து விட்டார்கள். அதன் பிறகு அவர்கள் கேள்வித்தாள் முழுவதும் விடை எழுத முடியாமற் போய்விட்டது.

இரண்டாவதாக, பூகோள சாஸ்திரக் கேள்வித் தாளில் தேசப் படப் பிரிவில் அவர்கள் ஒன்றைக் குறிக்கச் சொல்லிவிட்டு அவர்களாக வேறு என்னமோ இடங்களையெல்லாம் நிறையக் குறித்து வைத்து விட்டார்கள். அதனால் எங்களுக்குச் சரியாகத் தெரிந்திருந்த இடங்களையும் தவறாகக் குறிக்கும்படி செய்து விட்டார்கள்.

மூன்றாவதாக, விஞ்ஞானத் தாளிலோ தமிழின் மொழிபெயர்ப்புச் சொற்கள் எங்களுக்குத் தெரியாதவைகளாகவே இருந்தன. அதற்காக ஆங்கிலத் தாள் கேட்டாலோ அரை மணி நேரம் கழித்துக் கொடுத்தார்கள். இதனால் குறித்த நேரத்தில் விடை எழுத முடியவில்லை. மொழிபெயர்ப்புச் சொற்களை அரசாங்கத்தார் குறித்து அவைகளையே ஆசிரியர்கள் உபயோகிக்கவேண்டும்.

இவற்றையெல்லாம் எஸ். எஸ். எல். ஸி. போர்டார் கவனித்து அடுத்து வரும் எங்களது சகோதரர்களுக்கு இவ்வித இடையூறுகளில்லாமல் செய்வார்களா?

ரா. சுந்தரேசன்

★ ‘குடும்பப் புலம்பல்’ என்ற கடிதமும், ‘அப்பா வேலை...!’ என்ற கடிதமும் எழுதிய சகோதரர்களுக்கு ம. ஆ. பரிசுத் தொகை ரூ. 25-ஐ ரூ. 12—8—0 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது. அவர்களுடைய விலாசம் வெளியிடுவது உசிதமல்ல என்று வெளியிடவில்லை.

மதராஸ், மதுரை, அருப்புக்கோட்டை, கரூர் என்று எங்களை மாற்றிக் கொண்டிருந்தால் நாங்கள் என்ன செய்வது?

குழந்தைகளை எப்படிப் படிக்க வைப்பது? ஒரு ஊரிலிருந்து மாற்றினதும், அங்கே வீடு தேடுவதற்குள் இன்னொரு ஊருக்கு மாற்றி விடுகிறார்கள்! நாங்கள் எப்பொழுதுதான் குடும்பம் நடத்துவது?

குழந்தைகள் படிக்கும்போது பாதி வருஷத்திலேயே மாற்றிவிடுகிறார்கள்! சொச்ச முள்ள பாதி வருஷத்திய படிப்பை எப்படி அவர்கள் படிப்பது? எங்கள் வாழ்நாள் பூராவுமே இந்தமாதிரி வீடு தேடுவதிலேயே கழிந்துவிடும் போலிருக்கிறது. தயவு செய்து எங்களுக்குப் போகும் இடங்களில் ஒரு குடிசையாவது தங்குவதற்குக் கொடுத்தால் அதில் கஞ்சி காய்ச்சிக் குடிப்போம். எங்களைக் கோடை லீவின் சமயத்தில் மாற்றினால் குழந்தைகளுக்குப் படிப்புக் கெடாமல் இருக்கும். சில ஊர்களில் இரண்டு மாதத்திலேயே மாற்றிவிடுகிறார்கள். இந்தமாதிரி எத்தனையோ குடும்பங்கள் அவதிப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் சர்க்கார் ஒரு வழி செய்யவேண்டும். நாங்கள் குழந்தைகளை அனாதை விடுதியில் சேர்க்க முடியுமா? அல்லது குடும்ப வாழ்வைத் துறந்து சந்நியாசம்தான் வாங்கிக் கொள்ள முடியுமா?

இதற்கெல்லாம் வழிசெய்ய முடியாவிடில், இனியாவது இந்த டிபார்ட்மெண்டில் பிரம்மசாரிகளைத்தான் வேலைக்கு வைத்துக் கொள்வது என்று ஏற்பாடு செய்யுங்கள்.

ஒரு ஆடிட்டரின் மனைவி

○●○

வது தட்சிணை

மார்ச் 19-ந் தேதி "கல்கி" இதழில் காரைக்குடி சகோதரியின், 'வரதட்சிணைப் பேய் ஒழியாதா?' என்ற கடிதத்தைப் படித்தேன். அவரது வகுப்பிலிருந்து வரும் இக் கொடிய வழக்கத்தைப் போல என் வகுப்பிலும் (அர்ச்சகர்கள்) ஒரு வழக்கம் இருந்து வருகிறது. அதென்ன வென்றால் கல்யாணம் செய்து கொள்ளப் போகும் ஆண்கள் பெண் வீட்டாருக்குப் பணம் கொடுக்கும் வழக்கம். இதை 'வது தட்சிணை' என்று கூறலாம்! இம்முறையில் என்னுடைய கல்யாணமும் இரு வருடங்களுக்கு முன் நடந்தது. கூடுமான வரை அரசாங்கம் இந்தத் தட்சிணைகளை ஒழிக்க வேண்டும். இல்லையேல் நம் நிதி மந்திரியார் இம்மாதிரி தட்சிணை வாங்குபவர்களுக்கு ஒரு வரியாவது விதிக்க வேண்டும்! ஆனால் வரதட்சிணை வாங்குபவர்கள் அந்த வரியையும் பெண் வீட்டாரிடம் வாங்கி, பெண் வீட்டாருக்கு மேலும் தொல்லை கொடுக்காதிருக்கக் கனம் மந்திரி ஏற்பாடு செய்ய வேண்டும்!

வரதட்சிணை பற்றி இன்றைய அளவில் எண்ணற்ற காவல்களும், கதைகளும் எழுதப் பட்டு, படிக்கப்பட்டு அலுத்துப் போய் விட்டன. ஆனால் சமூகம் அதைத் திருத்த முற்படவில்லை. ஆகவே, அரசாங்கம் சட்ட பூர்வமாக இந்தப் பேயை விரட்டியடிக்க வேண்டும். இதற்காக அரசாங்கம் பணம் செலவழித்தால், அந்தப் பணம், இந்திய இளம் பெண்களின் வாழ்க்கையைச் சீர்படுத்துவதற்குச் செலவழித்த பணமாகும். மது விலக்கைக் கொண்டு வந்து மக்களைச் சீர்படுத்தி ஓரளவு வெற்றி பெற்று நம் மாகாணம் புகழைத் தேடிக் கொண்டது போல், மது அரக்கனின் தன்மைக்கு ஒப்பான இந்த வரதட்சிணைப் பேயை ஒழித்துச் சகோதரிகளைக் காப்பாற்ற வேண்டும்.

குர்ச்சி
20—3—50

ஏ. முத்து

○●○

★ "அப்பா வேலை!......."



தாய் அடிக்கடி, தன்னை மழலைச் சொல்லால் மகிழ்விக்கும் பாலகனைக் கூப்பிட்டு, "நீ வளர்ந்து பெரிய மனிதனாகும் போது என்ன வேலைக்குப் போவாய்?" என்று கேட்பாள். இந்தக் கேள்விக்குக் குழந்தை சொல்லும் பதில் எல்லாருக்கும் தெரியும். "நான் வளர்ந்த பிறகு அப்பா பார்க்கும் வேலைக்குப் போவேன்" என்று கூறும் குழந்தை. இக்கேள்வியை அடிக்கடி குழந்தையிடம் கேட்டு இப் பதிலையும் சொல்லிக் கொடுத்து அதற்கு மனப்பாடம் பண்ணி வைத்திருப்பது தாய்தான். ஆயினும் குழந்தை அந்தப் பதிலைச் சொல்வதில் தாய்க்கு ஒரு பெருமை, ஒரு திருப்தி, ஓர் ஆனந்தம்! வீட்டிற்கு வரும் விருந்தினரிடமும் குழந்தையைக் கூப்பிட்டு அக் கேள்வியைக் கேட்கச் சொல்லுவாள். வருகிறவருக்கும் குழந்தை "நான் அப்பாவைப் போல் டாக்டர் வேலை பார்ப்பேன் அல்லது அப்பாவைப் போல் உபாத்தியாயராவேன்" என்றும் பதிலைச் சொல்லும். தாய்தான் அதற்கு அதைக் கற்றுக் கொடுத்திருக்கிறாள் என நன்கு அறிந்திருந்தும், குழந்தையைத் தட்டிக் கொடுத்து, "என்ன சமர்த்துக் குழந்தை, அப்பாவைப் போல ஆக நகவான் கருணைபுரிவாராக!" என்று ஆசீர்வதிப்பார்கள்.

இது எல்லாக் காலங்களிலும் எல்லா வீடுகளிலும் நடக்கும் சம்பவந்தான். ஆயினும் தற்காலத்தில் ரீவினிபூ இலாகாவில் வேலை பார்க்கும் ஒருவருடைய மனைவியாவது தன் குழந்தைக்கு இந்தப் பதிலைச் சொல்லிக் கொடுத்து, அதைக் கேட்டு மகிழ்வதில்லை என்பது திண்ணம். அந்த இலாகாவில் மிக



திகைப்படைந்தேன்



'கல்கி'யின் 19—3—50 இதழில் இலங்கைக் கடிதத்திலே, "தாபம் போடுகிறார்!" என்ற தலைப்பில் வெளி வந்திருக்கும் விஷயத்தைக் கண்டு திகைப்படைந்தேன்.

6—2—49-ல் வெளியான இலங்கைக் கடிதத்தில், "இலங்கை இந்தியர்கள் இனி தம்மை என்றுமே மறக்க முடியாதபடி செய்து கொண்டிருக்கிறார் மாஜி மந்திரி ஸ்ரீ வி. சுந்தரலிங்கம். இந்தியர் பிரஜா உரிமை மசோதா ஜனப் பிரதிநிதி சபையில் மூன்றாவது முறையாக நிறைவேற்றப் படுகையில், அவர் கொண்டு வந்த திருத்தங்களும் எழுப்பிய ஆட்சேபனைகளும் மந்திரிகளைத் திணற அடித்தன......ஆனால், ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம், ஸ்ரீ கே. கனகரத்தினம் ஆகிய இரு தமிழ் மந்திரிகள் உள்பட சர்க்கார் கட்சி அங்கத்தினர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இந்தியர்களுக்குச் சரித்திரம் அறிந்திராத அநீதியை இழைக்கும் மசோதாவை மூன்றாம் முறையாகவும் நிறைவேற்றி விட்டனர்" என்று ஸ்ரீ சுந்தரலிங்கத்தைப் பாராட்டி எழுதிய 'ரஜனி' இப்போது அவர் மீது புகார் கூற முற்பட்டதைப் பலமாகக் கண்டிக்கின்றேன்

தமிழ் புரோகிராம் அதிகாரி சம்பந்தமாக ஸ்ரீ சுந்தரலிங்கம் பார்லிமெண்டில் கூறியவற்றை "வீண் ஆட்சேபனைகள்" என்று சொல்லிவிட முடியாது. செல்வி எலியாஸ் தமிழ் புரோகிராம் அதிகாரியாக நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து, இலங்கையிலுள்ள ஆங்கில, சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகள் யாவும் ஒரே முகமாக எழுதிய கண்டனக் குறிப்புகளையும், சங்கங்களும் சபைகளும் நிறைவேற்றிய கண்டனத் தீர்மானங்களையும் 'ரஜனி' அறியாரா? செல்வி எலியாஸ் சில வேளைகளிலே தமிழ் அறிவிப்பாளராகக் கடமையாற்றிய பொழுது அவருடைய தமிழ், மலையாளத் தமிழாயிருக்கிறதென்று கண்டிக்கப்பட்டதையும், அவர் பி. பி. ஸி. க்குத் தமிழ் உதவி அறிவிப்பாளராகப் போக முயன்றபோது அவரது தமிழ் மலையாளத் தமிழ் என்பதனால் அவர் போக முடியாமற் போனதையும் 'ரஜனி' அறியாமல் இருக்க முடியாது.

இலங்கையிலே—தமிழ் செழித்த யாழ்ப்பாணத்து மக்களிடையே—இந்தச் சிறிய பதவியை வகிக்க ஒரு ஆளைப் பிறந்தவர் இல்லை என்பதை எவரும் நம்பமாட்டார்கள்.

கொழும்பு
19—3—50 மு. திருநாவுக்கரசன்

○●○

மாணவர்களின் அழுகுரல்

இவ்வருடப் பரீக்ஷை வினாக்களைக் குறித்தவர்கள் யார் என்பது சற்று யோசிக்க வேண்டியிருக்கிறது. குறித்தவர்கள் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷைக்காகக் குறித்தார்களா அல்லது பி. ஏ. பரீக்ஷைக்குக் குறித்தார்களா என்று சிந்திக்க வேண்டியதாயிருக்கிறது. குறித்தவர்கள் இந்நாட்டைச் சேர்ந்தவர்களா அல்லது வேறு நாட்டிலிருந்து படித்து வந்து வினாக்களைப் பொறுக்கியிருப்பார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இத்தனை வருடங்களாக அனுஷ்டித்து வந்த வகை முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் நான்கு கேள்விகள், கணக்கின் வினாக்கள், சமஸ்கிருதத்தின் வினா எல்லாம் ஒரு விதமாகவே அமைந்திருக்கின்றன. இதை சர்க்காரே உணர்ந்து, மாணாக்கர்களின் கஷ்டத்தைப் பார்த்து, அவர்களுக்கு அவசியம் இரக்கம் காட்ட வேண்டும்.

திருச்சிராப்பள்ளி
22—3—50 ஒய். சேதுராமன்

○●○

★ குடும்பப் புலம்பல்

நான் ஒரு கூட்டுறவு சங்க டிபார்ட்மெண்டின் ஆடிட்டருடைய மனைவி. எனக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. நான் எட்டாவது வரை படித்திருக்கிறேன். ஹிந்தியில் ராஷ்ட்ரபாஷா பரீட்சை பாஸ் செய்து விட்டு ப்ரவேசிகா பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குக் கொஞ்சம் பாட்டும் தெரியும். பாட்டுப் பரீட்சைக்குப் போவதாகவும் உத்தேசம். உபாத்தியாயினியாக வேலைக்குப் போவதற்கு ஆவலாக இருக்கிறது. ஆனால் என் ஆவல்களுக்கு எத்தனையோ தடங்கல்கள்.

என் அகத்துக்காரருக்கு கோ-ஆபரேடிவ் டிபார்ட்மெண்டில் வேலையாகி இந்த வருஷங்கள் ஆகின்றன. அதற்குள் நாங்கள் பல ஊர்கள் சுற்றியிருக்கிறோம். திருச்சி, மணப்பாறை, குளித்தலை, அரியலூர்,

காரியத்தை மிச்சம் மிச்சம் வையாமல் செய்து முடிக்க வேண்டும்.

"ஏதோ சில படைகளைச் சில்லறையாக விட்டுப் பகைவரை வென்று விடலாம் என்று எண்ணுவது சரியான யோசனை அல்ல."

'பந்தியிற் பந்தியில்
படையை விட்(டு),அவை
சிந்துதல் கண்டுநீ
இருந்து தேம்புதல்,
மந்திரம் அன்று; நம்
வலியெ லாம்உடன்
உந்துதல் கருமம்'என்(று)
உணரக் கூறினன்.


[பந்தியிற் பந்தியிற் படையை விட்டு: சில்லறை சில்லறையாக நம்முடைய சேனைகளை அனுப்பி; அவை சிந்துதல் கண்டு: அவை ஒழிந்து போவதைக் கண்டு; நீ இருந்து தேம்புதல் மந்திரம் அன்று; நீ இந்த விதமாகச் சோர்ந்து உட்கார்ந்து வருந்துதல் சரியான செயலுக்கான யோசனை அல்ல; நம் வலியெலாம் உடன் உந்துதல் கருமம்: நம்முடைய பலத்தை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு முனைப் படுத்தி ஏவுதலே சரியான காரியம்; என்று உணரக் கூறினன்: என்று மனத்திற் தைக்கும் படியாகச் சொன்னான் கும்பகர்ணன்.]

ஒரு பாத்திரத்தில் பல தத்துவங்கள் கலந்தே கிடக்கும். முரண்பட்டவைகளும் கலந்து கிடக்கும். ஆனால் பாத்திரத்தை ஆட்டி வைக்கிற அடிப்படையான தத்துவம் ஒன்று இருக்கவே செய்யும். அது சில சந்தர்ப்பங்களில் மற்றத் தத்துவங்களை யெல்லாம் தள்ளி விட்டு மேலே வந்து நிற்கும். இது மனுஷ இயல்பு.

கும்பகர்ணனிடத்தில் அன்பு இருக்கிறது; சகோதர வாஞ்சை யிருக்கிறது; நேர்மை இருக்கிறது; நீதி யிருக்கிறது. இவைகளோடு வீர தத்துவமும் இருக்கிறது. வீர தத்துவமே அவனுக்கு அடிப்படையான தத்துவம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அதாவது, அரக்கர் குலத்துக்கு ஆபத்து வரக் கூடிய சந்தர்ப்பத்தில், அந்த வீர தத்துவமே மேலே வந்து நின்று தொழிற்படுகிறது.

பாத்திரம் வெகு அழகான உருவங் கொண்டு விளங்குகிறது.



கம்பர் தரும் காட்சி

டி.கே.சி

288. இல்லறை யுத்தம் கூடாது.

அரசியல் காரியங்களில் கும்பகர்ணன் ஒதுக்கப்பட்டவனாய்த்தான் இருந்தான். ஆனாலும் என்றும் இல்லாத தோல்வியுற்று மனம் இடிந்த நிலைமையில் என்ன செய்வான் ராவணன்? கும்பகர்ணனைக் கூப்பிட்டு விட்டான். அவனும் வந்தான்.

கும்பகர்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான் ராவணன்:—

"தம்பி! பார்த்தாயா எனக்கு வந்த தோல்வியையும் அவமானத்தையும்!

"அந்த மானிடரையும், குரங்குகளையும் யுத்தம் செய்து தொலைத்துவிட்டு வரவேணும் நீ!" என்று வீரமிழந்தவனாய், செயல் இழந்தவனாய்ச் சொன்னான் ராவணன்.

கும்பகர்ணன் இதுவரை, 'நாம் ராவணனது தம்பி, வீரத்துக்கு உரிய வர்க்கத்தைச் சேர்ந்தவன், நமக்கு யார் நிகர் உலகத்தில்!' என்ற எக்களிப்பில் இருந்தவன்.

ராவணனது தோல்வியையும் மனத்தாழ்வையும் பார்த்தபோது ஒன்றுமே ஓடவில்லை கும்பகர்ணனுக்கு.

முதலில் அவமானம் வந்தது. அதையொட்டிக் கோபமும் வருகிறது.

"வீரப் போர் இப்படியா முடிந்தது? ஆம்; சீதையின் துயரம் தீரவில்லையென்றால், இதுவும் இதற்கு மேலும் வரும்!"

ஆனதோ வெஞ்சமம்;
அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம்
தவிர்ந்த தில்லையோ,
வானமும் வையமும்
வளர்ந்த வான்புகழ்
போனதோ: புகுந்ததோ
பொன்றும் காலமே!

[ஆனதோ வெஞ்சமம்: வீரப் போர், வீரப் போர் என்று சொல்லிக் கொண்டிருந்தோமே, அதெல்லாம் இப்படியா முடிந்தது: அலகில் கற்புடை சானகி துயர்: யாராலும், ராவணன் அல்ல, வேறு யாராலேயுமே அசைக்க முடியாத திட சித்தம் கொண்ட சீதா தேவியின் மனக்கவலை; தவிர்ந்ததில்லையோ: இன்னும் தீர்ந்த பாடில்லைதானே; வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ் போனதோ: ராவணனுடைய புகழ் என்ன! இந்த இலங்கைக்குள் அடங்கியதா? எல்லா தேசத்தாரும் தேவர்களும் கூட வாயாரப் புகழ்ந்த காரியம் அல்லவா? அந்த உயர்ந்த புகழெல்லாம் ஒழிந்ததுதானோ; புகுந்ததோ பொன்றும் காலமே: இறந்தொழியும் காலமும் வந்துதான் விட்டதோ.]

∴

அவமானம், கோபம் இரண்டில் இருந்து ஒரு ஆத்திரம் பிறக்கிறது. அந்த ஆத்திரத்தில் கும்பகர்ணன் மேலும் சொல்லுகிறான் ராவணனைப் பார்த்து.

தையலை விட்டு, அவன்
சரணம் தாழ்ந்து, நின்
ஐயம் இல் தம்பியோ(டு)
அளவளாவுதல்
உய்திறம்; அன்றெனில்
உளது வேறும் ஓர்
செய்திறம்; அன்னது
தெரியக் கேட்டியால்.

[அவன் சரணம் தாழ்ந்து: சீதையின் கணவனுன ராமனது காலில் விழுந்து; நின் ஐயம் இல் தம்பியொடு அளவளாவுதல் உய்திறம்: யாதொரு சந்தேகத்துக்கும் இடமில்லாத விபீஷணனைச் சமாதானப் படுத்திப் பழைய உறவு கொண்டு வாழ்தலே பிழைக்கும் வழி என்று சொல்லுவேன்.

அன்றெனில் உளது வேறும் ஓர் செய்திறம்: இது உனக்குப் பிடிக்கவில்லையென்றால், நீ செய்யவேண்டிய காரியம் வேறொன்று இருக்கத்தான் செய்கிறது; அன்னது தெரியக் கேட்டியால்: அதைச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேள்.]

∴

"நல்ல காரியத்தைச் செய்வதே நல்லது. இல்லையென்றால், செய்கிற


வக்கீல்கள் கவனிக்க!
வக்கீல்கள் எதிர்க்கட்சியில் ஆஜராகும் வக்கீல்களைத் தங்களுடைய விரோதிகளாக நினைந்துக் கொள்வதால் பரஸ்பரம் ஆத்திரம் ஏற்பட்டு விடுகிறது என்றும், அது வக்கீல் சமூகத்தின் கௌரவத்துக்கு ஏற்றதல்ல என்றும் சென்னை ஹைகோர்ட் பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னார் விசாகப் பட்டினம் வக்கீல்கள் சங்கத்தில் கூறினார்.
சுக்குச் செட்டியாரும், மிளகுச் செட்டியாரும் சண்டை போட்டுக் கொண்டு, வக்கீல்கள் பிழைக்க வேண்டுமே என்று, தங்கள் சண்டையை கோர்ட்டுக்குக் கொண்டு போனார்கள்.
இவர்களுக்காக வாதிக்க இரு காப்பு வக்கீல்களும் இதைத் தங்கள் சொந்தச் சண்டையாகப் பாவித்து ஒருவரை யொருவர் பகைத்துக் கொண்டார்கள். சண்டை முற்றவே, பரிதாபங் கொண்ட கட்சிக்காரர்கள்....
...அவர்களை விலக்கி விட்டுச் சமாதானப் படுத்தி அனுப்ப வேண்டியதாயிற்று!

டிருப்பதாகப் பிரதம மந்திரி மேலும் தெரிவித்தார். தேர்தல் சட்டத் திருத்த மசோதா இப்பொழுது பிரகடனம் செய்யப்படாதென்றும் பார்லிமெண்டிலுள்ள இந்திய அங்கத்தினர்கள் இந்தப் பார்லிமெண்டின் ஆயுட்காலம் வரை சபையிலிருக்க அனுமதிக்கப் படுவார்களென்றும் அவர் சொன்னார்.

சர்க்கார் மசோதா தோற்றது

இன்று ஜனப் பிரதிநிதி சபையில் அரசியல் திட்டத் திருத்த மசோதாவை மூன்றும் முறையாக நிறைவேற்றப் பிரதமர் பிரேரித்தார். மசோதாவுக்குச் சாதகமாக 48 ஓட்டுகளும் பாதகமாக 29 ஓட்டுகளும் கிடைத்தன. இதுமாதிரி மசோதாவுக்கு மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களின் ஓட்டு வேண்டுமாதலால் மசோதா நிறைவேறவில்லை. இலங்கையர்களுக்குப் பார்லிமெண்டு மெம்பர்களாகும் உரிமையளிக்காத தேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலங்கைப் பார்லிமெண்டிலும் இடமில்லாமல் செய்வதுதான் மசோதாவின் இலட்சியம். இம் மசோதா நிறைவேறாமல் போன பொழுதிலும் சர்க்காரின் இலட்சியம் வெற்றி பெறாமற் போகவில்லை. ஏனெனில் ஏற்கெனவே நிறைவேறியுள்ள தேர்தல் சட்டத் திருத்த மசோதாவின்படி இலங்கையரல்லாதார் எவரும் அடுத்த பார்லிமெண்டில் மெம்பர்களாக முடியாது. இலங்கையர்களுக்குப் பார்லிமெண்டு மெம்பர்களாகும் உரிமையளித்துள்ள பிரிட்டனைச் சேர்ந்தவர்களும் இனி இலங்கைப் பார்லிமெண்டில் மெம்பர்களாக சர்க்காரால் நியமிக்க முடியாது.

ஜாமீனையும் இழந்தார்!

மஸ்கெலியா தொகுதியின் பார்லிமெண்டு ஸ்தானத்துக்கு நடந்த உபதேர்தலில் போட்டியிட்ட ஜனாப் அப்துல் அஸீஸ் பதினாயிரத்துக்கு மேற்பட்ட அதிக ஓட்டுகளுடன் வெற்றிபெற்றார். அவரை அபேட்சகராக இந்திய காங்கிரஸ் நிறுத்தியிருக்கையில் காரியக் கமிட்டி அங்கத்தினராயிருந்தவர்களில் ஒருவரான ஸ்ரீ ஜி. ஆர். ராஜப்பிரியர் என்பவரும் காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறிப் போட்டியிட்டார். கட்டுப்பாட்டை மீறிய மேற்படி நபருக்கு இந்திய ஓட்டர்கள் நல்ல பாடம் கற்பித்து விட்டார்கள். ஸ்ரீ ராஜப்பிரியர் தோல்வியடைந்ததோடு ஜாமீன் தொகையைக் காப்பாற்றிக் கொள்ளும் அளவுக்குக்கூட அவருக்கு ஓட்டுகள் கிடைக்கவில்லை.

தமிழர்களுக்குப் பெருமை


தமிழர்கள் பெருமையடையக் கூடிய இரண்டு சம்பவங்கள் இங்கு நிகழ்ந்துள்ளன. ரேடியோ ஸிலோனில் புரோகிராம் கண்ட்ரோலர் பதவியில் ஸ்ரீ எஸ். சிவபாதசுந்தரம் நியமிக்கப் பட்டு ஆக்டிங் கண்ட்ரோலராக உத்தியோகம் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த உயர் பதவியில் ஒரு தமிழர் நியமிக்கப் படுவது இதுவே முதல் முறை. இதுவரை இப்பதவி பறங்கிகள் அல்லது சிங்களவர்களிடமே இருந்து வந்திருக்கிறது. கொழும்பு ரேடியோ நிலையத்தில் தமிழ்ச் செய்தி அறிவிப்பாளராயிருந்த ஸ்ரீ சிவபாத சுந்தரம் லண்டனுக்குச் சென்று பி. பி. ஸி. யில் இரண்டு வருஷம் பயிற்சிபெற்று சென்ற மாதம்தான் இலங்கைக்குத் திரும்பி வந்தார்.

இரண்டாவதாக, இலங்கை அரசாங்க ரயில்வேயின் ஜெனரல் மானேஜராக ஸ்ரீ எம். கனகசபை நியமிக்கப் பட்டிருக்கிறார். இலங்கையில் ரயில் போக்கு வரத்து ஏற்பட்ட நாள் முதல் இன்று வரை இப்பதவி பிரிட்டிஷாரின் ஏகபோக உரிமையாயிருந்து வந்தது. அதில் ஒரு இலங்கையர், அதிலும் தமிழர் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். ஸ்ரீ கனகசபை ரயில்வேயில் 1917-ம் வருஷம் ஒரு சாதாரண குமாஸ்தாவாகச் சேர்ந்து படிப்படியாக இந்த உயர் பதவியை அடைந்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

கடற்படை வீரர்களுக்கு உபசாரம்

சமீபத்தில் கொழும்புக்கு வந்த 11-வது இந்திய நாசகாரிக் கடற்படையின் அதிகாரிகள் அடங்கிய கூட்டத்தில் ஸ்ரீ வி. வி. கிரி பேசியபோது, "ஏன், எதற்காக என்று கேளாமல் மேலிடத்தின் உத்தரவுகளை நிறைவேற்றி வைக்கும் மன உறுதியுடன் இந்தியக் கடற்படை வீரர்கள் சேவை புரிந்து இந்தியாவின் கௌரவத்தை உயர்த்துவதோடு இந்தியாவுக்குச் சர்வதேசப் புகழையும் சம்பாதித்து வைக்க வேண்டும்" என்றார். இந்திய கடற்படை வீரர்களுக்கு இலங்கையில் ராஜோபசாரங்கள் நடைபெற்றன. இந்தியன் கிளப் ஒரு சிற்றுண்டி விருந்து அளித்தது. மாலுமிகளை இலங்கையர்கள் போட்டா போட்டியிட்டுக் கொண்டு தங்கள் வீடுகளுக்கு அழைத்துப்போய் உபசரித்ததாயும் அதிதி உபசாரத்தில் இலங்கைக்கு நிகரான தேசத்தைத் தாம் கண்டதில்லையென்றும் கடற்படைத் தலைவர் காப்டன் சக்கரவர்த்தி பாராட்டினார்.

நியாயந்தானே?


குண்டு விலாஸ் ஹோட்டல்
ஸானிடரி இன்ஸ்பெக்டர் ஹோட்டல் பரிசோதனை செய்யக் கிளம்பினார். குண்டு விலாஸ் ஹோட்டல் முதலாளி அவருக்கு அமோகமான வரவேற்பு அளிக்கிறார்.....
அவர் பக்கத்தில் நின்று அவருக்கு உபசாரம் செய்தார். இன்ஸ்பெக்டர் பக்ஷணங்களை 'டபிள் டோஸ்' தின்று திருப்தி அடைந்தார்.
இன்ஸ்பெக்டர் சந்தோஷத்துடன் குண்டு விலாஸ் ஹோட்டலைப் பற்றி நல்ல 'ரிப்போர்ட்டு' தயாரித்து, அனுப்பினார்.
பிறகு ஹோட்டல் பக்ஷணம் வேலை செய்ய ஆரம்பித்தது. டாக்டர் சிகிச்சை நடந்தது. சிகிச்சை எல்லாம் முடிந்த பிறகு டாக்டர் பில் குண்டு விலாஸ் முதலாளிக்குப் போய்ச் சேர்ந்தது! நியாயந் தானே?
—சாமா—

தோல்வியில் வெற்றி!

ரஜனி

கொழும்பு, மார்ச், 21—

இலங்கை இந்தியக் காங்கிரஸின் ஜில்லாக் கமிட்டிகள் புதிய நிர்வாகிகளையும் மத்திய ஸ்தாபனத்தின் நிர்வாக சபைக்குப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்து வருகின்றன. ஐந்தாறு ஜில்லாக் கமிட்டிகளின் கூட்டங்கள் ஏற்கெனவே நடந்து விட்டன. மற்றவைகளின் கூட்டங்கள் சமீபத்தில் நடைபெறும். பிறகு காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அடுத்த வருஷத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். ஏப்ரல் கடைசி வாரத்தில் காங்கிரசின் பத்தாவது வருஷ மகாநாடு மாத்தளை நகரில் நடைபெறுகிறது. இவ்வருஷம் அக்கிராசனராயிருக்கும் ஸ்ரீ கே. ராஜலிங்கம் அவர்களே அடுத்த வருஷத்துக்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவார் என்று தெரிகிறது.

மாத்தளை மகாநாட்டை இந்தியர்கள் மட்டுமல்லாமல் சிங்களவர்களும் ஆவலோடு எதிர்பார்த்து வருகிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. சென்ற வருஷம் ஹட்டனில் நடந்த ஒன்பதாவது வருஷாந்திர மகாநாட்டில்தான் இலங்கை அரசாங்கம் இயற்றியிருக்கும் பிரஜா உரிமைச் சட்டம் அநியாயமானதென்றும் அதில் நியாயமான திருத்தங்கள் செய்யும் வரையில் அதைப் பகிஷ்கரிப்பதென்றும் தீர்மானிக்கப் பட்டது. அதன் பிறகு ஒரு வருஷம் முடிந்தும் இலங்கை அரசாங்கம் அசைந்து கொடுக்கக் காணோம். காங்கிரசைத் திருப்திப் படுத்தக்கூடிய திருத்தங்கள் வரப்போவதாகப் பிரமாதமாகப் பேச்சுகள் அடிபட்ட பொழுதிலும் கடைசியில் எல்லாம் புஸ்வாணம் போல் ஆகி விட்டது.

செய்யப் போவதென்ன?

இதற்கிடையில் குடியேற்ற வெளியேற்றச் சட்டத்தை அரசாங்கம் கடுமையாக அமுல் நடத்தி ஆயிரக்கணக்கான இந்தியர்களை மறைமுகமாக வெளியேற்றிக் கொண்டிருக்கிறது. சென்ற வருஷம் இந்தியர்களுக்குச் செலாவணிக் கட்டுப்பாடுத் தொல்லை ஒன்றுதான் இருந்தது. இவ்வருஷம் குடியேற்ற சட்டத் தொல்லையும் சேர்ந்து கொண்டதால், நிலைமை மேலும் மோசமாயிருக்கிறது. சுமார் எண்ணூறு இந்தியர்கள் வரை குடியேற்றச் சட்டத்திற்குப் பயந்தும் வியாபார நிமித்தமாகவும் இலங்கையராகி யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையில் கூடும் காங்கிரஸ் மகாநாடு மேற்கொண்டு என்ன செய்யப் போகிறது? பிரஜா உரிமைச்சட்ட பகிஷ்காரத் தீர்மானத்தை வாபஸ் வாங்கி சர்க்காருடன் சமரசம் செய்து கொள்ளத் தீர்மானிக்கப் போகிறதா? இது சாத்தியமா? அல்லது பழைய தீர்மானத்தை மறுபடி ஊர்ஜிதம் செய்து போராட்டத்தைக் கடுமையாக நடத்தப் போகிறதா? இந்தக் கேள்விகளின் பதிலை அறிந்து கொள்ள இந்தியர்களைப் போலவே இலங்கையர்களும் மிகவும் ஆவலுடன் இருக்கிறார்கள்.

பிரதமர் கை விரித்தார்!

இலங்கை இந்தியர் பிரச்னை விரைவில் சமரசமாகத் தீர்ந்துவிடுமென்றும், இந்தியர் பிரஜா உரிமை மசோதாவுக்குப் பிரதம மந்திரி சில திருத்தங்களைக் கொண்டு வருவாரென்றும் இதுவரை இருந்து வந்த நம்பிக்கை இன்று சிதைந்து போய் விட்டது. இது விஷயமாகப் பிரதம மந்திரி இன்று பேட்டியளித்துப் பேசியபொழுது இந்தியர் பிரஜா உரிமைச் சட்டம் ஏற்கெனவே அமுலுக்கு வந்துவிட்டதென்றும், ஆகையால் அதைத் திருத்தும் உத்தேசம் சர்க்காருக்குக் கிடையாதென்றும் தெளிவாக அறிவித்தார். அதே சமயம் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்களுக்குச் சட்டப்படி மற்ற யோக்கியதாம்சங்களிருந்தாலும் அவர்கள் இலங்கையில் பிறந்தவர்களே தவிர இந்தியாவிலிருந்து வந்தவர்களல்லவாகையினால் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள முடியாமலிருக்கிறது. ஏனெனில் சட்டத்தில் இந்தியர்கள் என்ற வார்த்தைக்கு 'இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் வந்தவர்கள்' என்று வியாக்கியானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைத் திருத்தி இலங்கையிலேயே பிறந்தவர்களும் சட்டப்படி இலங்கையர்களாவதற்கு வசதி செய்ய சர்க்கார் ஆலோசித்துக் கொண்

தூக்கின. காந்திஜி கையைத் தூக்கி நெற்றியில் வைத்து வெளிச்சத்தை மறைத்துக் கொண்டு உற்றுப் பார்த்தார்.

“இப்பொழுது நன்றாகத் தெரிகிறது. நீர்தான் விநோபா பாவே. நான் நினைத்தது சரிதான். இன்னொருவர் யார்? வெளிச்சத்தை விட்டு மறைந்து நிற்கிறீரே! ஓ! பியாரிலாலா? நீங்கள் இரண்டு பேரும் தானே என்னை யாதொரு நிபந்தனையும் இன்றி வரவேற்கத் தயாராக இருக்கிறீர்கள்? உங்கள் இருவருக்காக இவ்வளவு பேரையும் தொல்லைப் படுத்திக் கொண்டு நான் ஏன் வரவேண்டும்? நீங்கள் இருவருமாவது வெகுகாலம் வாழ்ந்திருந்து என் கொள்கைகளைப் பரப்பிக் கொண்டிருங்கள்” என்று சொல்லிவிட்டுக் காந்திஜி நிலைக்குள் மறைந்து விட்டார்......

நேருஜி—நல்ல தூக்கத்தில் இருந்தவர்—கனவு கலைந்த கலக்கத்தில் விழித்துக் கொண்டு விட்டார். எழுந்து உட்கார்ந்தார். பரபரப்புடன், “பச்சு ஸிங்! எங்கே அப்பா ஸிகரெட்?” என்றார்.

“இதோ!” என்று சொல்லிக்கொண்டே பச்சு ஸிங் ஓடோடியும் வந்தான்.

அதே கணத்தில் என்னை யாரோ பலவந்தமாகப் பிடித்துக் குலுக்குவதை உணர்ந்தேன். கண் விழித்தேன்.

கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தால்—டெல்லி போலீஸ்காரன் கடைசியாக அவன் இடத்திற்கு வந்து அதிகாரம் செலுத்த ஆரம்பித்து விட்டான்.

“பாஹர் சலோ! யஹாம் க்யா காம் ஹை? சலோ!”

சொப்பன வைபவத்தை அவனுக்குச் சொல்ல வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆசையாயிருந்தது. ஆனால் அந்த ஆசையைத் தீர்த்துக்கொள்ள நான் கற்ற ஹிந்தி போதவில்லை. கைகளுக்கும் அவ்வளவு அபிநயம் பிடிக்கும் சக்தி இல்லை. எனக்குத் தெரிந்த அபிநயத்தை அவன் ரஸிப்பதாயும் இல்லை.

“அட மூட்டாளே! அந்த அற்புதத்தைக் கேட்க நீ கொடுத்து வைக்கவில்லையே!” என்று அவனைப் பார்த்துத் தமிழில் அனுதாபப்பட்டுவிட்டுத் திரும்பினால்......வந்து விட்டான் ஐயா, டோங்காவாலா!

“ஹுஜூர்! மை யஹாம் ஹாஜிம்!”

அவனிடம் பழைய பாக்கியுடன் சேர்த்துப் பேசிக்கொண்டு என்னுடைய இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தேன்.

விட்டு இந்தியர்களைக் குறித்துத்தான் இருக்கவேண்டும். இதற்கு உமது தேசத் தலைவர்கள்தான் பதில் சொல்லவேண்டும். என் வரையில் நான் உம்மை வரவேற்கவே தயாராக இருக்கிறேன். ஆனால் ஒன்று; நீர் மட்டும் எல்லா விஷயங்களிலும் எமது கருத்துகளுக்கு ஒத்து வர வேண்டும். உதாரணமாக மூன்றாவது யுத்தம் ஒன்று வருகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள்: அதன் பொறுப்பு முழுமையையும் ரஷ்யர்கள் தலையில் கட்ட நீங்கள் தயாராக இருக்கவேண்டும்......"

"சரிதான், ஜனாதிபதி! உமது எண்ணம் புரிகிறது. உலகத்தில் ஏற்படும் எவ்விதக் கோளாறுகளுக்கும் ரஷ்யாதான் பொறுப்பாளி என்பது உம்முடைய கொள்கையாகி விட்டது. நல்லது; அதை ஒளிக்காமல் சொல்லி விட்டீர்களே! அது வரை சந்தோஷம். அட்லி என்ன சொல்லுவாரோ?"

அப்பொழுது ஸ்ரீமான் அட்லியே தோன்றினார். இருமலுக்கிடையே அவர் சொன்னார்:

"நான் உங்களை வரவேற்கத் தயார். ஆனால் இந்தியப் பிரதமரும் உப பிரதமரும் தமது கருத்துக்களை வெளியிடும் வரை நான் முடிவாக ஒன்றும் சொல்ல இயலாது."

"ஓஹோஹோ! காமன்வெல்த் அங்கத்தினர்களை எல்லா விஷயங்களிலும் கலந்து ஆலோசிக்கும் ராஜ தந்திரத்தை என்னிடமும் காட்டி விட்டீர்களா? நானும்தான் இந்தியத் தலைவர்களைக் கேட்கப் போகிறேனே! அதற்குள் ஜபருல்லா என்ன சொல்கிறார், பார்க்கலாம்?"

ஜபருல்லா, "மிஸ்டர் காந்தி! நான் என்ன சொல்வேன் என்பது உமக்கே தெரியும். பாகிஸ்தானுக்கு இந்தியா கொடுக்கவேண்டிய தொகைக்காக நீர் உண்ணாவிரதம் இருந்து உதவி செய்யவில்லையா? அதைப் போலவே காஷ்மீரை எங்களுக்கு விட்டுக் கொடுப்பதற்கு உண்ணாவிரதம் ஏற்றுக் கொள்வதற்காவது நீங்கள் திரும்பி வரத்தான் வேண்டும்."

மகாத்மாஜி சிரித்தார். "சபாஷ்! நான் உண்ணாவிரதமிருந்து மறுபடியும் உடனே சாவதற்குத்தான் வரவேண்டுமா? சரி, பண்டிட்ஜி ஏதோ சொல்ல எழுந்திருக்கிறார் போலிருக்கிறதே!"

ஆம், நேருஜி முன்பே எழுந்து விட்டார். ஆனால் அந்தக் கனவுக் கலக்கத்தில்கூட அவர் முகம் கவலை தோய்ந்திருந்தது.

"பாபுஜி! நீங்கள் வருவதை யார்தான் தடுப்பார்கள்? உங்களை வரவேற்க மிக்க மகிழ்ச்சியுடன் காத்து நிற்கிறோம். ஆனால்... ஆனால்...ஒரே ஒரு சங்கடம். உங்களைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதிவிட்டேன். அது அச்சாகி வருகிறது. அதில் தங்கள் மரணத்தைப் பற்றி மனமுருகும்படி எழுதியிருக்கிறேன். அதை இனி மாற்றமுடியாதே என்றுதான் யோசனை செய்கிறேன்."

"கவலைப்படாதே! எப்பொழுதும் குழந்தையைப் போல ஒன்றுமில்லாததற் கெல்லாம் கவலையா? சர்தார்! நீர் என்ன சொல்லப் போகிறீர்?"

சர்தார் அப்பொழுது சிலையாகவே நின்றார். சில நிமிஷங்கள் அசையவே இல்லை. காந்திஜி தமாஷாகத் தலையை ஆட்டிக் கண்ணைச் சிமிட்டினார்.

"பாபுஜி! நீங்கள் என்னைக் கேட்கவும் வேண்டுமா? நீங்கள் வந்துதான் ஆகவேண்டும். பாரத நாடு என்றுமில்லாத அளவுக்குத் தங்களுக்காக இப்பொழுது ஏங்கி நிற்கிறது. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்த பிறகு என்னவெல்லாமோ நடந்து விட்டன. நாங்கள் 'குடியரசு'கூட ஸ்தாபித்துக் கொண்டு விட்டோம். அந்தச் சாஸனத்தின்படி எவரும் பசியோடு இருக்கக்கூட அனுமதியில்லை. ஆனால் உண்ணாவிரதப் பிரச்னை இங்கு எழுப்பப்பட்டு விட்டதால் நான் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. நீங்கள் ஒரே ஒரு நிபந்தனைக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும். அதாவது, 'காஷ்மீர் விஷயமாக உண்ணாவிரத மிருப்பதில்லை' என்று உறுதி கூறவேண்டும்."

அப்பொழுது ஓர் உருவம் மேடைமேல் ஏறியது. கவனித்த பிறகுதான் தெரிந்தது — அவர் நம் தலைவர் ராஜாஜி என்று. அவர் சொன்னார்:

"பாபுஜி! நானாக இருந்தால் திரும்பிவந்திருக்க மாட்டேன். வந்த பிறகு இந்தக் கேள்வியும் கேட்டிருக்க மாட்டேன்!"

காந்திஜி முகமலர்ந்து பதில் சொன்னார்: "நண்பரே! நீர் எப்போதும் போல் முன் யோசனையுடன் பேசுகிறீர். ஆனால் நானோ வந்து விட்டேன். வந்து கேள்வியும் கேட்டு விட்டேன். அத்துடன் இன்னொரு கேள்வியும் கேட்டு விடுகிறேனே! ஆம், ஒரு நிபந்தனையுமின்றி என்னைத் திரும்ப வரவேற்பவர்கள் இங்கு யாராவது உண்டா? அவர்கள் சற்று எழுந்திருக்க வேண்டும்."

காந்திஜி இப்படிச் சொன்னதும் கூட்டத்தின் கோடியில் இரண்டு உருவங்கள் தலை

கூட அவர் எடுக்கவில்லை. கடைசியில் அவர், “இந்தியாவுக்குப் பெருமை அளிக்க ஒரு ஞாபகச்சின்னம் நிறுவுவது அவசியமானால் எனக்கு ஏன் ஒன்று நிறுவக் கூடாது என்று கேட்கிறேன்” என்று மேஜைமேல் குத்திச் சவால் விடுத்தார்.

உண்மையில் அவர் தமக்குச் சிலை நிறுவச் சொல்லவில்லை. வக்கீல் அல்லவா? கட்சிக்காரனாகவே தன்னை நினைத்துப் பேசுவது அவர்களுக்கு இயல்பல்லவா? அந்த முறையில் ‘பாகிஸ்தா’னுக்குத்தான் கௌரவச் சின்னம் வேண்டுமெனக் கோரினார். (யாரும் அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.)

இன்னும் பலர் பேசினார்கள். ஸ்ரீமதி விஜயலட்சுமியும் ஸ்ரீமதி ஜெயாக்காய் ஷேக்கும்கூடப் பேசினார்கள் என்று நினைக்கிறேன்.

கடைசியில் பேச எழுந்தவர் ஸர்தார் பட்டேல். அப்பொழுதுதான் எனக்கு விழா நிர்வாகிகளிடம் ஏற்பட்ட சந்தேகம் தெளிந்தது. அவர் நினைத்திருந்தால் ஜபருல்லாகானுக்குத் தகுந்த பதில் சொல்லியிருக்கலாம். ஆனாலும் ஆபாச விவாதத்தில் இறங்கி அந்தப் புனித விழாவை மாசுபடுத்த விரும்பவில்லைபோலும். கடைசியில் அவர் சொன்னார். “தமது அரை நிர்வாணப் பக்கிரிக்கு அமெரிக்காவில் ஒரு ஞாபகச் சின்னம் எழுந்துவிட்டது. ஆனால் உலகத்தில் அவர் காட்டிய சாந்தி நிலை வேண்டுமானால் அவரை அரை நிர்வாணப் பக்கிரி என்று கோபத்துடன் பரிகசித்தார்களே — அவர்கள் — அந்த நாட்டவர்கள் — அந்த மஹாத்மாவின் கொள்கைகளைச் சாணக்யமின்றிக் கபடமின்றிக் கடைப் பிடித்தால்தான் முடியும் என்பதை இங்கு வற்புறுத்துகிறேன்.”

கூட்டம் முடியும் தறுவாயில் ஒரு வேடிக்கை; அமெரிக்க ஆசிரியை பர்ல் எஸ். பக்கும் — ஜே. ஜே. சிங்கும் பேசினார்கள்.

ஆனாலும் இருவரும் ஒரே குரலில் ஒரேமாதிரி பேசினார்கள். ஒரு சொல்கூட மாறவில்லை. இதைத் தூக்கியடித்து விட்டது மற்றொரு வேடிக்கை. அந்த காந்திஜி சிலைக்கு ஸ்ரீமதி ஜெயாக்காய் ஷேக்கும் ஸ்ரீமதி விஜயலட்சுமியும் இந்திய முறையில் ஹாரத்தி சுற்றின காட்சிதான் அது. பிறகு எல்லோரும் கொட்டாவி விட்டுக்கொண்டே எழுந்தனர்.

அப்பொழுது ஓர் அற்புதம்! ஜனாதிபதி ட்ருமன்கூட கதிகலங்கிக் கண்கள் குத்திட நின்றார். அவர்தான் காந்திஜியின் சிலையைச் சுட்டிக் காட்டினார். பார்த்தால்......அந்தச் சிலையிலிருந்து காந்திஜியே இறங்கிவந்தார். அதே கழியை ஊன்றிக் கொண்டிருந்தார். சிலையிலிருந்து வந்ததாலோ, என்னவோ அவர் உருவம் நிமிர்ந்திருந்தது. பொக்கை வாய்ச் சிரிப்புடன் அவர் பேச ஆரம்பித்தார்:

“ஒரு நிமிஷம் தயவுசெய்து எல்லோரும் உட்காரவேணும். பயம் வேண்டாம்.

“உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். சர்ச்சில் உள்பட எல்லோரும் என் கொள்கைகளை ஏற்றுக் கொள்வீர்கள் என்று தெரிகிறது. உங்களிடையே மறுபடியும் நான் ஏன் வரக்கூடாது?”

இந்தியத் தலைவர்களாவது உடனே எழுந்து வரவேற்பார்கள் என நினைத்தேன். அவர்கள் அசையவில்லை. திடீரென காந்திஜியை உயிருடன் கண்டதும் அவர்கள் பேச்சு மூச்சற்று அயர்ந்து போய் விட்டார்கள் போலிருக்கிறது.

ஜனாதிபதி ட்ருமன்தான் முதலில் நிலை தெளிந்தார். அவர் சொன்னார்:

“மிஸ்டர் காந்தி! ஒருவகையில் சொல்லப்போனால் உமது கேள்வி அமெரிக்கர்களை




அட்லியின் பிரசங்கம் (ஜெ. ஜெ. சிக் வாசிக்க) முடிந்ததும் அடுத்தபடியாகப் பேச எழுந்தது யார் என்று நினைக்கிறீர்கள்? சாட்சாத் சர்ச்சிலேதான்!

"நான் உடனடியாக நண்பர் அட்லி சொன்னதை ஆட்சேபிக்க விரும்புகிறேன். 'காந்திஜியின் கொள்கைகளை எதிர்த்தவர்களை' என்று அவர் சொன்னது என்னையும் குறிக்குமானால் அது அவருடைய வழக்கமாகிவிட்ட தவறு என்பதை வற்புறுத்த விரும்புகிறேன். இப்போதும் சொல்கிறேன்—ஹிட்லரிடம் சாத்வீக எதிர்ப்பு காட்டும்படி மிஸ்டர் காந்தி சொன்னதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. ஆனால் ஒரு விஷயம்—சண்டை தான் முடிந்து விட்டதே! வெற்றியும் கிட்டி விட்டதே! இனிச் சொன்னால் பரவாயில்லை. அந்த வெற்றியின் பலனைப் பார்க்கும்பொழுது காந்தியின் யோசனையைக் கேட்டு யுத்தத்தில் ஜயிக்காமலேயே இருந்திருக்கலாம் போலிருக்கிறது. என்ன அக்கிரமம்! இவ்வளவு பாடுபட்டு நான் கண்ட வெற்றி தொழிற் கட்சிக்குப் பதவி கிடைப்பதற்குத்தானா? யுத்தத்தின் ஆரம்ப நாட்களில் நான் ஒருவன் தனித்து நின்றேன். அத்தனை மக்களின் ஆசைக்கும் நம்பிக்கைக்கும் நாயகமாக இருந்தேன். ஆனால் யுத்தம் முடிந்த மறுகணம் என்ன ஆயிற்று? அப்படிப்பட்ட என்னை மூலையில் ஒதுக்கிவிட்டார்களே! இது என்ன ஐயா! புதிருக்குள் புதிராயிருக்கிறதே? இதுதான் நான் போரிட்டதற்குப் பலன் என்றால்—ஒருவர் போரிட மற்றவருக்கு வெற்றி யென்றால்—அந்தப் போர் கூடாதுதான். மிஸ்டர் காந்தி சொன்னது சரிதான்" என்று சவால் விடும் பாவனையில் கையைத் தூக்கினாரா? 'ஹா!'வென்று அலறினார் சர்ச்சில். பாவம், முன்பு பம்பாயில் கப்பலை விட்டு இறங்கும்பொழுது விழுந்து விட்டார். தோள் மூட்டு நழுவிவிட்டது. அதுமுதல் இந்தியாவின் நன்மைக்கு எதிர்த்துப் பேசும் ஆவேசத்தில் கையைத் தூக்கும் பொழுதெல்லாம் சுரீரென வலிக்கும் அவருக்கு. துடித்துப் போவார். இப்போதும் அதேதான் நிகழ்ந்தது.

உடனே நேருஜி எழுந்திருந்து அவரிடம் ஓடினார். "இந்தியா முறித்ததை இந்தியாதானே சீர்ப்படுத்த வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே அவரைப் பிடித்து உட்கார வைத்தார். அந்தத் தமாஷைக்கூட ரசிக்க முடியாமல் சர்ச்சில் வேதனை தாங்காது 'உம்'மென உட்கார்ந்தார்.

பண்டிட்ஜி மேடையில் ஏறினதும் ஒரே ஆரவாரம். சபையோருக்கு வணங்கிவிட்டுத் தமக்கே உரித்தான தோற்றம் பொலியும் தோரணையில் பேசினார்.

காந்திஜியைப் பற்றிய உருக்கமான குறிப்புகளுடன் சபையோர் மெய்சிலிர்க்கப் பேசினார். திடீரென அவர் குரலில் ஏக்கம் பாய்ந்தது. "நான் பொறுமை வாதி அல்ல. வெறும் பொறுமை வாதி ஆயுதபலம் மிக்க நாடுகளிடையே நின்று தன் நாட்டை ஆளமுடியாது. ஆனால் ஒன்று. நானும் சண்டையைத் தவிர்க்கத்தான் விரும்புகிறேன். இத்தமாதிரி சங்கட நிலைகளில்தான் காந்திஜி இல்லையே என்ற தாபம் என்னை வறுத்தெடுக்கிறது."



நீண்ட கரகோஷத்தினிடையே அவர் உட்கார்ந்ததும் அடுத்தபடியாகப் பேச வந்தவர் (உண்மையில் அன்றைய விழாவில் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் இந்தியாவைப் பற்றிக் கபடமாக ஏதாவது சூழ்ச்சி செய்திருப்பார்கள் என்று சொல்ல முடியாதுதான். ஆனாலும் ஸர் மகமத் ஜபருல்லாவைப் பார்த்ததும் அப்படித் தோன்றத்தான் செய்தது.)

நான் பயந்ததுபோலவே அவர் எட்டாத இடமெல்லாம் சுற்றி வளைத்து இந்தியாவைத் தாக்கிப் பேசினார். காந்திஜியின் பெயரைக்

கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் எனக்குக் கிடைத்த அதிருஷ்டம் ...

நான் ஒரு சொப்பனம் கண்டேன்—வாஷிங்டனில் அமரர் காந்திஜியின் ஞாபகார்த்த விழாவைப் பற்றி நேருஜி கனவு காணுவதாக, நான் கனவு கண்டேன். சொப்பனத்திற்குள் சொப்பனம்; அடுக்குச் சொப்பனம்.

சற்று நேரத்துக்கு முன்பு நேருஜியைக் களைப்புடன் கண்ட காட்சியும், சில நாட்களுக்கு முன்பு காந்திஜிக்கு வாஷிங்டனில் ஞாபகச் சின்னம் நிறுவுவதாக வந்த செய்தியும் சேர்ந்து என் கனவில் கலவைக் கிளையாகி விட்டன. சொப்பன விஞ்ஞானிகள், வருங்கால நிகழ்ச்சிகளின் சாயைதான் சொப்பனத்தில் முன்னோட்டம் விடும் என்று கூடச் சொல்வார்கள்.

அது என்னவோ! என் கனவுக்குள் நேருஜி அசந்து தூங்கிக் கொண்டிருந்தார், உழுத களைப்புடன்.

அவருடைய சப்ராஸிகள் அவரைப் பார்த்து விட்டு, ஒரு மாதமாகத் தூங்காத தூக்கத்தைச் சேர்த்துவைத்துத் தூங்குகிறார் என்று சொன்னது போல் ஒரு தோற்றம். அன்று காலைதான் நீண்ட விமானப் பிரயாணம் செய்துவிட்டு வந்தார் நேருஜி. மறுநாள் புத்தபகவான் அஸ்திகளைக் கொண்டு வரும் புத்த பிக்ஷுக்களை வரவேற்க மறுபடியும் விமானத்தில் பறக்கப் போகிறார்—இந்த அலுவலின் நினைவுதான் அவருக்கு வாஷிங்டன் ஞாபகச் சின்னத்தைச் சொப்பனத்தில் கொண்டுவிட்டிருக்க வேண்டும்.

அவருடைய கனவில் ......

வாஷிங்டனில் சுதந்திர தேவியின் சிலைக்கெதிரே ஒரு காந்திஜியின் சிலை; அதன் முன்னிலையில் மாபெருங் கூட்டம். அந்த சிலை ஒற்றைத் துணி பூண்டு, கழி ஊன்றி, அகன்ற காதுகளில் பழைய மூக்குக் கண்ணாடி இலங்க நிமிர்ந்து நின்றது. கூட்டத்தில் பெரிய பெரிய அமெரிக்க அரசியல் வாதிகளும், சட்ட சபை மெம்பர்களும், மற்ற தேசங்களிலிருந்து வந்த தலைவர்களும் குழுமியிருந்தனர். ரஷ்யாவிலிருந்து ஒருவரும் வந்ததாகத் தோன்றவில்லை.

ஜனாதிபதி ட்ரூமன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி முன்னுரை கூறினார்.

“இந்த விழாவுக்கு வந்து கலந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். அமெரிக்காவில் இந்த மகா புருஷரின் சிலையை நிறுவுவதில் ஒரு விசேஷமுண்டு. அதிலும் இந்த வாஷிங்டன் நகரம் சமாதானத்தை முன்னிட்டுப் போரிட்ட வாஷிங்டனின் பெயரைக் கொண்டதல்லவா? இங்கு சாந்தியை முன்னிட்டுத் தவம் கிடந்த காந்திஜியின் ஞாபகச் சின்னம் நிறுவுவது உசிதமல்லவா? ஆனால் அவ்விரு மகா புருஷர்களின் முறைகளில் தான் எத்தனை வேறுபாடு?

“இந்தியாவுக்கும் அமெரிக்காவும் ஒரு தனி சம்பந்தம்கூட உண்டு. இந்தியாவைத் தேடிச் சென்ற கொலம்பஸ்தானே அமெரிக்காவைக் கண்டு பிடித்தார்......?”

இந்தத் தமாஷுக்குப் பிரமாத அப்ளாஸ் கிடைத்தது. பிறகு சுமார் அரை மணி நேரம் காந்திஜியின் பெருமைகளைக் குறித்துப் பேசினார் அமெரிக்க ஜனாதிபதி.

அவருக்கு அடுத்தபடியாக பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லி பேசினார். நேருஜியின் கனவில் அப்பொழுது ஒரு விசித்திரம்—அட்லியின் உருவம் புகைத்தாற் போல மறைந்து அமெரிக்காவில் இந்தியப் பிரமுகரான ஸ்ரீ ஜே. ஜே. சிங்கின் உருவம் தெரிந்தது. அப்பொழுதுதான் புரிந்தது, அட்லியின் பிரசங்கத்தை ஸ்ரீ ஜே. ஜே. சிங் படிக்கிறார் என்று.

அட்லி தமது பிரசங்கத்தில் காந்திஜியை ஏசு கிறிஸ்துவுடன் ஒப்பிட்டுக் குறிப்பிடுகையில் அந்த மகான்களுடைய கொள்கைகளை எதிர்த்தவர்கள்கூட அவர்களது மரணத்திற்குப் பிறகு ஏற்றுக் கொண்ட விந்தையைச் சுட்டிக் காட்டினார்.



கண்ணாடிக்காரர்:—உமக்கு என்ன ஐயா! கவலையற்ற மனுஷர்!

பக்கத்திலிருப்பவர்:—என்ன சொன்னீர்கள்? ஏதோ கவலையில் கவனிக்காமல் இருந்து விட்டேன்; திருப்பிச் சொல்லுங்கள்!

கனவுக்குள் ஒரு கனவு

ஆசிரியர் : எஸ். கோபாலன்
தமிழாக்கம் : சுவாமிநாத ஆத்ரேயன்

டெல்லி விமான நிலையத்தில் நாங்கள் இறங்கும்பொழுது அனல் வீசியது. வழி நெடுகப் பட்ட கஷ்டம்கூட எங்களுக்கு அப்பொழுது மறந்துவிட்டது.

"இவ்வளவு கடும் வெய்யிலா ......?"

ஆனால் என்னுடன் வந்த ஹைதராபாத் வியாபாரி இந்த விஷயத்தில்கூட என் அபிப்பிராயத்திற்கு விரோதம் பாராட்டினார்.

"இது என்ன பிரமாதம்! ஜூலை மாதத்தில் பார்க்க வேண்டும்......"

அப்படிச் சொல்லும்பொழுது அவர் அடைந்த பெருமை!......பாதி வழியில் ஒரு மேகக் கூட்டத்தைக் கடக்க எங்கள் விமானம் திடீரெனக் கீழே குனிந்து எழுந்தது. விமானத்திலிருந்த பால் கிண்ணங்கள் எல்லாம் பறந்தன. நல்ல வேளையாக ஒரு தலையணை என் தலையைக் காத்தது. அப்பொழுதும் அந்த வியாபாரி, "இது என்ன பிரமாதம்! மே மாதத்திலே பிரயாணம் பண்ணிப் பார்க்கவேணும்!" என்றார். அது என்னதான் பெருமையோ! உண்மையில் அது ஜூனாக இருக்கட்டும், அல்லது எந்த மாதமாகவாவது இருந்து தொலையட்டும்—நான் டெல்லிக்கு வந்த காரியம் செவ்வனே நடந்தேற—அதற்குற்ற மனிதர்கள் மனம் குளிர—கொஞ்சம் வெய்யில் தயவு பண்ணினால் போதும்; அவ்வளவுதான் நான் வேண்டுவது.

ஆனால் டெல்லியில் இப்போதைய நிலை திருப்திகரமாக இல்லை. ஜனங்கள் அவ்வளவு வெப்பத்தையும் குளிர்விக்கக் குறைந்த பட்சம் ஒரு புழுதிப் புயலாவது வாராதா என்று ஏங்கிக் கொண்டிருந்தனர். அதற்கிணங்க, புழுதிப் புயல் அன்று மாலை வரும் எனக் கால நிலை அறிவிப்பாளர் உறுதி கூறினார்.

எனக்கோ நான்கு மணிக்கு செக்ரிடேரியட்டில் காரியம் இருந்தது. என்ன ஆகப்போகிறதோ, என்னவோ என்று கவலைப் பட்டுக் கொண்டே டோங்காவில் ஏறினேன்.

வழியில் "இதுதான் பிரதம மந்திரியின் வீடு" என்று கொச்சை ஆங்கிலத்தில் குறிப்பிட்டான் டோங்காவாலா. செக்ரிடேரியட் கட்டிடங்களுக்கு அப்பால் வேலியமைத்த பெரிய காம்பவுண்டுக்குள்ளே கோபுரங்கள் நிகழ ஒரு கட்டிடம் தெரிந்தது. அதன் வாசலில் ஒரு கூட்டம் எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. வண்டியை விட்டு இறங்கி எட்டிப் பார்த்தால் ......நமது சாட்சாத் பிரதம மந்திரி நேருஜி கலப்பையைப் பிடித்து உழுதுகொண்டிருந்தார். சேனம் பயிரிடுகிறாராம். காமிராக்கள் 'கிளிக்'கின; கைகள் கொட்டின.

அதற்குள் எனது டோங்காவாலா ஹிந்தியில் ஏதோ கத்தினான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்னிடம் அவன் சில்லறை கூட வாங்கிக் கொள்ளாமல் வண்டியை விரட்டினான்.

"இப்படியும் ஒரு வண்டிக்காரனா!" என்று நான் ஆச்சரியப்படக்கூட நேரமில்லை. வண்டிக்காரன் உளறினதற்கு உடனே அர்த்தம் புரிய ஆரம்பித்து விட்டது. புழுதிப் புயல் கிளம்பிவிட்டது. ஒரே இருட்டு. திக்குத் தெரியாமல் ஜனங்கள் ஓடினார்கள். வேடிக்கை பார்த்த ஜனங்கள் போன இடம் தெரியவில்லை. நானும் இங்கும் அங்கும் ஓடினேன். ஒளிய இடம் தெரியாமல் ஒரு தாணாக் குடிலுக்குள் நுழைந்தேன். அங்கே தாணாக்காரனைக் காணோம். டெல்லியில் தாணாக்காரர்கள் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கமாட்டார்கள் என்று தெரிந்திருந்தால் அப்போதே இங்கு வந்திருப்பேன்.

முதல் நாள் விமானத்தில் பட்ட பாடு வேறு, பால் கிண்ணங்களில் அடிபட்ட கஷ்டம் வேறு, டோங்காவின் ஆட்டத்தில் இடிபட்ட சிரமம் வேறு, டோங்காவாலாவும் நானும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளக் கையாண்ட பாஷைகளிலும், சேஷ்டைகளிலும், கோணல்களிலும் பட்ட பாடு வேறு — எல்லாமாகச் சேர்ந்து என்னைப் பெரும் தூக்கத்தில் அழுத்தின.

புழுதிப் புயல் அச்சமயம் பார்க்கவேண்டிய காட்சியாம். அந்தக் காட்சியைப் பார்க்

இந்த முறைப்படி டால்டா



உபயோகித்து ருசிமிக்க பதூஷாக்களை தயாரியுங்கள்

மூன்று பதூஷாக்களை தயாரிக்க: 1 கப் மைதா மாவில் 2 பெரிய ஸ்பூன் டால்டாவை நன்றாக கலந்து பிசைந்தமா தயாரிக்கவும். மாவை சிறிய வட்டங்களாக தட்டி நடுநடுவே சிறிது பள்ளம் செய்துகொள்ளவும். டால்டாவை வாணலியில் பொரிக்குமளவு சூடாக்கி, அடுப்பிலிருந்து இறக்கவும். அதில் வட்டங்களை மெதுவாகப் போடவும். வட்டங்கள் நன்றாக உப்பி ஒரே மாதிரியாக சிவப்பதுவரை வாணலியை அடுப்பில் ஏற்றவும் இறக்கவும் செய்யவேண்டும். பிறகு, வட்டங்களை துவாரங்கள் உள்ளதட்டில் வைத்துசூடான கெட்டி சர்க்கரைப்பாகை தடவிஆறவைக்கவும்.

டால்டா ஒரு சுத்தமான தாவர கொழுப்பாகையால் அது அதிக நேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக முழுவதும் பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.



எந்த உணவுகள் உங்கள் இரத்தத்தை புஷ்டியாக்குகின்றன?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 119-172 TM

"இங்கே சீதா வந்ததும், மூத்தாளைப் பற்றி அடிக்கடி கேள்விகள் கேட்டதால் முதலில் சொன்ன பொய்யை ஊர்ஜிதம் செய்து, கொஞ்சம் கற்பனையுடன் சொல்லி வந்தேன். அண்ணா! உன் சுபாவத்துக்குத் தகுந்தாற் போல் மன்னி எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கற்பனை செய்துகொண்டேன். இந்தக் கற்பனை மன்னியைத்தான் நாகம்மாளாகச் சீதாவுக்கு அவ்வப்பொழுது வர்ணித்துக் கொண்டு வந்தேன். அந்த மூத்தாளை ஒரு லட்சியமாக வைத்துச் சீதா மன்னி நடந்துகொண்டு உன் பிரியத்தைச் சம்பாதித்துக் கொள்வாளென்று எதிர்பார்த்தேன். ஆனால் நான் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக நடந்திருக்கிறது. நாகம்மாவைப் பற்றி நான் கற்பனையுடன் சொல்லச் சொல்ல, 'நாம் அவளைப் போல் ஆகவேண்டும்' என்று தோன்றுவதற்குப் பதில் 'நாமாவது அவளைப் போல் ஆகவாவது?' என்ற அதைரியம் பிறந்து விட்டது. இதற்குக் காரணம் என் கற்பனை கொஞ்சம் அதிகமாகப் போனதுதான். அண்ணா, மன்னி! — நீங்கள் இரண்டு பேரும் என்னைத் தயவு செய்து மன்னித்து விடுங்கள்!"

இத்தனை நேரம் ஸ்தம்பித்து நின்ற சீதாவுக்கு இப்பொழுதுதான் பேச உணர்வு வந்தது. "நிஜமாகவா? நாகம்மாவைப் பற்றிச் சொன்னதெல்லாம் பொய்யா?" என்று கூவினாள்.

லக்ஷ்மணன் மரகதத்தைப் பார்த்து, "அட போக்கிரி! உன்னால் வந்த வினைதானா இவ்வளவும்?......உன் மன்னியைப் பற்றி இவ்வளவு தூரம் கற்பனை செய்தவள் உன் கணவனைப் பற்றி என்னவெல்லாம் கற்பனை செய்திருப்பாய்!" என்றான்.

"போ, அண்ணா!" என்று வெட்கத்துடன் உள்ளே சென்றாள் மரகதம்.

இவ்வாறு கூறித் தங்கையைத் துரத்திய பிறகு, லக்ஷ்மணன் சீதாவை நெருங்கி, "சீதா! என் இருதயத்தில் ஒரே ஒருவருக்குத்தான் இடம் உண்டு; அந்த இடம் உனக்குத்தான்!" என்றான். சிதைந்த கனவுகள் உயிர் பெற்று எழ, சீதாவின் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளியது.

காலக்ஷேபம்

மீதியை எடு!

கூட்டத்தில் ஒருவன், "இதோ பாருங்கள், புத்தம்புதிய எட்வர்ட் அரசர் ரூபாய்! இதற்கு என்ன கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

ஏலம் ஓரணாவிலிருந்து ஏறிக் கொண்டே போயிற்று. கடைசியில் ஒரு சின்னப் பையன், "பதினைந்தணா!" என்றான்.

"சரி, இந்த ரூபாய் உனக்கு; பதினைந்து அணாவை எடு!"

"அதை அந்த ரூபாயிலே கழித்துக் கொண்டு மீதி ஓரணாவைக் கொடு!" என்றான் பையன்.

★

அது தெரியுமா?

தகப்பனார் (தம் பெண் வாசிக்கும் ஹார்மோனியத்தை ரசித்துக் கொண்டே, பெருமையாக):— நம்ம பெண்ணை என்னவென்று நினைத்தீர்கள்? அவள் ஹார்மோனியத்தை வைத்துக் கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்து காட்டுவாள்!

விருந்தாளி (மிகவும் ஆவலுடன்):— அடடா! அப்படியா? அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டத் தெரியுமோ?

மதிப்பு!

எஜமான் புதிதாய் வேலைக்கு வந்த குமாஸ்தாவைப் பார்த்து, "இதற்கு முன் நீர் யாரிடம் வேலை செய்தீர்?" என்று கேட்டார்.

குமாஸ்தா:— ஓரிடத்திலும் இல்லை.

எஜமான் —பின் நீர் மாதம் முப்பது ரூபாய் சம்பளத்தில் வேலை செய்ததாக மனுவில் எழுதியிருக்கிறீரே?

குமாஸ்தா:— ஆமாம், ஸார்! அது சாதாரண மனிதர் சொன்னதில்லை. ஒரு நீதிபதியின் அபிப்பிராயம். ஒரு வழக்கில் என்னைப் பார்த்து, "உனக்குப் பதினைந்து ரூபாய் அபராதம்; செலுத்தத் தவறினால் இரண்டு வாரம் சிறைவாசம்!" என்றார். என் இரண்டு வார வேலைக்கு அவர் பதினைந்து ரூபாய் மதிப்புப் போட்டார் இல்லையா?

★

இது தெரியாதா?

"ஒருவன் தன் மூத்த மனைவியினுடைய அத்தையின் பேத்தியை மணந்து கொண்டால் அவளுக்கு அவன் என்ன உறவு?"

"எனக்குத் தெரியாது; நீதான் சொல்லு?"

"அவளுக்கு அவன் புருஷன்!"

மன்னி கையால் போட்டது என்று மரகதம் சொல்லியிருந்தாள்.

"மரகதம்! நாகம்மா போட்ட இந்தப் பின்னல் மேஜைத் துணி எவ்வளவு அழகாயிருக்கிறது! இதன் நாலு மூலையிலும் மத்தியிலும் உள்ள 'டிஸைன்' ரொம்பவும் உயர்தரம்" என்று வியந்தாள் சீதா.

"மன்னி! நான் இரண்டு வருஷங்களுக்கு முன் பெரிய பொல்லாத்தனம் செய்தேன். இது நான் போட்ட 'டேபிள் க்ளாத்' என்று பொய் சொல்லிப் பள்ளிக்கூடத்தில் காண்பித்தேன். பள்ளிக்கூடத்தில் நடந்த 'கண் காட்சி'யில் இதற்கு ஒரு பரிசு கிடைத்தது. அந்தப் பரிசை நாகம்மாவிடம் கொடுத்தால்கூட நான் செய்தது பிசகுதானே, மன்னி!"

"அடடா! இந்தமாதிரி எனக்கும் போடத் தெரிந்திருக்கக் கூடாதா?" என்று ஏங்கினாள் சீதா.

"மன்னி! நாகம்மா ஒரு நிமிஷத்தைக் கூட வீணாக்கமாட்டாள். சாப்பிட்டானதும் பின்னல், தையல் என்று ஏதாவது செய்துகொண்டே யிருப்பாள். மத்தியானம் புஷ்பச் செடிகளுக்கு அவள் கையால் தண்ணீர் ஊற்றுவாள். வேலைக்காரன் எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும் பூவாளியைக் கொண்டு தன் கையால் கொஞ்சம் ஜலம் ஊற்றினால்தான் அவளுக்குத் திருப்தியாக இருக்கும். சாயங்காலம் அண்ணா ஆபீஸிலிருந்து வந்ததும் சிற்றுண்டி கொடுப்பாள். அண்ணா அந்த நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்க அவள் அதோ அந்த முற்றத்து விளிம்பில் உட்கார்ந்து, பத்திரிகையைப் படித்துக் காட்டும் காட்சியை என்னால் மறக்க முடியவில்லை. மன்னி! ராத்திரி சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போனதும் தம்பதிகள் இருவரும் 'கேரம்' ஆடும் சத்தம் 'டக், டக்' கென்று என் காதில் விழும்."

"மரகதம்! எங்க அகத்தில்கூட 'கேரம் போர்டு' இருந்தது. என் தம்பி ரொம்ப நன்றாகக் 'கேரம்' ஆடுவான். என்னையும் ஆடச் சொல்வான். ஒரு காயைக் கூட என்னால் வலைக்குள் தள்ள முடியாது. ஆனால் இனிமேல் நன்றாக ஆடக் கற்றுக் கொள்வேன்."

"மன்னி! நாகம்மாவுக்குச் சந்தனம், புஷ்பம் முதலிய வாசனை சாமான்களில் ரொம்பப் பிரியம். நான் ஒரு தடவை கூடப் படுக்கையறைக்குள் போனதில்லை. ஆனால் ராத்திரி சாப்பிட்டானதும் கம்மென்று மட்டிப்பால் வாசனை படுக்கையறையிலிருந்து வரும்" என்றாள் மரகதம்.

'என்ன ரஸிகத்தன்மை' என்று வியந்தாள் சீதா. ஒரு நாளைக்குக்கூடச் சீதா படுக்கையறையில் மட்டிப்பால் போட்டு அந்த மணத்தை அனுபவித்ததே இல்லை. 'கம்'மென்று வாசனை நெடுகிலும் பரவ, தோட்டத்தில் பூத்த சரமல்லிகையைத் தலையில் அணிந்து மோகினியைப்போல் கணவன் எதிரில் உலாவி அவரை மகிழ்விக்கும் நாகம்மாளின் உருவம் அவள் மனக் கண்முன் தோன்றியது. திடீரென்று அவள் மனதில் விவரிக்க முடியாத வேதனையும் ஆற்றாமையும் ஏற்பட்டன. 'நாகம்மா எங்கே? நான் எங்கே? அவள் இருந்த இடத்தில் நான் இருப்பது சிம்மம் இருந்த சிம்மாசனத்தில் நரி உட்கார்ந்திருப்பது போலத்தான்!' என்ற எண்ணத்தை அவளால் தவிர்க்க முடியவில்லை.

சில நாட்களாகவே, மரகதம் நாகம்மாவைப் பற்றி வர்ணிக்க வர்ணிக்க, சீதாவின் உள்ளத்தில் ஒரே ஏக்கமும் வேதனையும் குடிகொண்டது. சீதாவுக்கு இருபத்திரண்டு வயதாகி விட்டபோதிலும் அவள் மனது குழந்தையைப் போன்றது. படித்துப் பட்டம் பெற்ற போதிலும், தற்காலத்துப் பெண்களைப் போன்றவள் அல்ல சீதா. தன்னைப் போல உலகத்தில் யாருமே இருக்க முடியாது என்ற வீண் கர்வமோ, டாம்பீகமோ கொஞ்சமும் இல்லாத அபூர்வப் பெண். கணவன் மனதறிந்து நடந்து நாகம்மாவை விடத் தான் உயர்ந்தவள் என்று நிரூபித்து அவன் அன்பைக் கொள்ளை கொள்ளத் துடிதுடித்தாள். ஆனால் நாகம்மாவைப் பற்றிய உயர் குணங்களைத் தெரிந்து கொண்டதும், 'மூத்தாளின் கால் தூசிக்குக்கூட நான் சமதையாக மாட்டேன்' என்ற உணர்ச்சி ஏற்பட்டது. இப்படிப்பட்ட மூத்தாளிடம் அவள் கணவன் உயிரையே வைத்திருக்க வேண்டும். அவளைக் காதலித்த மனசால் அவர் வேறு யாரைத்தான் விரும்ப முடியும்? சீதாவிடம் சொல்லும் ஆசை வார்த்தைகள் எல்லாம் வெறும் சம்பிரதாயத்துக்காகச் சொல்லும் வார்த்தைகள் என்பதில் என்ன சந்தேகம்? தன் வாழ்வே ஒரு சூன்யம்போல் சீதாவுக்குத் தோன்றியது.

"மரகதம்! என்னைவிட நாகம்மா அழகாயிருப்பாளோ?" என்று கேட்க வேண்டுமென்று பல தடவையும் விரும்பினாள். 'அவள் அபார அழகு எங்கே? உன் அவலட்சணம் எங்கே?' என்று மரகதம் சொல்லிவிட்டால், அந்த அதிர்ச்சியைத் தாங்க அவளால் முடியவே முடியாது. இதற்காகவே பயந்து கொண்டு அதைப் பற்றிச் சீதா கேட்கவில்லை.

அன்றிரவு என்றுமில்லாத வண்ணம் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்

சீதா. மட்டிப் பால் வாங்கி வரச்சொல்லி அன்றைக்குப் படுக்கை யறையில் தூபம் காட்டினாள். அவள் அலங்காரத்தையும் மட்டிப் பாலின் இனிய மணத்தையும் அவள் தலையில் அணிந்திருந்த புஷ்பத்தின் வாசனையையும் கண்ட லக்ஷ்மணன் ஆச்சரியக் கடலில் ஆழ்ந்து போனான்.

"ஆஹா! என்ன வாசனை! உன்னைப் போல் என் மனதறிந்து செய்யக் கூடியவர்கள் யார்?" என்றான்.

'ஏன், நாகம்மா செய்ய வில்லையா? நான் என்ன பிரமாதமாகச் செய்துவிட்டேன்?' என்று சீதா சொல்ல வந்தாள். ஆனால் சட்டென்று பல்லைக் கடித்துக் கொண்டாள். ஏனெனில், அவள் கல்யாணத்துக்கு முன்னால் மரகதத்துக்குச் செய்து கொடுத்திருந்த உறுதிமொழி அவள் ஞாபகத்துக்கு வந்தது. எந்தக் காரணத்தைக் கொண்டும் சீதா தன் கணவனிடம் நாகம்மாவைப் பற்றிய ஞாபகத்தை உண்டாக்கக் கூடாது என்பதுதான் மரகதம் அவளிடம் வாங்கிக் கொண்டிருந்த உறுதி மொழி. நாகம்மாவைப் பற்றி ஏதேனும் கேட்டு யாராவது ஞாபகப்படுத்தினால், லக்ஷ்மணன் மணிக் கணக்கில் துன்பமே உருவாக உட்கார்ந்து விடுகிறான் என்பது மரகதத்துக் கல்லவா தெரியும்?

அன்றிரவு முழுதும் சீதாவுக்குத் தூக்கமே வரவில்லை. தான் செய்யும் ஒவ்வொரு காரியமும் லக்ஷ்மணனுக்கு நாகம்மாவைத்தான் ஞாபகப் படுத்திக்கொண்டிருக்கும் என்பதில் என்ன சந்தேகம்? 'அடடா! நாகம்மா எவ்வளவு அழகாய்ப் பாடுவாள்? இந்தப் பெண்ணும் என்னவோ பாடுகிறது. ஆனால் அவள் அபார ஞானமெங்கே? இவள் எங்கே? நாகம்மா 'டக், டக்' கென்று மெட்டிச் சத்தம் கேட்க நடந்து வருகிற அழகு என்ன? இந்தப் பெண் சத்தம்போடாமல் பூனை போல் ஊர்ந்து வரும் கண்ணராவி என்ன?—இப்படியாகத்தான் ஒவ்வொரு செய்கையையும் அவர் நாகம்மாளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருப்பார்.

*

சில தினங்களுக் கெல்லாம் லக்ஷ்மணன் மாணவர்கள் கோஷ்டியுடன் சுற்றுப் பிரயாணம் செய்யச் சென்றான். அவன் சென்னைக்கு வந்தபோது, கொஞ்சமும் எதிர்பாராத வண்ணம் சீதாவிடமிருந்து வந்த கடிதத்தைக் கண்டு திடுக்கிட்டான். ஆமாம்; சீதா, கல்கத்தாவிலிருந்த தன் தாயாருக்கு எழுதியிருந்த கடிதத்தைத் தவறுதலாக லக்ஷ்மணனுடைய விலாசம் எழுதிய உறைக்குள் வைத்திருந்தாள். லக்ஷ்மணன் கடிதத்தைப் பிரித்தான். பின் வருமாறு அக்கடிதத்தில் எழுதி யிருந்தது:

"அன்புள்ள அம்மாவுக்கு,

அனேக நமஸ்காரம். என் வாழ்க்கை இவ்வளவு துன்ப மயமாகப் போய்விடுமென்று நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. என் நாத்தனார் மரகதம், மூத்தாள் நாகம்மாளைப் பற்றிச் சொல்லச் சொல்ல, சிங்கம் இருந்த இடத்தில் உட்கார்ந்திருக்கும் நரியைப்போல் நான் இருப்பதாகத் தோன்றுகிறது. நாகம்மா குடித்தனம் செய்த வீட்டில் எனக்குக் கொஞ்சங்கூட வேலையில்லை. அவளை மனசாரக் காதலித்த என் கணவர் என்னை உண்மையாகக் காதலிக்க முடியும் என்று என்னால் நம்ப முடியவில்லை. என்னிடம் சொல்லும் இவர் ஆசை வார்த்தைகள் அவ்வளவும் பொய்யாகத்தான் இருக்க முடியும். இந்த நிலைமையில் எப்படி நான் சந்தோஷமாக இருக்க முடியும்?

இப்படிக்கு,

அபாக்கியவதி சீதா."

தூக்கி வாரிப்போட்டது லக்ஷ்மணனுக்கு. இந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதிப் பிரயோஜனமில்லை என்று தெரிந்து கொண்டு நேரே ஊருக்குத் திரும்பினான். வரும்போதே மரகதமும் சீதாவும் அவனை வரவேற்றனர்.

"சீதா! மூத்தாளாவது, நாகம்மாளாவது! இது என்ன பிதற்றல்?" என்று கூறி அவள் எழுதியிருந்த கடிதத்தை அவள் எதிரே விட்டெறிந்தான். சட்டென்று மரகதம் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தாள். அவள் முகத்தில் குறும்பு நகை தவழ்ந்தது.

"அண்ணா! மன்னியின்மேல் கோபித்துக் கொள்ளாதே! நான்தான் நாகம்மா என்று ஒரு மூத்தாள் இருந்ததாக மன்னியிடம் பொய் சொன்னேன். உனக்கு வயது முப்பத்தைந்து ஆகியும் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டு வந்ததால் ஊரில் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். உனக்கு ஏதோ வியாதி என்றும், மூளையில்கூட ஏதோ கோளாறு என்றும். அதனால்தான் இவ்வளவு காலம் கல்யாணம் ஆகவில்லை என்றும் பலவித வதந்திகள் கிளம்ப ஆரம்பித்துவிட்டன. உனக்குப் பெண் கொடுக்க வந்த சிலர் இந்த வதந்திகளை நம்பித் திரும்பிப் போய் விட்டார்கள். ஆகையால்தான் உனக்கு மூத்தாள் இருந்து இறந்து விட்டதாகப் பொய் சொன்னேன். இவர்கள் கல்கத்தாக்காரர்கள் ஆனதால் நான் சொன்னதை நம்பி விட்டார்கள்.





படித்துக் கொண்டிருந்த மரகதத்தைக் கூப்பிட்டாள். "குழம்புக்கு உப்பு போதுமா என்று பார்! விதானம் தெரியவில்லை எனக்கு!" என்றாள். மரகதம் ருசி பார்த்து விட்டு, "உப்பு சரியாயிருக்கிறது; காரம்தான் அதிகம். அண்ணா பட்டணத்தில் படித்துக்கொண்டிருந்தபோது திடீரென்று அவனுக்கு உடம்புக்கு வந்துவிட்டது. அதிலிருந்து அதிகமாகக் காரம் சேர்த்துக் கொள்கிறதில்லை" என்றாள் மரகதம்.

"நாகம்மா அக்கா நன்றாகச் சமைப்பாளோ?" என்று ஆவலோடு கேட்டாள் சீதா.

"பேஷாக! அதிகமாகக் காரம் இல்லாமல் இளநீர் மாதிரி இருக்கும், அவள் வைக்கும் ரஸம். அதற்கு அண்ணா 'நாகம்மா ரஸம்' என்று பெயர் வைத்திருந்தான்."

சட்டென்று சீதாவின் கண்களில் நீர் அரும்பியது. அதை மறைக்க முகத்தைத் திருப்பிக் கொண்டாள். மரகதமோ மிக்க உற்சாகத்துடன் மேலே சொல்லிக் கொண்டிருந்தாள்.

"நாகம்மா சமைக்கிற சுருக்கை என்னவென்று சொல்ல! மணி இப்பொழுது ஒன்பது ஐம்பது ஆகிறதா? நாகம்மா ஒன்பதரை மணிக்கே சமையல் செய்து மூடி வைத்து விட்டு அண்ணா வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். ஐயோ பாவம்! அண்ணாவுக்கு நாழியாகிவிட்டதுபோலிருக்கு! அதோ பார், மன்னி! கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக அண்ணா போவதை!" என்று சுட்டிக் காட்டினாள் மரகதம்.

சீதா கூடத்தைப் பார்த்தாள். பாவம், தன்னைக் கோபிக்க மனமில்லாமல் திண்டாடும் கணவனைப் பார்க்க அவள் வேதனையடைந்தாள். 'சட்புட்' டென்று சமைத்து இலையைப் போட்டாள். கணவனுக்கும் மரகதத்துக்கும் பரிமாறினாள். கணவன் ரஸம் சாப்பிடும்போது, சமையலின் காரம் மூளையைத் தாக்கவே, 'லொல்' 'லொல்' லென்று இருமினான். சீதாவின் நெஞ்சம் துணுக்குற்றது. 'நாகம்மா ரஸ'மெங்கே, தான் இவ்வளவு அழகாகச் செய்திருக்கும் மிளகாய் ரஸமெங்கே?

"தெரியாமல் கொஞ்சம் விறையக் காரம் போட்டுவிட்டேன்" என்றாள் சீதா குரல் நடுங்க.

"அப்படி ஒன்றும் காரமில்லை, சீதா! எனக்குத்தான் உஷ்ணத்தினால் இருமல் வருகிறது" என்றான் லக்ஷ்மணன்.

கணவனின் பெருந்தன்மையையும் பொறுமையையும் எண்ணி அவள் மனம் நெகிழ்ந்தது. லக்ஷ்மணன் சாப்பிட்டு எழுந்திருக்கும்போது, "சமையல் இன்றைக்கு ரொம்ப ஜோர்!" என்று கூறினான். சீதாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'அது பரிகாச வார்த்தையா? அல்லது நிஜமான பாராட்டுதலா?' என்பதை அறியாமல் கலங்கினாள். வந்ததிலிருந்து லக்ஷ்மணன் அவள் காரியங்களை அடிக்கடி பாராட்டிக் கொண்டு இருந்தான். அந்தப் பாராட்டுதல் எல்லாம்கூட ஒருவேளை வெறும் உபசார வார்த்தைகளோ?

லக்ஷ்மணன் காலேஜுக்குப் புறப்பட்டுப் போனான். மரகதத்துக்கு அன்று விடுமுறையாகையால் ஏதோ 'எம்பிராய்டரி'வேலையில் ஈடுபட்டிருந்தாள். அருகில் வந்த சீதா, மேஜைத் துணியையே பார்த்துக்கொண்டு நின்றாள். அது நாகம்மா



கையால் பின்னிய துணியைத் தட்டிப் போட்டுக் கொண்டிருந்த மரகதத்தின் அருகில் சென்றாள்.

"மரகதம், உன்னை ஒன்று கேட்க வேண்டும்" என்றாள் சீதா.

"என்ன மன்னி?" என்று குதித்துக் கொண்டே ஓடிவந்து அவள் கையைப் பற்றிக் கொண்டாள் மரகதம்.

"ஒன்றுமில்லை; தினமும் இப்படிக் காப்பி போடுகிறாரே, அவள் இருக்கும் போது கூட இப்படித்தான் காப்பி போடுவாரோ?" என்றாள் கண்களில் ஆவலும் பரபரப்பும் தோன்ற. 'அவள்' என்று சீதா குறிப்பிட்டது, லக்ஷ்மணனின் மூத்தாள் நாகம்மாளை.

"இல்லை, மன்னி! நாகம்மா மன்னி இங்கே வந்ததிலேயிருந்து அவள் உயிருடன் இருந்த வரை அண்ணா காப்பி போடுவதில்லை. எனக்கு விவரம் தெரிந்ததிலேயிருந்து அண்ணா காப்பி போடுவது எனக்குத் தெரியும். வியாதிக்கார அம்மாவை வைத்துக்கொண்டு அண்ணா தான் சமைத்துப் போட்டார். நாகம்மா மன்னி வந்ததிலேயிருந்து அண்ணாவின் சமையல் வேலை நின்றிருந்தது; ஒரு நாலு வருஷம்!" என்றாள் மரகதம்.

சீதா ஸ்தம்பித்து நின்றுவிட்டாள் ஒரு நிமிஷம். "மரகதம்! காலையிலே சீக்கிரமாகப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பது ஒரு பிரமாதமான காரியமில்லை. இந்தக் காரியத்திலேகூட நான் நாகம்மாவைப் போல் இருக்கக்கூடாதா?" என்று ஏங்கினாள்.

"மன்னி! நாகம்மா நாலரை மணிக்கே படுக்கையை விட்டு எழுந்திருந்து விடுவாள். கொல்லைக் கிணற்றிலே 'கடகட' வென்று ஜலம் இழுக்கும் சத்தத்தைக் கேட்டு அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் விழித்துக் கொள்வார்கள். அப்படி எழுந்திருக்காதவர்களை 'டபார், டபார்' என்று மன்னி துணி தோய்க்கும் சத்தம் கட்டாயமாக எழுப்பி விட்டுவிடும். அதற்குப் பிறகு, அவள் ஸ்நானம் செய்து, பூஜை செய்வாள். அதோ கூடத்திலே மாட்டியிருக்கிறதே அந்த லக்ஷ்மி படம், அது அவள் கொண்டு வந்ததுதான். தினம் அவள் மகாலக்ஷ்மி ஸ்தோத்திரம் செய்கிற அழகு ஒன்றே போதும். அவளைப் பார்த்துத்தான் நானும் ஸ்தோத்திரம் செய்கிறேன்" என்றாள் மரகதம்.

சட்டென்று படத்தைத் திரும்பிப் பார்த்தாள் சீதா.

"அக்கா ரொம்ப தெய்வபக்தியுள்ளவள் என்று தெரிகிறது. ஆனால் அவளோடு என்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்கிறபோது, எனக்கே வெட்கமாயிருக்கிறது. கல்கத்தாவில் அப்பா பூஜை செய்கிறபோது, "கற்பூர ஹாரத்தியைப் பார்க்க வாங்கோ! வாங்கோ!" என்று கத்துவார். நாங்கள் படுக்கையிலே ஒரு தடவை புரண்டு படுத்துக் கொள்வோம். சாயங்காலம் கச்சேரி, சினிமா என்று கிளம்புவோமே தவிர, கோவிலுக்கு என்று கல்கத்தாவில் ஒருநாள் கூடப் புறப்பட்டுப் போனதில்லை" என்று ஏக்கத்துடன் சொன்னாள் சீதா.

"இவ்வளவும் காலை ஐந்தரை மணிக்கெல்லாம் முடித்து விடுவாள், நாகம்மா. அவள் காப்பி போட்டு வைப்பதற்கும், அண்ணா எழுந்திருந்து வருவதற்கும் சரியாக இருக்கும்."

இவ்வாறு மரகதம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, 'கணகண' வென்று சமையலறையிலிருந்து சத்தம் கேட்டது.

"தினம் வெண்கலக் கரண்டியால் பால் சட்டியைத் தட்டுகிறாரே, ஏன்?" என்றாள் சீதா.

"காப்பி தயாராக இருக்கிறது, சாப்பிட வாங்கோ என்று அர்த்தம். அண்ணா நாலைந்து வருஷம் காலேஜ் ஹாஸ்டலில் வார்டனாகவும் இருந்தார்" என்று கூறிவிட்டு மன்னியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே ஓடினாள் மரகதம். அப்பொழுது லக்ஷ்மணன் உள்ளூர் காலேஜில் போதகாசிரியராக வேலை பார்த்து வந்தான்.

★

சிறிது நேரத்திற்கெல்லாம் சீதா சமைத்துக்கொண்டிருந்தாள். "மரகதம்! இங்கே வாயேன், ஒரு நிமிஷம்!" என்று

கற்பனை அதிகம்!



வி. எஸ். ஆர்.

"சீதா! சீதா!" என்று கூப்பிட்டுத் தன்னை யாரோ ஒரு உலுக்கு உலுக்குவதை உணர்ந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் சீதாலக்ஷ்மி. புன்சிரிப்பு தவழும் முகத்துடன் அருகில் நின்று கொண்டிருந்த அவள் நாத்தனார் மரகதம், "மணி ஆறு விட்டதே, இன்னுமா விழிப்புக் கொடுக்கவில்லை?" என்றாள். இவ்வளவு நேரமாகியும் எழுந்திருக்காததால் வெட்கமடைந்த சீதா, "நீயும்தான் பத்து நாளாக என்னை எழுப்புகிறாய், பாழும் தூக்கம் என்னை விடமாட்டேன் என்கிறது" என்று சொல்லி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து பின்கட்டுப் பக்கம் ஓடினாள்.

சீதா கல்யாணமாகிப் புக்ககம் வந்து இரண்டு வாரங்கள் ஆகி யிருந்தன. அவள் கல்கத்தாவில் உள்ள பெரிய உத்தியோகஸ்தரின் பெண். வீட்டில் செல்லக் குழந்தை. பிறந்தகத்தில் எப்பொழுதும் ஏழு மணிக்குத்தான் படுக்கையை விட்டு எழுந்திருப்பாள். பல் தேய்த்ததும் வேலைக்காரி தயாராகக் காப்பியை வைத்துக்கொண்டு நிற்பாள். இந்தச் சீராட்டல் எல்லாம் புக்ககத்தில் நடக்குமா? புக்ககம் வந்ததிலிருந்து தினம் காலை ஐந்து மணிக்கே எழுந்து விடுவதென்று சங்கல்பம் செய்து கொண்டாள். ஆனால் அப்படிச் செய்ய முடியவில்லை. நல்ல வேளையாக, நேரங் கழித்து எழுந்திருப்பதற்காக அவளைக் கோபித்துக் கொள்பவர்கள் புக்ககத்தில் யாரும் இல்லை. அவள் கணவன் லக்ஷ்மணன் ஒருநாள்கூட முகத்தைச் சுளித்துக் கொண்டது கிடையாது. சீதா எழுந்திருப்பதற்கு முன்பாகவே, அவன் எழுந்து காப்பி போட்டுத் தயாராய் வைத்திருப்பான். லக்ஷ்மணன் தங்கை மரகதம் காலேஜில் படித்துக் கொண்டிருந்தாள். "மரகதம்! நீயாவது என்னைச் சீக்கிரமாக எழுப்பிவிடக் கூடாதா? நான் நேரம் கழித்து எழுந்திருப்பதும், அவர் எனக்கு முன்னால் எழுந்திருந்து காப்பி போட்டு வைப்பதும் எனக்கு ரொம்ப அவமானமாக இருக்கிறது" என்றாள் சீதா. அதிலிருந்து மரகதம், மன்னியைக் காலையில் எழுப்புவதற்காக அலாரம் கடிகாரம் வைத்தாள்; சத்தம் போட்டாள்; பிரயோஜனம் இல்லாமல் அவளைப் பிடித்து இரண்டு உலுக்கு உலுக்கி எழுப்பத் தொடங்கினாள்.

பல் தேய்த்துவிட்டுச் சமையலறையில் நுழைந்த சீதா, லக்ஷ்மணன் 'டக், டக்' கென்று காப்பி பில்டரைத் தட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் தயங்கினாள். நல்ல வேளையாக அவன் சீதாவைப் பார்க்கவில்லை. அவன் முதுகும் வழுக்கைத் தலையும்தான் தெரிந்தன. லக்ஷ்மணனுக்கு வயது முப்பத்தைந்தே ஆகியிருந்தும் ரொம்பப் பெரிய மனிதர்களுக்குரிய தலை வழுக்கை இருந்தது. செக்கச் செவேரென்ற அவன் உடம்பின் பளபளப்பைத் தோற்கடித்துக் கொண்டிருந்தது அந்த வழுக்கைத் தலை.

சீதா மேலே செல்லாமல் கூடத்தை நோக்கித் திரும்பினாள். மேஜை மீதிருந்த


விதித்திருக்கும் கட்டுப்பாடுகளை அகற்றுங்கள். அபராதங்களையும் சொத்துப் பறிமுதல்களையும் திருப்பி அவரவர்களிடம் சேர்ப்பிக்கச் செய்யுங்கள். இப்படியெல்லாம் செய்யும்படி தங்களைக் கேட்கும்போது உலகத்தில் நாகரிகமடைந்த தேசங்களின் அரசாங்கங்கள் செய்வதைத்தான் தாங்களும் செய்யும்படி நான் கோருகிறேன். இந்தக் கடிதம் கிடைத்த ஏழு தினங்களுக்குள் மேற்கண்டவாறு தாங்கள் உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில், பொதுஜனச் சட்ட மறுப்பை ஒத்திப் போடும்படி நான் யோசனை சொல்லுவேன். சிறைப் பட்டிருக்கும் தலைவர்கள் விடுதலையாகித் தேசத்தின் புது நிலைமையைப் பற்றி யோசித்து முடிவு செய்யும்படி கூறுவேன். அரசாங்கத்தார் மேற்கண்டவாறு அறிக்கை பிறப்பித்தால், பொதுஜன அபிப்பிராயத்தை அங்கீகரிக்க அரசாங்கத்தார் உண்மையான விருப்பமுள்ளவர்கள் என்பதற்கு அது அறிகுறியாயிருக்கும். ஆகவே பொதுஜனச் சட்டமறுப்பைத் தள்ளி வைத்துப் பொதுஜன அபிப்பிராயத்தை மேலும் உறுதிப்படுத்தும் வேலைகளிலே மேலும் ஈடுபடும்படி தேசத்துக்கு நான் யோசனை சொல்வேன்......

இங்ஙனம்,
தங்கள் உண்மை
ஊழியனும் நண்பனுமான

பர்தோலி
1—2—1922 எம். கே. காந்தி

இந்த இறுதிக் கடிதம் பிப்ரவரி 4வ. தேசமெங்கும் பிரசுரமாயிற்று. பொதுஜனங்களிடையில் மின்சார சக்தி பரவியதைப் போன்ற உற்சாகம் உண்டாயிற்று. மிதவாதத் தலைவர்களோ "வைஸ்ராய்க்கு இப்படியும் கடிதம் எழுதலாமா?" என்று தேள் கொட்டியவர்களைப் போல் துடித்தனர். வைஸ்ராய்க்குக் கடிதம் எழுதும் போது 'May it please Your Lordship' என்று ஆரம்பிப்பது வழக்கம். வெறும் சம்பிரதாய மரியாதைகளை அனுசரிக்க அது காலமில்லையென்று கருதி மகாத்மா, "ஸார்!" என்று கடிதத்தை ஆரம்பித்திருந்தார். இதையும் சில மிதவாதப் பிரமுகர்கள் கண்டித்தார்கள். இன்னும் கொஞ்ச காலம் மகாத்மா அவகாசம் கொடுத்திருந்தால் லார்ட் ரெடிங்கைச் சரிக்கட்டி வட்டமேஜை மகாநாடு கூட்டும்படி செய்திருக்கலாம் என்றும் மிதவாதப் பிரமுகர்கள் வெகு காலம் சொல்லி வந்தார்கள்.

பிப்ரவரி 4வ. பிரசுரமான மகாத்மாஜியின் கடிதத்துக்குப் பதிலாக இந்திய சர்க்கார் பிப்ரவரி 6வ. ஒரு விரிவான பதில் அறிக்கை வெளியிட்டார்கள். அதிகார வர்க்கத்தினர் குதர்க்க சாமர்த்தியம் அதிகம் உள்ளவர்கள் என்பது தெரிந்த விஷயந்தானே? ஆகையால் குற்றங்களையெல்லாம் காங்கிரஸின் மீது சுமத்தும் முறையில் மேற்படி அறிக்கையில் வாதமிட்டிருந்தார்கள். மகாத்மாவின் கோரிக்கைகள் எவ்வளவு அநியாயமானவை என்று நிரூபிப்பதற்குப் பிரயத்தனம் செய்திருந்தார்கள். அத்தகைய அநியாயமான கோரிக்கைகளை ஒப்புக் கொள்ள முடியாதென்றும், அவற்றைக் குறித்து விவாதிக்கவும் முடியாதென்றும் சொல்லி விட்டு, தேசத்தில் அபாயகரமான குழப்பம் ஏற்படாமல் தடுத்து அமைதியை நிலைநாட்டுவதற்குப் பொது மக்கள் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும் என்று அந்த அறிக்கையை முடித்திருந்தார்கள்.




"யானைக்கு ரேஷன் கொடுக்க முடியாததால் கோவில் உற்சவத்திற்கு யானை வர முடியாமல் போய்விட்டது!" —பத்திரிகைச் செய்தி

ஆனால் தாங்கள் அந்த மகாநாட்டின் முடிவுகளை அடியோடு நிராகரித்து விட்டீர்கள். இத்தனைக்கும், தங்களுடைய கல்கத்தா பிரசங்கத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை யொட்டியே அம்முடிவுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆகவே மக்களின் மூலாதார உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளும் பொருட்டு தேசம் சாத்விகச் சட்டமறுப்பு முறையை ஏதேனும் ஒரு விதத்தில் கையாளும்படி ஏற்பட்டு விட்டது. வேறு வழி ஒன்றுக்கும் இடமில்லாமல் தாங்கள் செய்து விட்டீர்கள். அலி சகோதரர்கள் தங்கள் பேச்சுக்காக வருத்தம் தெரிவித்த காலத்தில் இந்திய சர்க்கார் ஒரு வாக்குறுதி அளித்தனர். அதாவது ஒத்துழையாதார் பலாத்காரத்தில் இறங்காத வரையில் அவர்களுடைய நடவடிக்கைகளில் குறுக்கிடுவதில்லை யென்று கூறினார்கள். அந்த வாக்குறுதி காற்றிலே போய்விட்டது. அதைச் சர்க்கார் கடைப்பிடித்திருந்தால் பொதுஜனச் சட்டமறுப்பை இன்னும் கொஞ்ச காலம் தள்ளிப் போட்டிருக்கலாம். அதற்குத் தாங்கள் இடம் வைக்கவில்லை. சட்டமில்லா அடக்கு முறைச் சட்டங்களைச் சர்க்கார் கையாளுவதினால் பொதுஜனச் சட்ட மறுப்பை உடனே எங்கேயாவது ஆரம்பிப்பது அவசியமாகி விட்டது. நான் பொறுக்கி எடுக்கும் பிரதேசங்களில் மட்டும் பொதுஜனச் சட்டமறுப்பை ஆரம்பிக்கக் காங்கிரஸ் காரியக் கமிட்டி அநுமதி கொடுத்திருக்கிறது. நான் இப்போதைக்குப் பர்தோலியைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். தவிர, குண்டூர் ஜில்லாவில் சுமார் நூறு கிராமங்கள் கொண்ட பிரதேசத்துக்கும் சட்ட மறுப்பைத் தொடங்குவதற்கு நான் ஒரு வேளை அனுமதி கொடுக்கக்கூடும்.

ஆனால் பொதுஜனச் சட்டமறுப்பு உண்மையில் ஆரம்பமாவதற்கு முன்பு கடைசி முறையாகத் தங்களை வேண்டிக் கொள்கிறேன். இந்திய அரசாங்கத்தின் தலைவராகிய தாங்கள் அரசாங்கத்தின் முறையை மாற்றிக் கொள்ள இணங்குங்கள். பலாத்காரமற்ற நடவடிக்கைகளுக்காகச் சிறைப்பட்டிருக்கும் கைதிகளை யெல்லாம் விடுதலை செய்யுங்கள். அத்தகைய பலாத்காரமற்ற நடவடிக்கைகளைத் தடை செய்வதில்லை யென்று உறுதி சொல்லுங்கள். பத்திரிகைகளுக்கு


To His Excellency
the Viceroy
Delhi
Sir,
Bardoli is a small tehsil in the Surat district having a population of about 87000 all told. It has decided on the 29th ultimo under the presidency of Mr Vithalbhai Patel to embark on mass civil disobedience having proved its fitness for it on terms of the resolution of the All India Congress Committee which met at Delhi during the first week of November. But as I am perhaps the chiefly responsible for Bardoli's

காந்தி மகான் வைஸ்ராய் ரெடிங்குக்கு எழுதிய சரித்திரப் பிரசித்தமான கடிதத்தின் முகப் பகுதி. காந்திஜியின் சொந்தக் கையெழுத்து.

அவர் பம்பாய் மகாநாட்டின் தீர்மானத்துக்கு இணங்கி வரவில்லை. பம்பாய் மகாநாட்டை நடத்தியவர்களுக்கு ஜனவரி 30உ லார்ட் ரெடிங்கினிடமிருந்து பதில் வந்தது. அந்த பதில் "இல்லை" என்பது தான். அதாவது வட்ட மேஜை மகாநாடு கூட்ட முடியாது என்பதுதான். அது விஷயமாக வைஸ்ராயைச் சந்தித்துப் பேச அநுமதி வேண்டுமென்று மிதவாதத் தலைவர்கள் கோரியிருந்தார்கள். அந்தக் கோரிக்கையைக் கூட வைஸ்ராய் ரெடிங் மறுதளித்துவிட்டார்.

ஜனவரி 27உ மகாத்மா பர்தோலி போய்ச் சேர்ந்திருந்தார். 31உ சூரத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. அதற்குள் வைஸ்ராயின் பதிலும் தெரிந்து போய் விட்டது. ஆகவே பர்தோலியில் பொதுஜனச் சட்ட மறுப்பு ஆரம்பிப்பதற்கு மகாத்மாவுக்குக் காரியக் கமிட்டி அதிகாரம் கொடுத்தது.

மறுநாள் அதாவது 1922-ம் வருஷம் பிப்ரவரிமீ 1உ தேச சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற இறுதிக் கடிதத்தை மகாத்மா காந்தி வைஸ்ராய்க்கு எழுதினார். அந்த முக்கியமான கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

மேன்மை தங்கிய வைஸ்ராய்
அவர்களுக்கு

ஐயா,

பம்பாய் மாகாணத்தில் சூரத் ஜில்லாவில் பர்தோலி ஒரு சிறு தாலுகா. அதன் ஜனத்தொகை ஏறக்குறைய 87,000தான்.

பிப்ரவரி 29உ பர்தோலி தாலுகா வாசிகள் ஸ்ரீ வித்தல் பாய் படேல் அவர்களின் தலைமையில் மகாநாடு கூடினார்கள். சென்ற நவம்பர் மாதம் முதல் வாரத்தில் டில்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செய்த தீர்மானத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றித் தகுதி பெற்றுவிட்டபடியால் பொதுஜனச் சட்டமறுப்பு ஆரம்பிப்பது என்று தீர்மானம் செய்தார்கள். இந்தத் தீர்மானத்துக்கு நானே பெரிதும் பொறுப்பாளியானபடியால், எதற்காக பர்தோலிவாசிகள் இத்தகைய தீர்மானத்தைச் செய்தார்கள் என்பதைத் தங்களுக்கும் பொது மக்களுக்கும் விளக்கிக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிலாபத், பஞ்சாப், சுயராஜ்யம் ஆகிய இந்த மூன்று பிரச்னைகள் விஷயமாகவும் இந்தியாவின் கோரிக்கையை இந்திய சர்க்கார் ஏற்க மறுத்து விட்டனர். இந்த மறுப்பு சர்க்காரின் பெருங் குற்றமாகும். இப்படிப்பட்ட குற்றவாளி சர்க்காரை எதிர்த்துப் புரட்சி செய்ய இந்தியா தேசம் தீர்மானித்திருக்கிறது. அந்தத் தீர்மானத்துக்கு ஒரு அறிகுறியாகவே மேற்படி அ. இ. கா. கமிட்டி நிபந்தனைகளுக்குட்பட்டு முதன் முதலில் பர்தோலியில் பொதுஜனச் சட்ட மறுப்பு ஆரம்பிக்க முடிவு செய்திருந்தோம்.

துரதிர்ஷ்டவசமாக, பம்பாயில் சென்ற நவம்பர் 17உ கலவரங்கள் நிகழ்ந்து நம்மைத் துயரத்தில் ஆழ்த்தின. அதன் காரணமாகப் பர்தோலி சட்ட மறுப்பு இயக்கத்தை ஒத்திப் போட நேர்ந்தது.

இதற்கிடையில் தேசமெங்கும் இந்திய சர்க்காரின் உடந்தையின் பேரில் கொடுமையான அடக்கு முறை நடந்திருக்கிறது. வங்காளத்திலும், அஸ்ஸாமிலும், ஐக்ய மாகாணத்திலும், பஞ்சாபிலும், டில்லியிலும் அத்தகைய அடக்கு முறை அமுல் நடந்திருக்கிறது. அதிகாரிகளின் மேற்படி நடவடிக்கைகளை 'அடக்கு முறை' என்று சொல்வதை நீங்கள் ஆட்சேபிக்கிறீர்கள் என்பதை அறிந்திருக்கிறேன். ஆனால் என்னுடைய அபிப்பிராயத்தில், அவசியத்துக்கு அதிகமான நடவடிக்கைகள் எல்லாம் 'அடக்கு முறை'தான் என்பதில் சந்தேகம் இல்லை. சொத்துக்களைச் சூறையாடுதல், குற்றமற்ற ஜனங்களைத் தாக்குதல், சிறையில் கைதிகளுக்குக் கசையடி முதலிய குரூர தண்டனைகள்,—இவையெல்லாம் சட்டத்துக்குட்பட்ட நாகரிக நடவடிக்கைகள் ஆகமாட்டா. ஹர்த்தால் விஷயத்தில் சில இடங்களில் ஒத்துழையாதார் பயமுறுத்தலைக் கையாண்டிருப்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இதற்காக அதிகாரிகள் கையாண்ட கொடிய முறைகளை எந்தவிதத்திலும் நியாயம் என்று சொல்ல முடியாது. பலாத்கார நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக ஏற்பட்ட சட்டங்களை, சாத்வீகத் தொண்டர் படைகளைக் கலைக்கவும் பேச்சு சுதந்திரத்தையும் பத்திரிகை சுதந்திரத்தையும் பறிக்கவும் சர்க்கார் உபயோகப்படுத்தி வருகின்றனர். இதையெல்லாம் 'அடக்குமுறை' என்றுதான் சொல்லியாக வேண்டும்.

ஆகவே இப்போது தேசத்தின் முன்னுள்ள அவசரப் பிரச்னை, பேச்சு சுதந்திரம் - பத்திரிகை சுதந்திரம் - கூட்டம் கூடும் சுதந்திரம் ஆகியவற்றை நிலைநாட்டுவதுதான். தற்போதைய நிலையில் பம்பாயில் கூடிய மாளவியா மகாநாட்டில் எவ்விதத்திலும் கலந்து கொள்ள ஒத்துழையாதார் விரும்பவில்லை. ஆயினும் தேச மக்களுக்கு வீண் துன்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அந்த மகாநாட்டின் முடிவுகளை ஒப்புக்கொள்ளும்படி காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு நான் யோசனை கூறினேன்.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா. கி.

36. வைஸராய்க்கு இறுதிக் கடிதம்

பம்பாயில் மகாநாடு கூட்டிய தலைவர்கள் அந்த மகாநாட்டின் தீர்மானத்தை வைஸராய் ரெடிங் ஏற்றுக் கொள்ளுவார் என்று எதிர்பார்த்தார்கள். ஆகையால் வைஸராயிடமிருந்து பதில் வருவதற்கு அவகாசம் கொடுக்கவேண்டும் என்று மகாத்மா காந்தியைக் கேட்டுக் கொண்டார்கள். மகாத்மாவும் அதற்குச் சம்மதித்தார். ஜனவரி மாதம் 31-ந் தேதி வரையில் காத்திருப்பதாக ஒப்புக்கொண்டார். ஆகவே பம்பாயிலிருந்து மகாத்மா காந்தி சபர்மதி ஆசிரமத்துக்குச் சென்று அங்கே அம்மாதம் 28-ந் தேதி வரையில் காத்திருந்தார்.

ஆனால் வைஸராய் ரெடிங் சாதகமான பதில் அனுப்புவார் என்ற நம்பிக்கை மகாத்மாவுக்குக் கிடையாது. அந்தச் சந்தர்ப்பத்தில் ராஜி ஏற்பாடு எதுவும் நடப்பதை மகாத்மா விரும்பவும் இல்லை. அப்படி ராஜி ஏற்படுமானால் அதை வகிப்பதற்குத் தேசம் தகுதி பெறவில்லை என்று மகாத்மா கருதினார். (இன்றைக்குக்கூட நம்மில் பலர் 'தேசம் பூரண தகுதி பெறுவதற்குச் சிறிது முன்னாலேயே சுயராஜ்யம் வந்து விட்டது' என்று கருதுகிறோம் அல்லவா?)

மகாத்மாவின் உள்ளம் அக்காலத்தில் எப்படித் தத்தளித்துக் கொண்டிருந்தது என்பதை "நவஜீவன்" பத்திரிகைக்கு அவர் அப்போது எழுதிய ஒரு கட்டுரையிலிருந்தும் அறியலாம். அக்கட்டுரையில் மகாத்மா எழுதியதாவது:—

"ராஜி வந்துவிடப் போகிறதே என்ற பயத்தினால் நான் உண்மையிலேயே நடுங்கிக் கொண்டிருக்கிறேன். ராஜி ஏற்பட்டு விட்டால், அதன் பலனாக என்ன நேரிடுமோ? ராஜி ஏற்பட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் அதை நழுவவிட மாட்டேன். ஆயினும் இந்தியாவின் பலம் இவ்வளவுதான் என்பதை நான் அறிந்திருப்பதால், ராஜியை நினைத்தாலே எனக்குப் பயமாயிருக்கிறது. நாம் சரியானபடி சோதனைக்கு உள்ளாகி அதில் தேறி வெளி வந்தாலன்றி, ராஜியினால் நம்முடைய கதி என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. தாயின் வயிற்றில் பத்து மாதம் இருந்து குழந்தை பிறக்க வேண்டும். முன்னாலேயே பிறந்த குழந்தை சீக்கிரத்தில் இறந்து போய் விடும். போர்ச்சுகல் தேசத்தில் மின்னல் புரட்சி நடந்து ஒரு நொடியில் அரசாங்கம் மாறிவிட்டது. ஆனால் அதற்குப் பிறகு அங்கே அரசாங்கம் அடிக்கடி மாறிக்கொண்டேயிருக்கிறது. நிலையான அரசியல் அமைப்பு இன்னமும் ஏற்பட்ட பாடில்லை. 1909-ம் வருஷத்தில் துருக்கியில் திடீர்ப் புரட்சி நடந்து அரசாங்கம் மாறியது. அது குறித்து உலகமெல்லாம் துருக்கிக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பின. ஆனால் அது ஒன்பதுநாள் விந்தையாக முடிந்து மாயக் கனவைப் போல் மறைந்து விட்டது. அதற்குப் பிறகு துருக்கி எவ்வளவோ அநுபவங்களுக்கு உள்ளாக நேர்ந்திருக்கிறது. அந்த தேசம் இன்னும் என்னென்ன அநுபவிக்கவேண்டுமோ, யார் கண்டது? இதையெல்லாம் நினைக்கும் போதுதான் இந்தியாவில் நாம் தயாராவதற்கு முன்னால் ராஜி ஏற்பட்டு விடப் போகிறதே என்று பயப்பட வேண்டியிருக்கிறது."

இவ்விதம் "நவஜீவன்" பத்திரிகையில் மகாத்மா எழுதினார். இந்திய மக்கள் இன்னும் சுதந்திரத்துக்குத் தகுதி பெறவில்லை, சுயராஜ்யம் ஆளுவதற்கு வேண்டிய வலிமையும் ஒற்றுமையும் கட்டுப்பாடும் பெறவில்லை என்ற எண்ணம் மகாத்மாவுக்கு இருந்தது. லார்ட் ரெடிங்கும் வேறொரு விதத்தில் இதே எண்ணம் கொண்டவராயிருந்தார். ஆகையால்

மாதுங்கா; எஸ். எஸ். மணி, மாதுங்கா; அனந்தநாராயணன், மாதுங்கா; கே. எஸ். சங்கரன், பாந்துப்; கடலையாண்டி, பம்பாய்; எஸ். எம். அன்பய்யா, பம்பாய்; எம். நரசிம்மம், கல்யாண்; பி. என். கோபாலன், கல்யாண்; ஏ. ஜி. சாஞ்ஜிரி, கோரைகாண்; பி.எம். கடக்தோண்ட், தாதர்; ஏ. குட்வீஹே, பம்பாய்; பி. எம். டி'மெல்லோ, பம்பாய்; ஜே. ஆர். டி'மெல்லோ, பம்பாய்; ஏ. எம். லோதாஹோ, பம்பாய்; கே. டி. நாயக், பம்பாய்; வி. ஆர். குல்கர்னி, தாதர்; டி. கே. தக்ரே, பம்பாய்; வி. என். பி'ஜே. தாதர்; சில்லறை நன்கொடை (0-8-0).

ஸ்ரீ எஸ். சுப்பையாத் தேவர், ஆண்டிக்காடு கிராம காங்கிரஸ் கமிட்டி மூலமாக ரூபாய் 25—8—0க்கு விவரம்:—

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் குப்புசாமித் தேவர், ஆண்டிக்காடு; கே. வி. சீனிவாச ஐயர், எட்டிவயல்.

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் க. கயாரோகண தேவர், எட்டிவயல்; சி. சுப்பையாத் தேவர், ஆண்டிக்காடு; ஏ. ஆர். வைத்தியநாதன், ஆண்டிக்காடு.

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பெ. நடேசத் தேவர், எட்டிவயல்; ஆ. சுந்தரம் பிள்ளை, ஆண்டிக்காடு; வெ. ஆறுமுகத் தேவர், ஆண்டிக்காடு; சி. சிதம்பரத் தேவர், ஆண்டிக்காடு; கி. சேது தேவர், அழகியநாயகிபுரம்; ச. சொப்பையாத் தேவர், ஆண்டிக்காடு; மா. கணேசத் தேவர், ஆண்டிக்காடு; அ. மருதமுத்துச் செட்டியார், ஆண்டிக்காடு; கு. முத்தையா பண்டாரம், ஆண்டிக்காடு; சில்லறை நன்கொடைகள் (0-8-0).

இரங்கூன் ஸ்ரீ நா. பழ. இராமநாதன் அவர்களின் மூலமாக இரங்கூனிலுள்ள தமிழ்நாட்டு அன்பர்களின் நன்கொடை ரூபாய் 335 0—0க்கு விவரம்:—

ஸ்ரீ சி. ராம. செ. சொக்கலிங்கம் செட்டியார்	51	0	0
ஸ்ரீ வ. சா. சாத்தப்பன்	51	0	0
ஸ்ரீ ராம. வீர. ராமசாமிச் செட்டியார்	31	0	0
ஸ்ரீ மு. அ. சிதம்பரம்	31	0	0
ஸ்ரீ நா. பழ. இராமநாதன்	21	0	0
ஸ்ரீ ஆ.மு.வீர. வீரப்ப செட்டியார்	21	0	0
ஸ்ரீ மு. சித.	21	0	0
ஸ்ரீ பெ. சி. அ. முத்துக்கருப்பன்	16	0	0
ஸ்ரீ சு. பி. சி. திரு. திருப்பதிச் செட்டியார்	16	0	0
ஸ்ரீ வீ. முரு. பெ.	11	0	0
ஸ்ரீ வீ ராம.	11	0	0
ஸ்ரீ வெ. கா.	7	0	0

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் பெரி. மூ: மூ. ராம; பழ. வே. பழ. சோமசுந்தரம் செட்டியார்; சுப. மூ. முத்துக்கருப்பன் செட்டியார்; மூ. அழ; என். வி. நாயுடு; நீ. பெரி. நீலமேகம்; சே. கரு; கரு. மூ. சொக்கலிங்கம்.

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் நா. சேதுராமன்; அ. அங்குச்சாமி.

ஆக மொத்தம் நாளதுவரை வரவு

ரூ. 59,870 13 5

வரதட்சணைப் பேய்!

மார்ச் 19-ந் தேதி 'கல்கி' இதழில் சகோதரி கோ. அலங்காரம் எழுதிய 'வரதட்சணைப் பேய் ஒழியாதா?' என்ற கடிதத்தைப் படித்துப் பார்த்தேன்.

பெண்கள் கல்யாணமாகிச் சுகமாக இருப்பது என்பது ஒரு அதிர்ஷ்டப் போட்டியைப் போன்றதாகும். ஒரு பெண்ணுக்குப் பணம், படிப்பு, குலம், கோத்திரம், பாட்டு, அழகு, ஜாதகம் முதலியவை கூடியவரை சுமாராக இருந்தால் கூட அவள் கலியாணமான பின்பு சந்தோஷமாக இருப்பாள் என்ற நிச்சயம் இருப்பதில்லை. இதற்குச் சிலர் விதியின் தலையில் பழி போட்டு விடுகிறார்கள். வெள்ளிப் பாத்திரம் கனமில்லை, பொங்கலுக்குச் சீர் இல்லை, தீபாவளிக்கு வைர மோதிரமில்லை என்ற காரணங்களைச் சொல்லிப் பெண்களை 'வாழாவெட்டி' என்ற பட்டத்திற்கு ஆளாக்கும் சில பிரகிருதிகள் இருக்கும்போது, விதி எவ்விதம் காரணமாகும்? தங்களுடைய பெண்களுக்கு மணம் செய்து கொடுத்த பெற்றோர்கள், தங்கள் பெண்கள் 'வாழாவெட்டி'யாக வந்த பிறகு, மனம் நொந்து அதே வியாகூலத்தில் முக்கால்வாசிப் பேர் மரணமடைகின்றனர்.

அப்படித் தப்பித் தவறி பெண்கள் சிலர், அநேக விதமான வசைச் சொற்களைக் கேட்டுக்கொண்டு, கணவன் வீட்டிலேயே இருக்க நேரிட்டால், அப்பெண்கள் படும் கஷ்டங்கள் கொஞ்சமல்ல. இதற்கெல்லாம் விதி காரணமாகுமா? மேற்சொன்ன விஷயங்கள் இன்றிச் சந்தோஷமாக வாழும் பெண்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனாலும் அநேகம் பேர் வாழ்க்கையில் பாலைவன வெம்மையைத்தான் உணர்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் குளிர்ந்த நீரோடை காண முடியுமா?

கோயமுத்தூர்
21—3—50

ராதாமணி

[மார்ச் 19-ந் தேதி "கல்கி" இதழில் வெளியான ஸ்ரீமதி அலங்காரம் அவர்களின் கடிதம் புதுடில்லியிலிருந்து யாழ்ப்பாணம் வரையில் பலருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. பல சகோதரிகள் கண்ணீர் வடித்து அநுதாபப்பட்டு எழுதியிருக்கிறார்கள். சில வீர வாலிபர்கள் 'ஜாதகம்' வாங்கி அனுப்பும்படி கேட்டிருக்கிறார்கள். ஸ்ரீமதி அலங்காரம் மேற்படி வட்டமேஜைக் கடிதம் எழுதின உடனேயே அவருக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டதாகத் தெரியப்படுத்தியிருக்கிறார். இந்தச் செய்தி நமக்கு மகிழ்ச்சி அளித்தது போலவே நம் நேயர்களுக்கும் மகிழ்ச்சி தருமென்று நம்புகிறோம். —ஆசிரியர்.]

ஸ்ரீ எஸ். மார்க்கபந்து, கன்டிராக்டர், ஆழ்வார்ப்பேட்டை, சென்னை. 25 0 0

ரூ. 10—0—0 : ஸ்ரீமான்கள் தான்மல், திருவல்லிக்கேணி, சென்னை; ஏ. என். தனபாலச் செட்டியார், ரங்கநாதபுரம் தெரு, தியாகராஜ நகரம், சென்னை; எம். எம். ராவ், பங்களூர்; கே. கிருஷ்ண ஐயர், திருச்சூர்; பி.பி. மோகன் பிரதர்ஸ், சென்னை; டி. எஸ். சீனிவாசன், கோயமுத்தூர்.

ரூ. 8 0—0 : ஸ்ரீ சுவாமி சத்தியானந்த சரஸ்வதி, சென்னை

ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் எம். எஸ். சம்பந்தப்பா, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை; குரோம் பாக்டரி, பிராட்வே, சென்னை; வி. கேசவன், திருவனந்தபுரம்; டி. கன்னையா, நகரப்பேட்டை, பெங்களூர்; டி. சி. நாகலிங்கம், சென்னை; பி. பி. மோகன் பிரதர்ஸ், சென்னை; ஜனாப் முகம்மது இப்ராஹிம், பாய் கடை, பத்தமடை, திருநெல்வேலி.

ரூ. 4—0—0 மெஸர்ஸ் சீதாராமன் கம்பெனி, சென்னை.

ரூ. 3—0—0 மெஸர்ஸ் எஸ். டி. கிருஷ்ணு கம்பெனி, சேலம்.

ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள் தே. தர்மலிங்கம், சென்னை; ஜி. எம். வெங்கடேசன், எழும்பூர், சென்னை; எம்பயர் இன்டஸ்ட்டிரீஸ், தில்லி; மெஸர்ஸ் தம்பு கம்பெனி, புரசைவாக்கம், சென்னை; மைசூர் சுகந்த ராஜ்ஜுப அகர்பத்தி, சந்தாபேட்டை, மைசூர்; கிரீ வனியம் கடை, திருவல்லிக்கேணி, சென்னை; ஜெய சாரதா நாவல்டி ஸ்டோர், பெங்களூர்; சஞ்சனா டிரேட்டர்ஸ், மங்களூர்; குமரன் காண்டர், காஞ்சீபுரம்; கே. எஸ். சுப்பிரமணியம், கோயமுத்தூர்; பி. ராஜு, கோயமுத்தூர்; பி. எஸ். ரங்கையர், திருச்சிறுப்பள்ளி; எம். டி. ஜாக்கப், திருச்சூர்; டி. எஸ். சுகந்தலய்யா, பெங்களூர்; ஸ்ரீமதி பி. மீனாட்சி, அக்பராபாத், சென்னை.

ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் எம். வி. குமார், திருவல்லிக்கேணி, சென்னை; நாராயணசாமி, சென்னை; நாராயணன், ஆனை, சென்னை; இ. கணபதி ஐயர், தியாகராஜ நகரம், சென்னை; எம். கே. வெங்கடராமன், வடக்கு தியாகராஜ நகரம், சென்னை; ஆர். ஏ. ஆனந்தன், வடக்குத் தியாகராஜ நகரம், சென்னை; எஸ். கே. ஜானகிராமய்யர், தியாகராஜ நகர், சென்னை; என். கிருஷ்ணமூர்த்தி, சென்னை; ஏ கிரீம் பிரான்ஸிஸ், சென்னை; கே. சீனிவாசன், தியாகராஜ நகரம்; ஏ. எஸ். சந்திரன், திருவல்லிக்கேணி, சென்னை; கே சதாசிவன், ராயப்பேட்டை, சென்னை; எம். எம். தீனதயாளு, சென்னை; இ. வி. நரசிம்மன், சென்னை; எம். கோபாலசாமி ஐயர், சென்னை; பி. எஸ். வரதராஜன், திருவல்லிக்கேணி; எஸ். ராஜரத்தினம் பிள்ளை, சென்னை; ஏ கே. சையது, சென்னை; என். சீனிவாச ராவ், திருவல்லிக்கேணி; கிருஷ்ணமூர்த்தி ஐயர், மயிலாப்பூர், சென்னை; கோபால ராவ், கிண்டி; சீதாராமன், சென்னை; பி. கோதண்டராமன், தியாகராய நகரம்; எம். வாசு, சென்னை; டி.ஜே. வீராசாமி, சென்னை; எம். வி கிருஷ்ணசாமி, சென்னை; வி. சுந்தரம் ஐயர், சென்னை, ஓரியண்டல் சேமியா, சென்னை; ஜெயபாரதம் கதர்க்கடை, பெங்களூர்; ஆர். வேணுகோபால் கோயமுத்தூர்; ஆர். ராஜுப் பிள்ளை, ஆயிரம் விளக்கு, சென்னை; எம். கிருஷ்ணசாமி, மேற்கு மாம்பலம், சென்னை; குஞ்சிதபாதம், கும்பகோணம்; கே. ஜி. கே. மேனன், திருச்சூர்; வி. ராமசந்திரன், திருச்சூர்; பி. சுந்தசாமி, பங்களூர்; வி. கிருஷ்ணசாமி, கோயமுத்தூர்; கோபாலசாமி, கோயமுத்தூர்.

ஸ்ரீ என். ஜயராமன் இந்தியன் கேபிள் கம்பெனி லிமிடெட், கோல்மூரி மூலமாக ரூ. 77—0—0-க்கு விவரம் :—

ஸ்ரீ எம். எஸ். கோபாலன், டாட்டா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி, ஜாம்ஷெட்பூர் 20—0—0

ரூ. 5—0—0 : ஸ்ரீமான்கள் வி. குருசாமி சாஸ்திரிகள், ரிடயர்டு ஹெட்மாஸ்டர் திருக்காட்டுப்பள்ளி, அக்ரிகோ; சந்திரகாந்த் தக்கர், அக்ரிகோ; தென் இந்திய மாதர் சங்கம், (கிழக்கு) கோல்மூரி.

ரூ. 3—0—0 : ஸ்ரீமான்கள் ஆர். டி. ராஜன், டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; கே என். கிருஷ்ணன், டாட்டா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி, அக்ரிகோ;

ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள் எப். ரபர்ட்ஸ், தி இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; பி சிவராமன், தி டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; வி. கோபால், தி டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; வி. எஸ். ஏ ராவ், தி டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; கே. எம். பாலன், டிஸ்கோ லிமிடெட், அக்ரிகோ; ஏ. நாராயணன், அக்ரிகோ; வி. வி. சர்மா, போர்மென், அக்ரிகோ; கே. வி ஏ. பத்மநாபன், கெமிஸ்ட், அக்ரிகோ; கே. எச். கோபால கிருஷ்ணன், டிஸ்கோ லிமிடெட், அக்ரிகோ; கே. பி. சுப்ரமணிய அய்யர், டிஸ்கோ லிமிடெட், அக்ரிகோ; வி. ஆர். கே. மேனன், தி டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; என். என். அய்யர், டிஸ்கோ லிமிடெட், ராம்தாஸ் பட்டா.

ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் என். ராமநாதன், தி டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; எம். எஸ். ராஜன், தி டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; பி. எஸ். கே. ராவ், டிஸ்கோ லிமிடெட், அக்ரிகோ; டி. வி. எஸ். நாராயண அய்யர், டிஸ்கோ லிமிடெட், பர்மா மைன்ஸ்; கி. கோபால கிருஷ்ண சாஸ்திரி, தக்கர் ஹவுஸ், கோல்மூரி; ஸ்ரீமதி கமலா, தி டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; ஆர். சுப்பிரமணியம், டிஸ்கோ லிமிடெட், ஜாம்ஷெட்பூர்; எஸ். கிருஷ்ண அய்யர், டிஸ்கோ லிமிடெட், பர்மா மைன்ஸ்; டி. எஸ். ராமசாமி, டிஸ்கோ லிமிடெட், பர்மா மைன்ஸ்; செங்குப்தா தாஸ், கேபிள் கம்பெனி, கோல்மூரி; ஆர். சந்தானம் தி டின் பிளேட் கம்பெனி, கோல்மூரி; கி என். சுவாமிநாத அய்யர், டிஸ்கோ லிமிடெட், பர்மா மைன்ஸ்.

ஸ்ரீ வி. எஸ். சுந்தரராஜன், (க. ஸ.) பம்பாய் மூலம் ரூ. 48 12—0-க்கு விவரம் :—

ரூ. 4 0—0 : ஸ்ரீ இ. கண்ணன், "கலை" ஏஜண்ட், பம்பாய்.

ரூ. 3—0—0 : ஸ்ரீமான்கள் வி. எஸ். சுந்தரராஜன், கல்யாண்; "சுபஸ்ரீ", கல்யாண்; இளமாறின் நாவுக், பம்பாய்.

ரூ. 2—0—0 : ஸ்ரீமான்கள் என். ஸ்ரீநிவாசன், கோரைகான்; கே. ஜி. மூர்த்தி, கல்யாண்; எச். எஸ். ராமசாமி, கோரைகான்; டி. எஸ். ஹரிஹரன், மாதுங்கா.

ரூ. 1—4—0 ஸ்ரீ கே. ஜி. சமேல், பம்பாய்;

ரூ. 1—0—0 : ஸ்ரீமான்கள் எஸ். ராமமூர்த்தி, கல்யாண்; எச். எஸ். பத்மநாபன், கோரைகான்; ஆர். ராமநாதன், மாதுங்கா; வி. ராமதுரை, கல்யாண்; கே. ஜகதீசன், கல்யாண்; எஸ். எஸ். ரங்கராஜன், கல்யாண்; எஸ். ஆர். வெங்கடராமன், கல்யாண்; ஜி. தியாகராஜன், மாதுங்கா; பி.எம். ராமநாதன்,

மகாத்மா காந்தி ஸ்தூபி நிதி

கோயமுத்தூரில் நடந்த ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரி மூலமாக நன்கொடை ரூ. 5,001 0 0

மெஸ்ஸர்ஸ் வி. தேவராஜுலு செட்டி அண்டு சன்ஸ் அண்டு சாமி வெங்கடாசலம் செட்டி கம்பெனி, கிடங்குத் தெரு, சென்னை. 500 0 0

ஸ்ரீ ஆ. முருகன், சபாபதிபுரம், திருச்செந்தூர் 90 0 0

பாரத் இன்ஷியூரன்ஸ் கம்பெனி சிப்பந்திகள், மதுரை 70 0 0

ஸ்ரீ பி. மணிசங்கர், பூனியடித் தெரு, திருச்செந்தூர் 50 0 0

ஸ்ரீ அ. க. க. சுப்பிரமணியம், பழனி, ஓவேனர் 19 13 0

டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி, நுங்கம்பாக்கம் 15 0 0

ஜமேதார் ஸ்ரீ ஏ. சுவாமிநாதன், புதுடில்லி 10 0 0

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எஸ். வி. சுவாமிநாதன், புதுடில்லி; டி. கே. சுப்ரமணியராவ், திட்டவுஜா: பி. எம். ராமலிங்கம், கலர் டிரேடிங் கம்பெனி, சென்னை.

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் கே. எஸ். தரும ராஜா, ராஜா காப்பி ஹோட்டல், மன்னி; எஸ். ஸ்ரீதரன், கடலூர்; ரூ. 1—8—0: வகுப்புத் தலைவர், நாலாவது பாரம், பி. பகுதி, போர்டு ஹைஸ்கூல், போளூர்.

எட்டயபுரம் பாரதி மண்டப பராமரிப்புக் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீ மு. கந்தசாமிச் செட்டியார் மூலமாக 423—0—0க்கு விவரம்:

ஸ்ரீ ச. முத்துசாமி செட்டியார் & சன்ஸ், நகை வியாபாரம், தெற்கு ஆவணிமூல வீதி, மதுரை 51 0 0

ஸ்ரீ ஏ. எஸ். எஸ். எம். சோம சுந்தரம் செட்டியார், நகை வியா பாரம், மதுரை 25 0 0

ஸ்ரீ இ. மு. ஆ. ராமச்சந்திரன் பிரதர்ஸ், ஜவுளி வியாபாரம், எட்டயபுரம் 21 0 0

ஸ்ரீ இ. சுவாமிநாதன், நிருபர், பி. டி. ஐ., எட்டயபுரம் 20 0 0

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் டி. எம். எம். மதுரை நாடார் அண்டு கோ., வியாபாரம், கீழ மாசி வீதி, மதுரை; ப. ச. பலவேச நாடார், வியாபாரம், கீழ மாசி வீதி, மதுரை; க. மா. பொன்னப்ப ராவுத்தர், வியாபாரம், கொடைக்கானல்; ஆ. செ. க. அ. வி. கரு சாமி பூசாரியார், பலசரக்கு மளிகை, கம்பம்; ஆர். கே. கோடியப்பப் பிள்ளை, காப்பி ஹோட்டல், கம்பம்; செ. அடைக்கலசாமி முதலியார், ஆனந்தகிரி, கொடைக்கானல்; பீ. அ. மு. முகம்மது, போஸ்டாபீஸ் ரோடு, கொடைக்கானல்; பி. அ. மு. காதர் மைதீன் ராவுத்தர், போஸ்டாபீஸ் ரோடு, கொடைக்கானல்; உ. காதர்மைதீன் ராவுத்தர், போஸ்டாபீஸ் ரோடு, கொடைக்கானல்; அ. சையது ராவுத்தர், ஆனந்தகிரி, கொடைக்கானல்; கி. செ. வாவேர் ராவுத்தர், ஆனந்தகிரி, கொடைக்கானல்; ப. அ. கல்லமுத்து முதலியார் வியாபாரம், வில்லைப்பட்டி, கொடைக் கானல்; பி. மு. அ. ச. ரெங்கசாமி நாடார், வியாபாரம், கொடைக்கானல்; மு. கா. முகம்மது நயினார் ராவுத்தர், வியாபாரம், ஆப்சர் வேட்டர், கொடைக்கானல்; கே. பி. மைதீன் ராவுத்தர், மாடர்ன் கபே, கொடைக்கானல்; சா. இ. சையது முகம்மது ராவுத்தர், வியாபாரம், கொடைக்கானல்; உ. சையது முகம்மது ராவுத்தர், ஆனந்தகிரி, கொடைக் கானல்; பெ. இ. முகம்மது அப்துல் ரகீம் ராவுத்தர், பலசரக்கு வியாபாரம், கே. இ. எஸ். ரோடு, கொடைக்கானல்; வி. ப. பெ. தனுஷ்கோடி நாடார், முத்துலாபுரம்.

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் பீ. க. மாத்தியப்ப நாடார், முத்துலாபுரம்; என். கே. சுப்பா நாயக்கர் அண்டு செல்வ நாயக்கர், சிந்தலக் கரை; சந்திரா பஸ் லைன்ஸ், எட்டயபுரம்; க. கந்தசாமி நாயக்கர் அண்டு சுப்பா நாயக் கர், சிந்தலக்கரை; ச. ராமசாமி ரெட்டியார் அண்டு சங்கர ரெட்டியார், வெங்கடேஸ்வர புரம்; க. கண்ணப்ப ரெட்டியார் அண்டு சுந்தர ரெட்டியார், ராஜாபட்டி; எஸ். எஸ். அருணாசலம் செட்டியார் அண்டு பிரதர்ஸ், (செல்வ மாளிகை), தெற்கு ஆவணிமூல வீதி, மதுரை; கி. அ. ச. சோமசுந்தரம் செட்டியார் அண்டு கோ., மேல ஆவணி மூலவீதி, மதுரை; கிருஷ்ண ஆசாரி, எட்டயபுரம்; மு. கைலாசசுந்தரம், உப காரியதரிசி, பாரதி மண்டபம், எட்டயபுரம்; விசுவநாதன், எட்டயபுரம்.

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் வி. குப்புசாமி அய்யர், கோப்பம்பட்டி; வெ. வெங்கிட சாமி நாயக்கர், கோப்பம்பட்டி; எஸ். பி. ராஜு வெங்கடராம நாயக்கர், கோப்பம்பட்டி; எச். நாராயணன், வாத்தியார், கோப்பம் பட்டி; பூவு ரெட்டியார், துறையூர்; எஸ். வீரபாகுப் பிள்ளை, குருவிநத்தம்; ஸ்ரீனி வாசப் பெருமாள் நாயக்கர், வடக்கு வண் டானம்; அ. திம்மு ரெட்டியார், துறையூர்; ஆர். மகாலிங்கம் செட்டியார், துறையூர்; ப. செல்லையா நாடார், துறையூர்; தெ. இ. சங்கரலிங்க நாடார், சாச்சி; க. ஆசீர் வாதம், கோட்டூர்; பேச்சிமுத்து பாண்டியன், எட்டயபுரம்; எஸ். நாராயணதாஸ், எட்டய புரம்; வீரப்ப நாயக்கர், சின்னமலைக்குன்று; க. பு. அ. சோலையப்பன், சின்னமலைக்குன்று; கி. வே. குமாரசாமி நாயக்கர், சின்னமலைக் குன்று; பிச்சை நாடார், சின்னமலைக்குன்று; ராமசாமி நாடார், சின்னமலைக்குன்று; வெங் கடசாமி நாயக்கர், சின்னமலைக்குன்று; முத்துப்பேச்சி, சின்னமலைக்குன்று; ஸ்ரீனிவாச நாயக்கர், சாத்தூரப்ப நாயக்கன்பட்டி; வை சுப்பா நாயக்கர், சின்னமலைக்குன்று.

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எம். அருணாசலம் பிள்ளை, தூத்துக்குடி; வி வயிரவன் செட்டி, மு. கி. அண்டு பிரதர் ஷராப், எட்டயபுரம்; மு. அய்யாச்சாமி, மு. கி. பிரதர், ஷராப் எட்டயபுரம்; மா. ராமச்சந்திரன் செட்டியார், மு. கி. அண்டு பிரதர், ஷராப், எட்டயபுரம்; ரா. அ. காசிச் செட்டியார், மு. கி. அண்டு பிரதர், பிராஞ்சு, எட்டயபுரம்; எஸ். பீ. மகம்மது, எட்டயபுரம்; கந்தசாமி தாஸ், எட்டயபுரம்; பங்காரு ராஜு, எட்டயபுரம்; சுந்தரமூர்த்தியாப் பிள்ளை, எட்டயபுரம்; கருப்புசாமித் தேவர், எட்டயபுரம்; சுந்தர ராஜன், எட்டயபுரம்; ஆறுமுகம் பிள்ளை, எட்டயபுரம்; கோட்டைசாமிச் செட்டியார், சங்கரஞ் செட்டியார், எட்டயபுரம்; எல்லப்ப நாயுடு, எட்டயபுரம்.

ஸ்ரீ ச. துரைக்கண்ணு முதலியார், தக்கர் பாபா வித்தியாலயம், தியாகராஜ நகரம், சென்னை மூலமாக ரூ. 230-க்கு விவரம்:—

மெஸ்ஸர்ஸ் ஸ்ரீநிதி கம்பெனி லிமிடெட், சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை 25 0 0

ஆகாசவெடி

"பீகாரில் ஜமீன்தாரி ஒழிப்பு வேலைக்கு வேண்டிய ரிகார்டுகளை அச்சிடுவதற்கு மட்டும் 361½ டன் காகிதம் வேண்டியிருக்கிறது. இதற்காக பீகாரின் பட்ஜெட்டில் ஏழு லட்சத்து இருபதாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது."

—ஒரு செய்தி

சர்க்காருக்கு ஏற்படும் இந்தச் செலவுத் தொகைக்கு ஜமீன்தார்கள் ஏதாவது நஷ்ட ஈடு கொடுப்பார்களா?

★

"சந்திரனை குரு பார்ப்பதின் காரணமாகச் சவல் போன்ற பொருள்களின் விலை மலிந்து விடும்."— ஒரு ஜோஸ்யர்

இந்தச் செய்தியைப் பாகிஸ்தான் பிரதமர் பார்க்க நேரிட்டால் குருவுக்கும் சந்திரனுக்கும் ஆபத்து நேரிடலாம்!

★

"ராஜ மகேந்திரபுரத்தில் அச்சிடப்பட்ட 'வஜ்ராயுதம்' என்ற தெலுங்கு வெளியீட்டைச் சென்னை சர்க்கார் பறிமுதல் செய்து விட்டனர்" —செய்தி

இந்தப் பறிமுதல் சென்னை சர்க்காரின் ஆயுதப் பரிகரணத் திட்டத்தைச் சேர்ந்ததாயிருக்கலாம்!

★

"'நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோட்' என்ற பெயர் நீளமாக இருப்பதால் அதை இனி 'நேதாஜி ரோட்' என்று சுருக்கமாக மாற்றிவிடப் போவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது."

— ஒரு செய்தி

காலஞ் சென்ற தலைவர்களின் பெயரைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து வருகிறோம் என்பதற்கு இது அத்தாட்சி.

★

"ஐக்யநாடு ஸ்தாபனக் கட்டடச் சொந்தக்காரர்களான ஸ்பெர்ரி கார்ப்பொரேஷனின் சம்பள பட்டுவாடாத் தொகை பூராவையும் வில்லி என்ற பிரசித்த கொள்ளைக்காரன் கொள்ளையிடத் திட்டமிட்டிருப்பதாக அறிந்து மேற்படி கட்டடத்தைச் சுற்றி பலத்த போலீஸ் பந்தோபஸ்து செய்திருக்கிறார்கள். சம்பளத் தொகை சில கோடி டாலர் என்று கூறப்படுகிறது." —ஒரு செய்தி

சம்பளத் தொகை சில கோடி டாலரா? இதுவே ஒரு பெரிய கொள்ளையாக இருக்கும் போலிருக்கிறதே!

"இந்தியா பாகிஸ்தான் சணலை ஏற்கவில்லையென்றால் கவலையில்லை பாகிஸ்தான் சணலுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது." —ஒரு செய்தி

முக்கியமாக ஐக்ய தேசச் சபையில் கயிறு திரித்துக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் பிரதிநிதி ஜபருல்லாகானுக்கே அவ்வளவு சணலும் போதாதே!

★

"லாரி — மாட்டுவண்டி — மோதல்."

— பத்திரிகைத் தலைப்பு

லாரி மோதியதால் மாட்டு வண்டி இந்தக் கதியை அடைந்தது போலும்!

★

"அஸ்ஸாமில் ரோடுகள் போட்டதில் இரண்டு கோடி ரூபாய்கள் வீணாக்கப்பட்டு, முடிவில் அந்த ரஸ்தாக்கள் உபயோகமில்லை என்று கைவிடப்பட்டன."

—ஒரு செய்தி

ரோடுகளின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை பார்த்த பிறகே இரண்டு கோடியும் வீண் என்ற முடிவுக்கு வந்திருக்க வேண்டும்!

★

"சென்னை நெருப்பணைக்கும் படையின் வருஷாந்திரக் காட்சி ஒன்று ஐலண்டு மைதானத்தில் நடைபெறும். பிலிம் முதலியவற்றில் தீப்பிடித்துக் கொண்டால் எப்படி அணைப்பது என்பதை அக்காட்சியில் பிரத்யட்சமாய்ச் செய்து காட்டுவார்கள்." — செய்தி

இந்தச் சோதனையில் எந்தெந்தப் படங்களின் பிலிம்களைக் கொளுத்தலாம் என்பது பற்றி ரஸிகர்களின் அபிப்பிராயம் கேட்கப்படும் என்று நம்புகிறோம்.

★

"விவாகங்களில் உணவுப் பொருள்களை வீணாக்குகிறார்கள்."

—சட்ட சபையில் ஒரு மந்திரி

சட்ட சபை விவாதங்களில் நேரத்தை வீணாக்குகிறார்கள்!

★

"சட்ட சபை அங்கத்தினர்களுக்கு, சபை நடக்கும் நேரங்களில் பல வசதிகள் செய்து தரவேண்டும். முக்கியமாய்க் குடி தண்ணீர் வசதி அவசியம் வேண்டும்."

—ஒரு சட்டசபை அங்கத்தினர்

பத்து வருஷ காலத்தில் எல்லா இடங்களிலும் குடி தண்ணீர் வசதி செய்து தரப்படும் என்ற சர்க்காரின் திட்டம் இதே சட்ட சபையில்தானே இரண்டு நாளைக்கு முன் ஆஜர் செய்யப்பட்டது? அதற்குள் இவ்வளவு அவசரமா?

பிரமை. இந்த விஷயம் உங்களுக்குத் தெரியும் அல்லவா?" என்று கேட்டாள்.

"உருவம் உள்ள பொருளை உபாசிப்பது சரியா, தவறு என்னும் விஷயத்தைத் தீர்மானிப்பது உன் வேலை யல்ல, நடனராணி! நீ என்னுடைய சிஷ்யை. நான் சொல்வதைக் கேட்க வேண்டியது உன்னுடைய கடமை. தெரிந்ததா?" என்று சொல்லியவாறே குமாரகிரி விறைப்பாக நிமிர்ந்து நின்றான்.



அதைக் கேட்டுச் சித்திரலேகா சிறிதும் பயப்படவில்லை. அவள் மிகவும் தைரியமான குரலில், "யோகி! தாங்கள் தன்னை மறந்து பேசுகிறீர்கள். நிறுத்துங்கள்! தங்களுக்கு எதிரே நின்று கொண்டிருக்கும் இந்தப் பெண் பலமற்றவள் அல்ல; கதியற்றவள் அல்ல; காதியற்றவள் அல்ல. தாங்கள் நினைத்தபடி யெல்லாம் அவளை ஆட்டி வைக்க முடியாது; அடக்கி ஆளவும் முடியாது. தாங்கள் எனக்குத் தீக்ஷை அளித்து விட்டதாகவும் நான் தங்களுடைய சிஷ்யை ஆகிவிட்டதாகவும் நினைக்கிறீர்களே, அது வீண் பிரமை; வெறும் கனவு என்பது நினைவிருக்கட்டும். வீண் பிரமை, கனவு என்று சொல்வதுகூடத் தவறு. தாங்கள் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளப் பார்க்கிறீர்கள் என்று சொல்வதுதான் சரி. தாங்கள் இம்மாதிரியெல்லாம் யாருக்குக் கட்டளை யிடுகிறீர்கள்? தாங்கள் எந்தப் பெண்ணை அடக்கி ஆள விரும்புகிறீர்களோ அவள் உங்களையே அடிமைகொண்டு விட்டாள் என்பது இன்னுமா உங்களுக்கு விளங்கவில்லை?" என்று கேட்டாள்.

அவள் சொன்னதைக் கேட்டதும் குமாரகிரியின் முகம் சுண்டி விட்டது. அவன் அப்படியே அயர்ந்துபோய் சிலைபோல உட்கார்ந்து விட்டான். பிறகு மிகவும் பரிதாபமான குரலில், "நடனராணி! நான் உன்னைக் காதலிக்கிறேன்!" என்றான். (தொடரும்)



மேன்மை தங்கிய சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா அவர்கள் சமீபத்தில் தென்காசிக்கு விஜயம் செய்தபோது தென்காசி நகர மக்கள் அவருக்குக் குதூகலமான வரவேற்பு அளித்தார்கள். வரவேற்பு வைபவங்களில் உதவி புரிந்த தொண்டர் படையினரை மேலே காணலாம். தொப்பி யணிந்திருப்பவர் தொண்டர் படைத் தலைவர் காப்டன் ரீசவு முகம்மது; அவருக்கு இடப்புறத்தில் இருப்பவர் ஸ்ரீ துரைராஜ பாண்டியன் எம். எல். ஏ.

இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே சித்திரலேகாவின் கண்களில் ஒருவிதமான வெறி தோன்றியது. அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று சொல்லும்படி இருந்தது அவள் பார்த்த அந்தப் பார்வை. அமைதியே உருவெடுத்த அவளுடைய முகாரவிந்தம் விகாரமடைந்து விட்டது. ஆவேசத்தில் அவளுடைய உடல் 'வெட வெட' வென்று நடுங்கியது. உதடுகள் 'பட பட' வென்று துடித்தன.

சித்திரலேகாவின் அந்த பயங்கர ரூபத்தைக் கண்ட விசாலதேவன் கதிகலங்கிப் போய்விட்டான். அவன் நடுங்கியவாறே மிகவும் மெதுவான குரலில், "அம்மணி! தாங்கள் தங்களுடைய கடந்தகால வாழ்க்கையையே மறுபடியும் மேற்கொள்ள முடியாதா?" என்று கேட்டான்.

சித்திரலேகா 'கட கட' வென்று பேய்ச் சிரிப்புச் சிரித்தாள். "என்ன கேட்டாய்? கடந்த கால வாழ்க்கையை மறுபடியும் மேற்கொள்ள முடியாதா என்றுதானே? இதென்ன சுத்த அசட்டுத்தனமான கேள்வி கேட்கிறாய்! நான் எவ்வளவு தூரம் முன்னேறி வந்து விட்டேன்! இனிப் பின் திரும்பிப் போவதா? பின் திரும்பிப் போவதற்காகவா நான் இவ்வளவு தூரம் முன்னேறி வந்தேன்? இனிப் பின் திரும்பிப்போவது பயங்கொள்ளித்தனம்; பேடித்தனம். அது மட்டும் அல்ல; இயற்கையின் சட்ட திட்டங்களுக்குப் புறம்பானது. இந்த உலகத்திலே யாரால் பின்னோக்கிப் போகமுடியும்? இன்றுவரை எவராவது பின்னோக்கிப் போக முடிந்திருக்கிறதா? யாராவது பின்னோக்கிப் போயிருப்பதை நீ கண்ணால் கண்டிருக்கிறாயா, அல்லது கேள்விப்பட்டுத்தா னிருக்கிறாயா? ஒவ்வொரு கணமும் முன்னேறி மனிதன் மரணத்தின் வாயில் போய் விழுகிறான். பின் நோக்கிச் செல்ல முடிந்தால் மனிதன் அமரனாகிவிட மாட்டானா? சிரஞ்சீவியாகிவிட மாட்டானா? பாவமோ, புண்ணியமோ எதுவா யிருந்தாலும் சரி; மேலே மேலே முன்னேறிப் போவதுதான் உலகத்தின் இயல்பு; இயற்கையின் சட்ட திட்டம் புரிந்ததா, விசாலதேவா?" என்று கேட்டாள். அடுத்த கணம் அவள் அங்கே நிற்க வில்லை; மேலே முன்னேறிச் சென்று விட்டாள். விசாலதேவன் சித்திரலேகாவின் உருவத்தையே பார்த்தவாறு நின்றான்.

சித்திரலேகா இன்னும் மேலே சென்றாள். இயற்கையன்னை நிர்மாணித்திருந்த கொடி வீடு ஒன்றில் குமாரகிரி சிலைபோல ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தான். அதைக் கண்ட சித்திரலேகா அவன் இருக்குமிடத்தை நோக்கி நடந்தாள்.

தன்னெதிரிலே சித்திரலேகா நிற்பதைக் கண்ட குமாரகிரி எழுந்து நின்றான். சித்திரலேகா அவனைப் பார்த்து, "இன்று பகல் முழுவதும் குருதேவர் குடிசைப் பக்கமே போகவில்லையோ?" என்று கேட்டாள்.

"ஆமாம்! நான் குடிசைப் பக்கமே போகவில்லைதான். நடனராணி! நீயே சொல், நான் குடிசைப் பக்கம் எப்படிப் போவது? எனக்குக் குடிசையை நினைத்தாலே எவ்வளவு பயமாயிருக்கிறது, தெரியுமா?" என்று கேட்டான் குமாரகிரி.

"என்ன, பயமாயிருக்கிறதா? அப்படியானால் அதற்கு என்ன வழி செய்யலாம்?" என்று கேட்டாள் சித்திரலேகா.

"வழியா? ஒரே ஒரு வழிதான் இருக்கிறது, நடனராணி! அந்த வழி உனக்குத் தெரிந்ததுதான். உருவம் உள்ள பொருளை வழிபடுவதில் எனக்கு அபார நம்பிக்கை ஏற்பட்டு விட்டது என்பதை நான் முன்னமேயே உன்னிடம் சொல்லி யிருக்கிறேன். நீ மனம் வைத்தால் என் காரியம் கைகூடும். உன்னுடைய உதவி யின்றி உருவமுள்ள பொருளை உபாசிப்பது என்பது முடியவே முடியாத காரியம். ஆகவே..." என்று ஆரம்பித்தான் குமாரகிரி.



அதற்குள் சித்திரலேகா அவனை மேலே பேச வொட்டாமல் இடைமறித்து, "உருவம் உள்ள பொருளை உபாசிப்பது என்று சொல்லுவது வீண்

"இவ்வளவு நேரம் கண் அயர்ந்து விட்டதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்" என்று சொல்லிவிட்டு அவன் அங்கிருந்து சென்று விட்டான். குமாரகிரியினுடைய முகத்திலே ஒருவித உணர்ச்சி மாறுதல் ஏற்பட்டிருப்பதை விசாலதேவன் கண்டான். அது அவனுக்கு மிகவும் வியப்பை அளித்தது. அவன் சித்திரலேகாவை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு, "அம்மணி! இன்று குருதேவர் என்னவோ போல் இருக்கிறாரே! உங்களுக்கு ஏதாவது காரணம் தெரியுமோ?" என்று கேட்டான்.



"ஆமாம், இன்று குருதேவருக்கு மனம் சரியாயில்லை. அதனால்தான் அவர் என்னவோபோலிருக்கிறார். அதற்குக் காரணம் நான் இங்கே இருப்பதுதான். ஆகவே, விசாலதேவா! நீ எனக்கு இந்த விஷயத்தில் ஒரு உதவிபுரிய வேண்டும். எனக்காக இல்லாவிட்டாலும் உன் குருதேவரை உத்தேசித்தாவது அவசியம் நீ இந்த உதவி புரிய வேண்டும்" என்றாள் சித்திரலேகா.

"நான் அவசியம் செய்கிறேன், அம்மணி! இன்றைக்கே இப்பொழுதே வேண்டுமானாலும் பீஜகுப்தருடைய மாளிகைக்குப் போய் வரச் சித்தமாயிருக்கிறேன்!" என்று சொன்னான் விசாலதேவன்.

குமாரகிரி குடிசையிலிருந்து வெகுதூரம் சென்று விட்டான். காலையில் எழுந்தவுடன் போனவன் பகல் முழுவதும் குடிசைக்குத் திரும்பவேயில்லை. விசாலதேவன் அன்று மாலை பாடலிபுத்திர நகரத்திற்குப் போய் வந்தான். வந்ததும் வாராததுமாக நேரே சித்திரலேகாவிடம் சென்று, "அம்மணி! பீஜகுப்த மன்னர் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டுக் காசிக்குப் போயிருக்கிறாராம்!" என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் சித்திரலேகா அப்படியே அயர்ந்து விட்டாள். அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவள் விசாலதேவனைப் பார்த்து, "விசாலதேவா! அப்படியானால் நாம் என்ன உபாயம்செய்யலாம்?" என்று கேட்டாள்.

"அம்மணி! என் அறிவுக்கு எட்டிய வரை ஒரு உபாயமும் தோன்றவில்லையே! என்ன செய்வது?" என்று கேட்டான் விசாலதேவன்.

"உன் அறிவுக்கும் ஒன்றும் எட்டவில்லை. என் அறிவுக்கும் ஒன்றும் எட்டவில்லை. இதை விதியின் சதி என்று சொல்லுவதைத் தவிர வேறு என்னவென்று சொல்லுவது?" என்று ஆரம்பித்தாள் சித்திரலேகா. அதற்கு மேல் என்ன சொல்லுவது என்று அவளுக்கு விளங்கவில்லை. சிறிது நேரம் வரை அவள் மௌனம் சாதித்தாள். அவளுடைய கண்கள் அப்பொழுது கண்களுக்குப் புலனாகாத சூன்யத்திலே எதையோ தேடிக் கொண்டிருந்தன.

"ஆம், சந்தேகமில்லை. இது விதியின் சதிதான். ஒருவேளை நான் செய்த பாவங்களின் பலனோ, என்னவோ? ஒரே ஒரு ஆதாரம், ஒரே ஒரு ஊன்றுகோல் இருந்தது. போயும் போயும் அதையா நான் இப்படி உதறித் தள்ள வேண்டும்? பீஜகுப்தனை 'வேண்டாம்' என்று நான் உதறித் தள்ளினேனே, எதற்காக? எதற்காகவா? 'எதற்காக?' என்று ஒரு கேள்வியா?—இல்லை, இல்லை! ஒன்றும் இல்லை! 'இல்லை இல்லை!' என்று கையைப் பிசைந்தால் ஆயிற்றா?—ஆமாம், ஆமாம், நான் மெய்யறிவு பெறுவதற்காகத்தான் இங்கே வந்தேன். ஓகோ! அப்படியா? அப்படியானால் இதுதான் மெய்யறிவோ? பகவான்தான் நமக்கு வேண்டிய அறிவைக் கொடுத்திருக்கிறாரே, அப்புறம் இதெல்லாம் எதற்காக?—விசாலதேவா! நீ ஒன்றும் செய்ய முடியாது. குருதேவரும் ஒன்றும் செய்ய முடியாது. நானும் ஒன்றும் செய்ய முடியாது. ஏன்? எல்லாம் வல்ல இறைவன் என்கிறோமே, அவனும் ஒருவேளை ஒன்றும் செய்ய முடியாதோ, என்னவோ? ஏதோ நடக்க வேண்டியது நடந்து கொண்டிருக்கிறது. அது நடந்துகொண்டேயிருக்கும். நடக்கட்டும், நடக்கட்டும்!"

ஒரு நாள் இரவு, யோகி குமாரகிரியும் நானும் தனியே நின்று உரையாடிக் கொண்டிருப்பதை நீ கவனித்துவிட்டாய் அல்லவா? அதனால்தான் உனக்கு என்மீது நம்பிக்கை ஏற்படவில்லை. உன்னிடம் ஒளிவு மறைவு எதற்கு? உன்னிடம் ஸ்பஷ்டமாகச் சொல்லி விடுவதுதான் மிகவும் நல்லது. நான் எந்தக் காரியத்தை உத்தேசித்து இங்கே வந்தேனோ, அந்தக் காரியம் கைகூட வில்லை. இனி அந்தக் காரியம் கைகூடவும் கூடாது. இங்கே வந்த பின்னர், நான் தன்னைத் தானே நன்கு ஆராய்ந்து பார்த்துக் கொண்டேன். அப்பொழுதுதான் நான் செய்த காரியம் மிகத் தவறானது என்பது எனக்கு நன்கு விளங்கியது. நான் இங்கே வந்து என்னை உயர்த்திக் கொள்ளுவதற்குப் பதிலாகத் தாழ்த்திக் கொண்டு விட்டேன், நாளுக்கு நாள் நான் அதப் பாதாளத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறேன் என்பதுநன்கு புலனாகிறது. ஆனால் நான் இனியும் தாழ்ந்து போக விரும்பவில்லை. நான் விழுவதோடு மட்டும் அல்ல. யோகி குமாரகிரியையும் கூடச் சேர்த்துக் கொண்டல்லவா விழுகிறேன்! நாம் கெடுவது போதாது என்று பிறரையும் கெடுப்பது என்றால் அது நியாயமா? அது மகா பாவம் அல்லவா? ஆகவே நான் இந்தப் பாவப் படுகுழியிலிருந்து எப்படியாவது விடுதலைபெற விரும்புகிறேன். இந்த விஷயத்தில் நீ எனக்கு ஒரு சிறிய உதவி புரிய முடியுமா, சொல்லு?" என்று கேட்டாள் சித்திரலேகா.

"இந்த விஷயத்தில் நான் என்னால் ஆன உதவியைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொன்னான் விசாலதேவன்.

"விசாலதேவா! உனக்குப் பீஜகுப்த மன்னருடைய மாளிகை இருக்கும் இடம் தெரியும் அல்லவா?" என்று கேட்டாள்.

"ஆகா! பேஷாகத் தெரியும்!"

"அவருடைய மாளிகையிலே சுவேதாங்கன் என்று ஒரு வாலிபன் இருக்கிறான். என் பொருட்டு நீ அவனிடம் சென்று அவனைப் பார்த்து நான் பேச விரும்புவதாகச் சொல்லி வரவேண்டும். முடியுமா?" என்று கேட்டாள் சித்திரலேகா.

"இதென்ன பிரமாதமான காரியம்? தாராளமாகச் சொல்லி வருகிறேன்" என்று சொன்னான் விசாலதேவன்.

அப்பொழுதுதான் குமாரகிரி குடிசையிலிருந்து எழுந்து வெளியே வந்தான். அவனைக் கண்டதும் அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டனர். குமாரகிரி தலையைத் தொங்கவிட்ட வண்ணம் குற்றவாளியைப் போல் அவர்களிருவருக்கும் நடுவே வந்து நின்றான். சிறிது நேரம் வரையில் மூவருமே மௌனம் சாதித்தனர். கடைசியில் குமாரகிரி அந்த மௌனத்தைக் கலைத்து, "நான் இன்று வெகு நேரம்வரை தூங்கி விட்டேன்போலிருக்கிறது!" என்றான். அப்பொழுது அவனுடைய முகத்திலே ஒரு அசட்டுச் சிரிப்புத் தோன்றி மறைந்தது.



திரலேகா அங்கிருந்து புறப்பட்டு நேரே விசாலதேவன் இருக்கும் இடத்தை அடைந்தாள். தியானத்தில் லயித்திருந்த விசாலதேவன் அப்பொழுதுதான் தன் கண்களைத் திறந்தான். எதிரே சித்திரலேகா நிற்பதைக் கண்டதும் கை கூப்பி, "அம்மணி! வணக்கம்!" என்று மிகவும் பவ்யமாகத் தன் வணக்கத்தைத் தெரிவித்தான்.

சித்திரலேகாவுக்கு அப்பொழுதுதான் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. அவனுக்குப் பதில் வணக்கம் செலுத்திவிட்டு, அவள் மேலே போகாமல் அங்கேயே அவனருகில் நின்றாள்.

என்றைக்கும் இல்லாமல் அன்று மட்டும் சித்திரலேகா தன்னிடம் வந்திருப்பதைக் காண விசாலதேவனுக்கு வியப்பு மேலிட்டது. "அம்மணி! என்னிடம் ஏதாவது சொல்ல வேண்டுமா, என்ன?" என்று மிகவும் வினயமாகக் கேட்டான்.

"ஆமாம்!" என்று ஆரம்பித்த சித்திரலேகா சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். "...ஆமாம், நான் சொல்ல விரும்பும் விஷயம் மிகவும் முக்கியமானது; மிகவும் மகத்துவம் வாய்ந்தது. ஆனால் நான் அதை உன்னிடம் சொல்லுவதற்கு முன்னால் நீ எனக்கு ஒரு பிரதிக்ஞை செய்து தர வேண்டும். அப்படியானால்தான் நான் உன்னிடம் அதைச் சொல்ல முடியும். நான் சொல்லப் போகும் விஷயம் உனக்குப் பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி, பிறரிடம் சொல்லுவதில்லை என்று நீ எனக்கு வாக்குத் தத்தம் செய்து கொடுத்தால்தான் நான் உன்னிடம் அதைச் சொல்லுவேன்" என்றாள்.



"தாராளமாக நான் அம்மாதிரிப் பிரதிக்ஞை செய்து தரச் சித்தமாயிருக்கிறேன்" என்றான் விசாலதேவன்.

"அப்படியானால் கேள். விசாலதேவா! நான் இங்கு வந்ததே மாபெரும் தவறு என்று இப்பொழுது தோன்றுகிறது. நான் உயர்ந்தவளாக ஆக வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இங்கே வந்தேன். ஆனால் இவ்வளவு நாள் இங்கே இருந்த பிறகு, நான் கடுகளவும் உயரவில்லை. வர வரக் கீழேதான் போய்க் கொண்டிருக்கிறேன் என்பது நன்றாகப் புலனாகிறது" என்றாள் சித்திரலேகா.

அதைக்கேட்ட விசாலதேவன் இலேசாகச் சிரித்தான். பிறகு, "அம்மணி! தாங்கள் சொல்லுவது எனக்கு மிகத் தெளிவாக விளங்குகிறது!" என்றான்.

விசாலதேவனின் அந்தச் சிரிப்பிலே ஏளனம் தோய்ந்திருப்பதைக் கண்டாள் சித்திரலேகா. அதைக் கண்டதும் அவள் கதிகலங்கி விட்டாள். இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "நான் சொல்வது உனக்குச் சிரிப்பாயிருக்கிறது. ஏனெனில் நான் சொல்வதில் உனக்குத் துளிக்கூட நம்பிக்கை ஏற்படவில்லை. உனக்கு நம்பிக்கை ஏற்படாமல் இருப்பதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. அன்



இருபத்தேழாம் அத்தியாயம்

ஆத்ம சமர்ப்பணம்

விடியற்காலையில் விழித்து எழுந்ததும் சித்திரலேகா என்றும் இல்லாத திருநாளாக அன்று மட்டும் குமாரகிரி படுத்து உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவள் எழுந்து குடிசைக்கு வெளியே வந்தாள். அவளுக்கு அப்பொழுது அசாத்தியமாகத் தலையை வலித்துக் கொண்டிருந்தது. அவளுடைய உடல் முழுவதும் அனலில் இட்ட இரும்பு போலக் காய்ந்து கொண்டிருந்தது. இரவு முழுவதும் அவள் தலைகால் தெரியாத கெட்ட கனவுகள் கண்டிருந்தாள். அதை நினைத்ததும் அவளுடைய நெஞ்சு 'திக், திக்' என்று அடித்துக் கொண்டது.

தன் உதயகிரிக் கோட்டையிலே தூங்கிக் கொண்டிருந்த காலை இளங்கதிரவன் அப்பொழுதுதான் விழித்தெழுந்தான். பட்சிஜாலங்கள் பண் இசைத்துக் கொண்டிருந்தன. அவற்றின் இன்னிசை காற்றிலே மிதந்து வந்து கேட்போரின் காதுகளிலே அதி மதுரமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. 'கமகம' வென்று சுகமணத்தை அள்ளி வீசிக்கொண்டு மந்த மாருதம் தனது இயல்பான மந்த கதியில் தவழ்ந்து கொண்டிருந்தது. அது மட்டுமா? வண்டுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு அன்றலர்ந்த மென் மலர்களுடன் வேறு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தது. அந்த மனோரம்மியமான சூழ்நிலை இனந் தெரியாததொரு இன்ப லோகத்துக்கு இதயத்தை இழுத்துச் சென்றது. சித்திரலேகா வெளியே வந்து நின்றாள். கொழு கொழு என்று செழித்து வளர்ந்து கொழுவில் எறியிருந்த தளிர்க்கொடி ஒன்று அவளுக்குப் பக்கத்திலேயே நின்றது. ஆடாமல் அசையாமல் அது நின்றதைக் காணும் பொழுது 'நம் பக்கத்தில் நிற்கும் இந்தப் பூங்கொடி யார்?' என்ற வியப்பில் வைத்தகண் வாங்காமல் அவளையே உற்று நோக்கிக் கொண்டிருப்பது போலத் தோன்றியது. விசாலதேவன் வெளியே சற்றுத் தொலைவில் இருந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்து ஆராதனையில் ஈடுபட்டிருந்தான்.

அங்கேயே அப்படியே நின்றவாறு சித்திரலேகா சிந்தனையில் ஆழ்ந்தாள். 'குமாரகிரியுடன் தான் இருப்பது உசிதமா இல்லையா?' என்ற பிரச்னையை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதில் அவள் தன் மூளை முழுவதையும் செலவிட்டிருந்தாள். ஆனால் அவள் இனி எங்கே போக முடியும்? எந்த தைரியத்தில் அவள் பீஜகுப்தனை நெருங்க முடியும்? அவள் தனித்து பீஜகுப்தனிடம் போய் விடுகிறாள் என்றாலும் பீஜகுப்தன் அவளை ஏற்றுக் கொள்வானா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் தேடிக் கண்டு பிடிப்பது அவளுக்கு அவ்வளவு இலகுவாகப் படவில்லை. அவள் அந்தக் கேள்விகளுக்கு பதில் கண்டுபிடிக்க முயற்சிக்க முயற்சிக்க அவளுடைய மூளைதான் குழம்பியது. சித்




சௌந்தரியவதி கண்ணாம்பா

தன் சருமத்தை வசீகரமாக வைத்துக்கொள்ள ஏன்

லக்ஸ் டாய்லட் சோப்பை

விரும்புகிறார் என்று சொல்கிறார்!



"அழகு பராமரிப்புகளிடையே மிக சுலபமானதும், சிறிதளவே செலவுள்ளதும், திண்ணமாக பலனளிப்பதும் இதுவே. நான் முகம் கழுவும் போதெல்லாம் இதை உபயோகிக்கிறேன். இது வதனத்தை மிக மிருதுவாகவும், தொடுவதற்கு மழமழப்பாகவும் இருக்கச் செய்கிறது. லக்ஸ் டாய்லட் சோப்பின் ரம்மியமான பரிமளத்தை நான் மிகவும் விரும்புகிறேன்."

இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 238-172 TM

வரை அந்தப் பேரழகியைத் தன் வீட்டில் வைத்திருந்து அப்புறம் அவளை அரண்மனைக்கு அனுப்புவதாக இருந்தான். இந்த இரண்டு வார காலத்துக்குள் பாரசீகத்தி லிருந்து பிரயாணம் செய்த களைப்புத் தீர்ந்து விடும்; அவளுடைய அழகும் அதிகமாகப் பிரகாசிக்கும் என்று எண்ணித்தான் மந்திரி அவளை மிகவும் சிரத்தையுடன் தன் வீட்டிலேயே வைத்துப் போஷித்து வந்தான். மந்திரியின் மனைவி அந்தப் பேரழகியை சீராட்டி அவளுக்கு விலையுயர்ந்த உடைகளைச் சூட்டினாள். இந்தப் புது உடையில் அழகி மேலும் பலமடங்கு அழகியவளாகக் காணப்பட்டாள்.

ஸ்நானமும் உடை யலங்காரமும் முடிந்தவுடன் பேரழகி தன் அந்தரங்க அறைக்குச் சென்றாள். அவளுடைய அறை வாயிலில் இரு அடிமைப் பெண்கள் காவலி லிருந்தனர். நாருடீன் அந்த அறைக்குள் செல்ல விரும்பினால் எக்காரணம் கொண்டும் அவனை உள்ளே செல்ல அனுமதிக்கலாகாது என்று மந்திரி மனைவி அடிமைப் பெண்களுக்குக் கட்டளை யிட்டிருந்தாள்.

இவ்வாறு கட்டளை யிட்டு விட்டு மந்திரியின் மனைவி குளிப்பதற்குச் சென்றாள். இந்தச் சமயம் நாருடீன் தன் தாயைத் தேடிக் கொண்டு அவளுடைய அறைக்குச் சென்றான். அவள் அங்கு இல்லாததால் பேரழகியின் அறையை நோக்கிச் சென்றான். அவளுடைய அறைவாயிலில் காவல் காத்துக் கொண்டிருந்த இரு அடிமைப் பெண்களில் ஒருத்தி, "நில்லும்! நில்லும்! நீர் உள்ளே போகக் கூடாது" என்று தடுத்தாள்.


இவ்வாறு தடுத்ததுடன் அவர்கள் நின்றுவிடவில்லை. வாயிலை மறைத்திருக்கும் திரைக்கு முன் நின்றுகொண்டு வழிமறித்தனர். ஆனால் நாருடீன் அவ்விரு பெண்களின் உடைகளைப் பற்றி அவர்களை இழுத்துத் தூக்கி சற்று தூரத்தில் எறிந்தான். தடை நீங்கவே நேராக அந்த அறைக்குள் பிரவேசித்தான்.

நாருடீனால் தூக்கி எறியப்பட்ட அடிமைப் பெண்கள் மயக்கம் தெளிந்து நேராகத் தங்களது எஜமானியிடம் சென்று நடந்தவற்றை ஒன்று விடாமல் கூறினர். (தொடரும்)



நேரம் பேசிப் பார்த்தான். அழகில் மட்டுமல்ல, அறிவிலும் அவளுக்குச் சமானம் வேறு யாரும் இருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தான். மேலும் கண்டவர்களை வசப்படுத்தும் சுபாவமுடையவளாகவும் இருந்தாள் அந்தப் பெண்.

அரசன் விரும்பிய குணங்கள் அத்தனையும் உள்ள ஒரு பெண் கிடைத்துவிட்டதில் மந்திரி சந்தோஷமடைந்தான்.



சென்ற வாரக் கணக்குக்கு விடை: கட்டத்துக்குள் தடித்த கோட்டால் காட்டியிருப்பதுதான் ஒவ்வொருவருக்கும் கிடைத்த பாகம்.

அந்தப் பெண்ணுக்கு என்ன விலை வேண்டும் என்று அவன் அந்த வியாபாரியைக் கேட்டான்.

உடனே வியாபாரி மந்திரியைப் பார்த்துக் கூறினான்: "பிரபுவே! இவ்வளவு அழகும் குணமும் படைத்த பெண்ணை நான் இதுவரை வியாபாரம் செய்ததே இல்லை. அவளுக்குப் பத்தாயிரம் பவுன்தான் சரியான விலை. இதில் எனக்கு லாபம் ஒன்றும் இல்லை. அவளை வளர்ப்பதற்கும் அவளுக்குக் கல்வி கற்பிப்பதற்கும் இவ்வளவு பணம் செலவாகியிருக்கிறது."

இவ்வாறு வியாபாரி கூறியதை மந்திரி கேட்டான். சற்று யோசித்தான். கடைசியில் மன்னன் அனுப்பியிருந்த பத்தாயிரம் பொன்னையும் வியாபாரியிடம் கொடுத்து பாரசீகப் பேரழகியை வாங்கினான்.

உடனே அவளை மந்திரி காஹன் தன் மனைவியின் அந்தரங்க அறைக்கு அழைத்துச் சென்று அவளுக்கு நல்ல விலையுயர்ந்த உடைகளையும் ஆபரணங்களையும் அளிக்கச் சொன்னான். அவளை மிகவும் மரியாதையாக நடத்தும்படி கட்டளையிட்டான்.

மனைவியை விட்டுப் பிரியுமுன் மந்திரி பேரழகியைப் பார்த்துக் கூறினான்: "அழகிற் சிறந்த பெண்மணி! எங்கள் அரசனுக்கு நாயகியாயிருப்பதற்காக உன்னை இவ்வளவு விலை கொடுத்து வாங்கினேன். இதை மறந்துவிடாதே. என்னுடைய மகன் உன்னைப் பார்த்தால் ஆசைப்படுவான். அவன் உன் உள்ளத்தைக் கவர விரும்பலாம். அதைக் கண்டு நீ மயங்கி விடாதே. நீ அரசனிடம் செல்ல வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்."

மந்திரி காஹனின் மகன் பெயர் நூருடீன். அவன் மிகவும் அழகு வாய்ந்தவன். சாதுரியமாகப் பேசும் திறமை உள்ளவன். இனிமையான சுபாவம் உடையவன். அவன் அந்தப் பேரழகியைக் கண்டு மயங்கியதில் ஆச்சரியம் இல்லை. அவ்வாறே அழகியும் மந்திரி குமாரன் நூருடீனைக் கண்டு காதல் கொண்டாள். நூருடீன் தினந்தோறும் தன் தாயின் அறைக்குச் செல்வதற்கு எவ்விதத் தடையும் இடையாது. மேலும் அவன் தன் தாயாருடன்தான் தினம் சாப்பிட்டு வந்தான். அதனால் பேரழகியைச் சந்திக்க அவனுக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது.



இந்தப் படத்துக்குள் எத்தனை முயல்கள் மறைந்திருக்கின்றன?—கண்டுபிடியுங்கள்!

நாளுக்கு நாள் அவர்களுக்குள் நேசம் வளர்ந்து வந்தது. நூருடீனின் தாயார் தன் மகனை எவ்வளவோ தடுத்துப் பார்த்தாள். ஆனால் அவன் அழகியைப் பார்த்துப் பேசுவதை நிறுத்தவே இல்லை.

மந்திரி காஹன் இரண்டு வாரம்



1. பாரசீகப் பேரழகி

ஸிரியா என்னும் நாட்டை முன்னொரு காலத்தில் **ஹாருன்** என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அந்நாட்டுக்குத் தலைநகர் **பல்ஸோரா** என்னும் பட்டணம். பல்ஸோராவை ஹாருனுக்கு உட்பட்டு **ஜெனுபி** எனும் சிற்றரசன் ஆண்டு வந்தான்.

சிற்றரசன் ஜெனுபிக்கு இரு மந்திரிகள் இருந்தனர். ஒரு மந்திரியின் பெயர் **காஹுன்**. மற்றொரு மந்திரியின் பெயர் **ஸவி**.

காஹுன் மிகவும் நல்லவன். நீதியாக ஆட்சி செய்ய அரசனுக்கு உதவி வந்தான். அவன் யாரையும் விரோதித்துக் கொள்வதில்லை. எல்லோரிடமும் அன்புடன் நடந்து கொண்டான். அதனால் அவனிடம் அனைவரும் பிரியமாயிருந்தார்கள்.


ஸவி என்னும் மந்திரி காஹுனுக்கு எதிரிடையான குணம் படைத்தவன். பிரஜைகளிடம் கடுமையாக நடந்து கொள்வான். தானதர்மம் செய்யாமல் லோபியாக இருந்துவந்தான். அவனைக் கண்டால் யாருக்கும் பிடிக்காது. அவனிடம் பேசுவதற்குக் கூட ஜனங்கள் பயப்படுவார்கள். இம்மாதிரி துர்க்குணம் படைத்தவனைப் பிரஜைகள் தூஷித்ததில் ஆச்சரியம் இல்லை.

துர்மந்திரி ஸவி தெருவில் சென்றால் அவனைப் பார்த்து யாரும் சந்தோஷப்பட மாட்டார்கள். எல்லோரும் அவனை வெறுப்புடன் பார்ப்பார்கள். முடிந்தால் அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்று விடுவதற்கும் தயாராயிருந்தார்கள். ஆனால் மந்திரி காஹுன் வெளியே சென்றால் மக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்வார்கள். எல்லோரும் அவனுடன் பேசுவதற்கு முன் வருவார்கள்.

காஹுனை மக்கள் கொண்டாடுவது ஸவிக்குப் பிடிக்கவில்லை. இதனால் காஹுன் மீது அவனுக்குப் பொறாமை ஏற்பட்டது. அரசனிடம் துர்ப்போதனை செய்து காஹுனை எப்படியாவது ராஜ சபையிலிருந்து வெளியேற்றுவதற்காக அவன் முயற்சி செய்தான்.

ரா. நா

ஒருநாள் மாலை ராஜ சபையில் ராஜாங்கக் காரியங்கள் முடிந்து விட்டன. சபை கலைந்து விட்டது. அரசனும் இரு மந்திரி



களும் சில பிரபுக்களும் இருந்தனர். எல்லோரும் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் அடிமைகளைப் பற்றி ஒவ்வொருவரும் தத்தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். முடிவில் அரசன் காஹனைப் பார்த்துக் கூறினான்: "மந்திரி, உலகத்திலே மிக மிக அழகிய ஓர் அடிமைப் பெண் எனக்கு வேண்டும். அழகுக்கேற்ற புத்திசாலித்தனமும் அவளிடம் இருக்க வேண்டும். இன்னும் எல்லா நல்ல குணங்களும் அவளிடம் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அடிமைப் பெண்ணை எப்படியாவது நீங்கள் வாங்கித்தர வேண்டும். அதற்கு எவ்வளவு செலவானாலும் நான் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்."

தான் இருக்கும்பொழுது அரசன் காஹனிடம் இந்தக் காரியத்தை ஒப்படைத்தது கண்டு ஸலிக்குப் பொறுமை தாங்கவில்லை. எப்படியாவது அரசன் மனதை மாற்ற விரும்பினான். உடனே அரசனைப் பார்த்துக் கூறினான்: "அரசே! மன்னிக்க வேண்டும். நீங்கள் கூறுகிற லட்சணங்கள் அமைந்த அடிமைப் பெண் கிடைப்பது துர்லபம் என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் ஆசைப்படுவது போன்ற பெண் கிடைக்கவேண்டுமென்றால் பத்தாயிரம் பவுனாவது கொடுக்க வேண்டும்."




இதற்கு மன்னன் பதில் கூறினான்: "மந்திரி! பத்தாயிரம் பவுன் எனக்குப் பிரமாதம் அல்ல. கஜானாவிலிருந்து உடனே இந்தப் பணத்தை காஹன் வீட்டிற்கு அனுப்ப நீங்கள் ஏற்பாடுசெய்யுங்கள். அவர் தேடி இம்மாதிரி பெண் கிடைத்தால் உடனே பணத்தைக் கொடுத்து அவளை வாங்கிக் கொண்டு வரட்டும்."

காஹன் தன் வீட்டை அடைந்தவுடன், நகரிலுள்ள முக்கியமான அடிமை வியாபாரம் செய்கிறவர்களை அழைத்தான். அவர்கள் வந்தவுடன் அழகும் புத்திசாலித்தனமும் மற்ற நற்குணங்களும் படைத்த ஓர் அடிமைப் பெண்ணைக் கண்டு பிடிக்கும்படி கட்டளையிட்டான். அம்மாதிரிப் பெண் கிடைத்தவுடன் அவளைத் தன் முன் அழைத்து வரும்படியும் உத்தரவிட்டான். அவ்வாறே செய்வதாக அந்த வியாபாரிகள் வாக்களித்தனர். தினம் தினம் பல அழகிய அடிமைப் பெண்களை மந்திரி வீட்டில் வியாபாரிகள் கொண்டுவந்து நிறுத்தினர். ஆனால் வந்த பெண்களில் ஒருத்தியாவது மந்திரிக்குத் திருப்தி அளிக்கக் கூடிய முறையில் இல்லை.

இவ்வாறு பல நாட்கள் கழிந்தன. ஒருநாள் அந்நகரத்துக்கு ஒரு பாரசீக வியாபாரி வந்து சேர்ந்தான். அவன் தன்னிடம் அரசன் கூறிய எல்லா குணங்களும் வாய்ந்த ஒரு அடிமைப் பெண் இருப்பதாகக் கூறினான். அவனை உடனே தன் முன் அழைத்து வரும்படி மந்திரி காஹன் கட்டளையிட்டான்.

வியாபாரியும் அந்தப் பெண்ணை மந்திரி முன் கொண்டுவந்து நிறுத்தினான். அவள் அழகு பார்ப்பவர் கண்ணைப் பறித்தது. அவளைக் கண்டு மந்திரி மயங்கிப் போய்விட்டான். உடனே அந்தப் பெண்ணுக்கு பாரசீகப் பேரழகி என்று பெயரிட்டான். அவளுடன் கொஞ்ச

கல்லாய்ச் சமைந்தார் !


"பாஸ் பண்ணினால் நூறு தேங்காய் உடைக்கிறேன்!" என்று மணி பிள்ளையாரை வேண்டிக் கொண்டான்.
படிக்காமலே இந்தப் பயல் இப்படி வேண்டிக் கொண்டு விட்டானே என்று பிள்ளையாருக்குக் கவலையாய்ப் போய் விட்டது. பரீட்சையில் 'பெயில்' ஆனால் பயல் தன்னைத் தூற்றுவானே என்ற கவலை வேறு அவருக்கு. "கேள்விப் பேப்பர் கிடைக்குமா?" என்று அவர் கேட்டதற்கு மூஞ்சூறு கையை விரித்தது.
தேங்காய் வரும்படியை உத்தேசித்து, பிள்ளையார் இரவும் பகலும் மணியின் பாடங்களை உருப் போட்டார்.
கடைசியில் பரீட்சை தினத்தில், பிள்ளையார்சுழி'போட்டுப் பரீட்சை எழுதி முடித்தார்.
'ரிஸல்ட்டு' வந்ததும் மணி பாஸ் பண்ணி விட்டான்.
விநாயகர் தேங்காயை எதிர் பார்த்து மணியைத் தூக்கிக் கொண்டு ஓடினார்.
ஆனால், மணி பாஸ் பண்ணின சந்தோஷத்தில் பிள்ளையா- ரையே மறந்து கிரிக்கெட் விளையாடப் போனான். பிள்ளையார் கல்லாய்ச் சமைந்தார்!
-சாமா-

டாம். உங்களுக்குப் பணிவிடை சரியாக நடப்பதற்காக உங்கள் பந்துக்களில் ஒருவர் பேரில் பணம் பாங்கியில் போட்டு வைக்க அனுமதி தாருங்கள். இதற்கு என்ன ஆட்சேபணை? என்மேல் இரங்கி இதற்கு ஒப்புக் கொள்ளுங்கள்" என்று தனவான் மிகவும் வற்புறுத்தினார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இதற்கும் ஒப்பவில்லை. "நீங்கள் சொல்லும் ஏற்பாட்டுக்கும் நானே பணம் பெற்றுக் கொள்ளுவதற்கும் என்ன வித்தியாசம்? உண்மையை ஏமாற்றமுடியுமா? நான் நேரில் உங்கள் பணத்தை வாங்கிக் கொள்ளாமல் எனக்காக உங்களுடைய யோசனைப்படி வேறொருவர் பெற்றுக் கொண்டால் அவரிடம் எவ்வளவு பணம் இருந்தது, இப்போது எவ்வளவு இருப்பு என்றெல்லாம் என் சிந்தனை அந்தப் பணத்தில் நிற்குமல்லவா? யோசித்துப் பாருங்கள். இந்த ஏற்பாட்டுக்கு நான் ஒப்புக் கொள்ள முடியாது, வேண்டாம்" என்று மறுத்து விட்டார்.

ஆயினும் அந்தத் தனவான் விட்டபாடில்லை. "உங்களுக்கு ஒரு பற்றும் இல்லை. நீரில் எண்ணெய் போல் உங்கள் உள்ளம் நிற்கும். நீர்கள் ஏன் பயப்பட வேண்டும்? பணமும் பெண்ணழகும் கடலைப்போல் நிரம்பி நின்றாலும் தூய உள்ளமானது அந்தக் கடல் வெள்ளத்தில் கலக்காமல் எண்ணெய் போல் மிதந்து நிற்கும் என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்" என்று மறுபடியும் வற்புறுத்தினார்.

"பற்று நீத்த உள்ளம் எண்ணெய் போல் மிதக்கலாம்; உண்மைதான். ஆனால் வெகுநாள் ஜலத்தோடு சேர்ந்து கிடந்தால் நல்ல எண்ணெயும் கெட்டுப் போய் நாற்ற மெடுக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நகைத்து.

* * *

தூய மனதுக்குச் சக்தி உண்டுதான். அது அபாயங்களைத் தாண்டித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும். வலையில் சிக்காது. ஆயினும் யாரேனும் நீண்ட காலம் விஷப் பரீட்சை செய்தல் தவறாகும். நல்ல விவேகியின் உள்ளமும் சில சமயம் தடுமாறிப் போகும். காமப் பொருள்களினின்று ஜாக்கிரதையாகத் தூர நிற்பதே விவேகம். அவ்வாறின்றிப் பரீட்சை செய்து பார்க்கலாம் என்று நெருங்கி ஒருவன் படிப்படியாக விட்டுக் கொடுத்துக் கொண்டு போய் அபாயத்தின் அருகிலேயே நின்றானால் நிச்சயமாகக் கெட்டுப் போவான்.

துறவு நிலையாகாது. இதைக் காட்டிலும் யோக்கியமான இல்லற வாழ்வே மேலாகும்.

பாரிகளும் பாம்புகளுமிருக்கும்ஒரு பழைய வீட்டில் குடியிருந்தால் எவ்வளவு ஜாக்கிரதையாக இருப்போமோ, அப்படியே வாழ்க்கையில் காமமும் லோபமுமாகிய விஷப் பொருள்களைப் பற்றி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பாழியில் ஒடுங்கியிருந்து திடீர் என்று கடித்துக் கொல்லும் நாகப் பாம்பைப் போலவே பண ஆசையும் காமத்தின் வேக்மும் எதிர்பாராத முறையில் மனிதனைப் பிடித்து வீழ்த்தி விடும். ஞானிகளாயினும் சர்வதா ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இடைவிடாமல் ஆண்டவன் நினைவை மனதில் நிறுத்தி வைக்க வேண்டும். சர்ப்பத்தைக் கண்டால் பழைய நாட்களில் கிராம வழக்கம் "அம்மா தேவி! வாலைக் காட்டிச் செல். படத்தைத் தூக்காமல் போய் விடு!" என்று ஒரு மந்திரத்தைச் சொல்லுவார்கள். பாம்பும் போய் விடும். காம விருப்பத்தை நாகப் பாம்பாகவே கருத வேண்டும். அதனுடன் விளையாடலாகாது. அதனின்று தூர நிற்பதே விவேகம். 'நான் விவேகன்; ஏன் பயப்பட வேண்டும்? இதில் என்ன கேடு வரும்? இவ்வளவோடு நிற்பேன். அதற்குமேல் போக மாட்டேன்' என்றெல்லாம் எண்ணுவது அவிவேகம். பாம்பை நெருங்கினல் நிச்சயமாகக் கடித்து விடும்.


* * *

ஒரு தனவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சென்று "உங்களுக்கு ஒரு பெரிய தொகை உதவ விரும்புகிறேன். இதோ, இந்த உண்டியலைப் பெற்றுக்கொண்டு அவசியமான செலவுக்கு உபயோகித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

நல்ல எண்ணத்துடன்தான் அந்த தனவான் இவ்வாறு கேட்டுக் கொண்டார். ஆனால் சுவாமி ராமகிருஷ்ணர் ஒப்பவில்லை. "வேண்டாம்! உம்முடைய பணத்தை நான் வாங்கிக் கொண்டால் அதைப் பற்றிச் சிந்தனை செய்து கொண்டிருக்க நேரிடும். என் உள்ளம் பணத்தில் சிக்கிக் கொண்டு அலையும்" என்று மறுத்தார்.

"நல்ல பாத்திரம் பார்த்துத் தருமம் செய்ய வேண்டும் என்பது என் ஆசை. இதை ஏன் தடுக்கிறீர்கள்? நீங்கள் பணத்தைத் தொடவே வேண்

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்





ராமகிருஷ்ண உபநிஷதம்

3. பாம்பை நெருங்காதே!

பெரிய வியாபாரி ஒருவர் பரம ஹம்ஸரிடம் வந்து, "சுவாமி! நான் என்னுடைய சொத்தெல்லாவற்றையும் குடும்பத்துக்கு எழுதி வைத்து விட்டேன். ஒரு வியாபார ஜோலியும் நான் இப்போது வைத்துக் கொள்ளவில்லை. ஆயினும் பகவான் எனக்கு இன்னும் தரிசனம் கொடுக்கவில்லை. இதற்கு என்ன காரணம்? எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டால் கடவுளைக் காணலாம் என்கிறார்களே?" என்று கேட்டார்.

அதற்கு ராமகிருஷ்ணர், "செட்டியாரே! பழைய எண்ணெய்க் குடம் ஒன்றை முழுதும் காலிசெய்து விட்டாலுங் கூடக் கொஞ்சம் எண்ணெய் ஒட்டிக் கொண்டுதானிருக்கும். குடத்தில் உறிஞ்சிப் பல காலம் ஊறியிருக்கும் எண்ணெய் போகவே போகாது. அதை நாற்றமில்லாமல் சுத்தம் செய்ய இயலாது. அவ்வாறே உம்முடைய உலக விவகார வாசனையைச் சுலபமாக நீக்கிக் கொள்ள முடியாது. எல்லாச் சொத்துக்களையும் எழுதி வைத்து விட்டீராலும் மனதில் ஊறியிருக்கும் உலகப்பற்று எளிதில் நீங்கி விடாது" என்று அருளினார்.

சொத்தை யெல்லாம் எழுதி வைத்து விட்டதனாலேயே ஒருவன் சந்நியாசியாகப் போய் விட மாட்டான். கவலையில்லாமல் அக்கடா வென்றிருக்கலாம் என்கிற எண்ணம் போதும் சொத்தை எழுதி வைத்து விடுவதற்கு. பணம், பாந்தவ்யம், காமம் முதலிய பற்றுக்கள் அறவே மனதினின்று நீங்கி ஆண்டவனிடம் காதல் பொங்கிய ஞான நிலை அடைவது வேறு விஷயம்.

உள்ளத்தைப் பக்குவப் படுத்திக் கொள்ளாமல், எல்லாவற்றையும் விட்டு விட்டு, பிறகு விட்ட பொருள்களின் நினைவிலேயே உள்ளம் தங்கி அலைந்துகொண்டு கஷ்டப்படுவதும், பிறருக்கு இது தெரியாமலிருக்கும்படி லோக அபவாதத்துக்குப் பயந்து பொய் வேஷம் போடுவதும்



★ ராஜாஜி கவர்னர் - ஜெனரல் பதவியை-விட்டு விலகுவதற்கு முதல் நாள் புது டில்லி அகில இந்திய ரேடியோ நிலையத்தில் விடை கொடுக்கும் பிரசங்கம் செய்து விட்டுக் குதூகலமாகத் திரும்பி வருகிறார். இடது ஓரத்தில் வருகிறவர் உதவி விளம்பர மந்திரி கனம் திவாகர் அவர்கள்.

பிரயாணிகள் என்றும் எங்களுக்குத் தெரிந்தது. எங்களிடம் அவர்கள் தங்கள் ஏழ்மையைப் பற்றிச் சொல்லிக் கெஞ்சியதால் நாங்கள் அதிகாரிகளிடம் முறையிடவில்லை. இந்தமாதிரி இன்னும் எவ்வளவு பேரோ!

இட நெருக்கடியை அதிகமாக்கச் சிலர் மீன்கூடை, சோற்றுக்கூடை இவைகளைக் கொண்டு வந்து விடுகிறார்கள். கொண்டு வந்தால் அவைகளை வண்டி பெஞ்சுக்கு அடியில் தள்ளக்கூடாதா? அதுதான் இல்லை. நட்டநடுவில் வைத்து விடுகிறார்கள். துர்நாற்றம் சகிக்க முடிவதில்லை. அவர்கள் வாய்க்குப் பயந்து கொண்டு மௌனமாக இருக்கவேண்டியிருக்கிறது. கொண்டுவரும் கூடைகளை நன்றாகத் துணிபோட்டுக் கட்டி மூடிச் சுத்தமாக வைத்து பெஞ்சுகளின் அடியில் உள்ளே தள்ளி வைத்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும்?

ரயில்களிலே எவ்வளவோ தொத்து நோய் வியாதியஸ்தர்கள் பிரயாணம் செய்கிறார்கள். டிக்கட்டில்லாப் பிரயாணிகள் குறைந்தால் நாம் ஒருவரோடு ஒருவர் அவ்வளவு நெருங்கி உட்கார வேண்டியதில்லை. இந்த டிக்கட்டில்லாப் பிரயாணத்தைத் தடுக்க ரயில்வே அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ரயிலில் சிலர் புகை பிடித்து இதர பிரயாணிகளுக்குத் தொந்தரவு கொடுப்பது போல் சிலர் ஓடும் ரயில்களிலே எச்சில் உமிழ்கிறார்கள். ஜன்னல் வழியாக எச்சில் உமிழ்வதால் அது காற்று வேகத்தில் அடுத்த கம்பார்ட்மெண்டில் இருக்கும் பிரயாணிகளின்மீது விழுகிறது. எச்சில் வழியாக நோய் பரவுவது ஒரு புறம் இருக்க, எச்சில் (வெற்றிலை எச்சில் முக்கியமாக) மேலே விழுந்த பிரயாணிகளின் உடைகள் அசுத்தமாக அல்லவா ஆகிவிடுகின்றன. ஜன்னல் கம்பிகளில் வேறு எச்சில் தேங்கி நின்று குழந்தைகள் கம்பிகளைப் பிடித்துக் கொண்டால் கையில் அசுத்தம் ஏற்படுகிறது. இதைத் தடுக்க ரயில்வே அதிகாரிகள் மேல்நாட்டு வண்டிகளில் இருப்பது போல் எச்சில் துப்புவதற்கு ஒவ்வொரு மூன்றும் வகுப்பு வண்டியிலும் ஒரு பேஸின், குழாய் வைத்தால் தேவலை. எச்சில் துப்பிவிட்டு உடனே நோய்க் கிருமிகள் பரவாமல் தடுக்கச் சுத்தமாக அலம்பி விடலாம்.

இதர விஷயங்கள் :—ரயிலிலே வெற்றிலை போடுபவர்கள் சுண்ணாம்பை அப்படியே பெஞ்சுமீது தேய்த்து விடுகிறார்கள். பொதுஜனங்கள் பிரயாணம் செய்யும் வண்டியாயிற்றே, அவர்கள் இந்தப் பெஞ்சியில்தானே உட்கார வேண்டும் என்றெல்லாம் இவர்கள் நினைப்பதே இல்லை. வேறு சில விஷமிகள், தங்கள் பக்தியையும், தமிழ் மொழியின் பற்றையும் காண்பிக்க ரயிலை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். "கம்யூனிஸ் வாழ்க" "இந்தி ஒழிக" "பூணூல் ஒழிக" "குடுமி ஒழிக" என்றெல்லாம் கரியால் கிறுக்குகிறார்கள். இந்த விஷயத்தில் ரயில்வேக்காரர்கள் மட்டும் ஒன்றும் செய்ய முடியாது. இந்தப் பொது ஜனத் துரோகிகளை ரயில்வே அதிகாரிகளிடம் பிடித்துக் கொடுக்கப் பொது ஜனங்கள் முயல வேண்டும். ஒரு காலத்திலே வீரம், சத்தியம், மாண்பு, நேர்மை, தர்க்கம், வாய்மை இவைகளுக்கு ஈடு இணையில்லாப் புகழ் பெற்ற பாரத நாட்டிலேதான் இந்த அக்கிரமம் நடக்கிறது.

ரயில்வேக்காரர்கள் பிரயாணிகளுக்குச் செய்யும் தொண்டு இருக்கட்டும். பிரயாணிகளும் முக்கியமாக வேலைக்குச் செல்லும் ஸ்திரீகள் வண்டியிலிருந்து இறங்கும் போதும் ஏறும்போதும் 'கியூ' முறையைக் கையாண்டு ஒருவருடன் ஒருவர் வாக்குவாதம் புரிந்து கொள்ளாமல் (அப்பப்பா, காதால் கேட்கச் சகியாத என்ன வசைமாரிகள்) பொறுமையுடன் இருக்க வேண்டும். அப்போது தான் சுதந்திர இந்தியாவில் நாம் மேனாட்டாரைப்போல் சந்தோஷமாகப் பிரயாணம் செய்ய முடியும்.

மார்கள். தற்போதுள்ள விலைவாசிகளுக்குத் தகுந்தாற்போல எங்களுடைய வருமானத்தை உயர்த்தாது போனாலும், உள்ளதையும் பறித்துக் கொள்ளவா வேண்டும்? இந்த இரண்டும் கெட்டான்கள் சம்பளத்தைக் குறைத்து விட்டால், பொருளாதார நிலைமை சீர்பட்டுவிடும் என்று பதவியிலிருப்பவர்கள் கனவு காண்கிறார்கள்.

இவ்வளவிற்கும் தொழிலாளிகளாயிருந்தால், அவர்கள் சார்பில் கச்சை கட்டிக் கொண்டு சர்க்காரோடு சண்டையிட சங்கங்கள் இருக்கும். எங்கள் டிபார்ட்மெண்டோ கடைப்பிணம், பயித்தியக்கார டிபார்ட்மெண்ட் என்று யாவரும் அறிந்தது.

இப்படிப் படித்த மக்கள் பரிதவித்து உள்ளம் குமுறினால், அந்தக் குமுறல் பொதுவுடைமையாக மாற எத்தனை நேரமாகும்? பொதுவுடைமைக் கட்சி வளர்க்க சர்க்கார் இதைவிட அசட்டுத்தனமான காரியம் ஏதாவது செய்யவும் வேண்டுமா?

இறுதியாக ஒன்று சொல்லுகிறேன். ஜனத்தொகையில் முக்கால் பாகத்திற்கு மேல் மத்தியதர வகுப்பார், அதாவது அனாதைகள் வயிறு காய்ந்து பரிதவித்தால் நாட்டின் நிலைமை என்னவாகும் என்று யாராலும் சொல்ல முடியாது.

குழந்தைகள் வயிறு காயாமல் இருப்பதற்காகத் தாம் பகல் சாப்பாட்டை நிறுத்திக் கொள்ளலாமா, இரவு சாப்பாட்டை விட்டு விடலாமா என்று யோசித்துக்கொண்டு, ஒவ்வொரு மத்தியதர வகுப்பாரும் இன்று திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ரயில் பிரயாணம்

[லலிதாம்பிகா]

ஜனப் பெருக்கத்தால் எங்குமே இட நெருக்கடி ஏற்பட்டிருப்பதுபோல் ரயிலிலும் இட நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த இட நெருக்கடியை மிகைப்படுத்துகின்றவர் டிக்கட்டில்லாப் பிரயாணிகள். ரயில் கிளம்ப விசில் ஊதவேண்டியதுதான். (நான் குறிப்பிடுவது மின்சார ரயில் வண்டிகளிலே) எங்கிருந்தோ நான்குஐந்து சிறுவர்கள் ஓடிவந்து வண்டியில் ஏறிக்கொண்டு விடுகிறார்கள். வண்டியில் இடத்தைப் பிடித்துக் கொண்டு விடுகிறார்கள். அப்புறம் ரயில் போகப் போகக் கூட்டம் அதிகரிக்கும் போது டிக்கட்டுள்ள பிரயாணிகள் நின்று கொண்டே பிரயாணம் செய்ய நேரிடுகிறது. போதாததற்கு இந்தப் பிச்சைக்காரப் பையன்கள் வேறு தொண்டையைக் கிழித்துக் கொண்டு "பயனி மலை வாயும் எங்கல் நாடா" என்று பாட ஆரம்பித்துவிடுகிறார்கள். (மறந்து விட்டேன். இப்பொழுது 'உன் கண் உன்னை ஏமாற்றினால்'தான் பிரபலமாக இருக்கிறது.) நின்று கொண்டு பிரயாணம் செய்பவர்களுக்குக் கால் வலியுடன் தலைவலியும் வந்து விடுகிறது!

இன்னும் சில டிக்கட்டில்லாப் பிரயாணிகள், பல்பொடி, கொண்டை ஊசி போல் சிறு சாமான்கள் விற்கும் பையன்கள். ஸ்டேஷன்களிலேதான் இவைகள் விற்கப் படுகின்றனவே, பின்னும், ரயிலிலே வீணில் எதற்காக இவர்கள் வந்து இட நெருக்கடி ஏற்படுத்துகிறார்களோ தெரியவில்லை.

சில நொண்டிப் பிச்சைக்காரர்கள் தட்டுத் தடுமாறிக் கொண்டு வண்டியில் ஏறி விடுகிறார்கள். இவர்கள் இடத்தை அடைப்பது ஒருபுறம் இருக்க, வண்டியை விட்டுத் தட்டுத் தடுமாறிக் கொண்டு இவர்கள் இறங்கும் போது (மின்சார ரயில்கள் ஒரு ஸ்டேஷனில் இரண்டு நிமிஷங்களுக்குமேல் நிற்பதில்லை) நாம் அல்லவா கவலைப்பட வேண்டியிருக்கிறது? என்னதான் இவர்களால் நமக்குத் தொந்தரவு உண்டானாலும் ஒரு வித அபாயமுமின்றி ஜாக்கிரதையாக இவர்கள் இறங்கும்வரை பார்த்துக் கொள்ளத் தானே தோன்றுகிறது!

சென்னையிலிருந்து காஞ்சீபுரம் போகும் வண்டி சிறு சிறு ஸ்டேஷன்களில் நிற்பதில்லை. தாம்பரத்தில் என்ஜின் மாற்ற வேண்டியிருப்பதால் சுமார் பத்து நிமிஷங்கள் நிற்கிறது. மாலை பீச்சிலிருந்து புறப்படும் காஞ்சீபுரம் வண்டியில் நானும் என் தோழியும் சில நாட்களுக்கு முன் வழக்கமாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். அப்பொழுது டிக்கட்டில்லாத ஸ்திரீகள் மூவர் எங்களுடன் பிரயாணம் செய்தார்கள். அவர்கள் காஞ்சீபுரம் போக வேண்டியவர்கள். தாம்பரம் ஸ்டேஷனில் வண்டி நின்றதும் அவர்கள் உடனே கம்பார்ட்மெண்டில் இருக்கும் 'பாத்ரூம்' (மறைவிடம்) உள் சென்று கதவைச் சாத்திக் கொண்டார்கள். அதன்பிறகு நாங்கள் அந்த ஸ்திரீகளை அடிக்கடி பார்க்க நேர்ந்தது. அவர்கள் வழக்கமாகவே டிக்கட்டில்லாப்

பூனா அநாதைகள்

[ராமசாமி]

மிலிடரி அகௌண்ட்ஸ் டிபார்ட்மெண்டில், பூனாவில் வேலை என்றால் "உனக்கு என்னப்பா! சட்டைக்குத் துணிகூட வாங்க வேண்டியதில்லை. அவன் கொடுக்கும் 'காக்கி'யைப் போட்டுக்கொண்டு இருந்து விடலாம்" என்று தமிழ் நாட்டில் அநேகம்பேர் பத்து வருஷத்துக்கு முன்னால் சொன்னார்கள். இப்பொழுதும் சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள்.

சென்னைதான் குமாஸ்தாக்களுக்குப் பிரசித்தி பெற்ற மாகாணமாயிற்றே! ஆள் சேர்க்க வந்தார்கள் ஐயா, ஒன்பது வருஷங்களுக்கு முன்னால். கங்காணிகள் கூடத் தோற்றுப் போகும்படி, அவ்வளவு சாமர்த்தியமாக இந்த இலாகாவுக்கு ஆள் திரட்டினார்கள். பெரிய ஆபீஸர்கள் தேனொழுகப் பேசினார்கள். "பத்தாவது பாஸ் பண்ணியிருந்தால் போதும். எங்கள் டிபார்ட்மெண்டில் வேலைக்கு வாருங்கள். வீணாக நாலு வருஷம் காலேஜில் படித்து என்ன செய்யப் போகிறீர்கள்? பட்டம் வாங்கின பிறகு வேலை வா என்றால் வருமா? பத்தாவதுகூடப் பாஸ் செய்யாத எத்தனையோ பேர்வழிகள், நானூறும், எழுநூறும் எங்கள் டிபார்ட்மெண்டில் சம்பளம் வாங்குகிறார்கள். வேலையில் சேர்ந்த இரண்டு வருஷத்துக்கெல்லாம் உங்களைப் 'பிரமோஷன்' செய்வார்கள். உங்களுக்கும் பட்டதாரிகளைப்போலச் சம்பளம் கிடைக்கும். மேலும் டிபார்ட்மெண்ட் பரீட்சைகளைப் பாஸ் செய்து விட்டால், உங்களை யாரும் கட்டிப் பிடிக்க முடியாது" என்றெல்லாம் சொல்லி ஆசை காட்டினார்கள். மோசம் போனோம்! ரொம்பவும் ஏமாற்றமடைந்தோம்!

நான் இந்த இலாகாவில் சேர்ந்த இரண்டு வருஷத்துக்குப் பிறகு, வேலையில் கெட்டிக்காரர்களாய் இருந்த பலருக்கு 'லோயர் டிவிஷ'னில் இருந்து 'அப்பர் டிவிஷ'னுக்கு மாற்றினார்கள். இதற்கு முதல் காரணம், இந்த டிபார்ட்மெண்டில் பட்டதாரிகள் செய்யும் வேலைக்கும், மெட்ரிகுலேஷன் படித்தவர்கள் செய்யும் வேலைக்கும், எந்தவிதமான வித்தியாசமும் இல்லாதது. அடுத்தது, அநேகமாகப் பட்டதாரிகளைவிடப் பத்தாவது படித்தவர்கள் திறமையாக வேலை செய்கிறார்கள் என்று அதிகாரிகளே மனமறிய ஒப்புக்கொண்டார்கள். இன்றைக்கும் சரி; நாளைக்கும் சரி; இது என்னவோ உண்மைதான்!

நானூறு, ஐந்நூறு சம்பளம் வாங்குபவர்களுக்குக் 'கட்டாய சேமிப்புத்' திட்டமாம். ஆனால் நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் எங்களையோ, திடீரென்று ஒரு காரணமுமின்றி 'அப்பர் டிவிஷ'னில் இருந்து மறுபடியும் 'லோயர் டிவிஷ'னுக்கு இறக்கி வருகிறார்கள். இப்படி லோயர் டிவிஷனில் இறக்குவதால் மாதம் ரூ.40, அல்லது ரூ. 85 வருமானம் குறைகிறது. இந்த வயிற்றெரிச்சலை யாரிடம் சொல்லுவது! மாதம் 40 ரூபாய் போயிற்றென்றால், ஒரு ஆசாமிக்கு இரண்டு வேளை சாப்பாடு கிடையாது. இந்த உத்தியோகத்தை நம்பிக் காலில் ஒரு கட்டு கட்டிக் கொண்டதோடன்றி, இரண்டும், மூன்றுமாகக் குழந்தைகளையும் பெற்று வைத்துக் கொண்டிருக்கிறோம். எந்தக் குழந்தைக்குச் சாதம் போடாமலிருப்பது? எந்தக் குழந்தையை டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போகாமலிருப்பது? நீங்களே சொல்லுங்கள்.

பத்து வருஷம் ஸர்வீஸ் ஆகியும் இன்னும் எங்கள் வேலையை ஸர்ஜிதம் செய்யாமல் இருக்கிறார்கள். 'இனிமேல் இந்தப் பசங்களால் வேலையை விட்டு விட்டு எங்கும் போகமுடியாது' என்று அதிகாரிகள் நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டார்கள். ஆகவே இப்பொழுது 'லோயர் டிவிஷனில் வேலை ஸர்ஜிதம் செய்யப்படச் சம்மதமா? இல்லையா? என்று எழுதிக் கொடு' என்று கேட்கிறார்கள். சம்மதமில்லை என்றால் 'வீட்டுக்குப் போ' என்று அர்த்தம். மற்ற இலாகாக்களிலும் இப்படித்தானாம்.

நாட்டின் பொருளாதார சிக்கனத்தில் இது ஒரு திட்டமாம்! கொள்ளை லாபமடிக்கும் முதலாளிகளை, பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணமான வர்த்தகக் கும்பலை சர்க்கார் ஒன்றும் செய்ய முடியவில்லை. விஷம்போல் ஏறும் விலைவாசிகளைக் கீழே கொண்டுவர சர்க்கார் திக்கு முக்காடுகிறது. கறுப்பு மார்க்கெட்டைக் கண்டு பிடிக்கக் கஜகர்ணம் போடுகிறார்கள் மந்திரி

ராமன் ராஜவீதியோடு நடந்து போய் விட்டான். சீதை தன் அறைக்குள் வந்து உட்கார்ந்து கொண்டாள். ஆனந்தமும் சிந்தனையும் உள்ளத்தில் வந்து புகுந்து வேகத்தோடு வேலை செய்கின்றன.

"அந்த இருண்ட நீல ரோமத்தின் அழகுதான் என்ன! நீல ரத்தினத்தின் அழகு தோற்றுப் போய்விடுமே!

"முகத்தின் அழகுதான் என்ன! கைகள் எவ்வளவு நீண்ட கைகள்! தோள்கள் தான் எவ்வளவு கம்பீரம்?"

இப்படி யெல்லாம் சீதையினுடைய உள்ளம் அதிசயித்து மயங்கி ஆனந்தித்துக் கொண்டிருந்தது.

இவ்வளவு அதிசயமும் ஆனந்தமும் அந்த உள்ளத்துக்கு எப்படி வந்தது?

* * *

கோடானு கோடி வருஷங்களாகக் காதல் தத்துவமானது உயிர் வர்க்கங்களின் வழியாகவும், மானுட வர்க்கத்தின் இதயங்களின் வழியாகவும் வேகம் அடைந்து வந்திருக்கிறதல்லவா?

இப்போது பாடலைப் பார்க்கலாம்:


இந்திர நீலத்(து)
　　இருண்ட குஞ்சியும்,—
சந்திர வதனமும்,—
　　தாழ்ந்த கைகளும்,—
சுந்தர மணிவரைத்
　　தோளு மேஅல ;—

குஞ்சி அல்ல, வதனம் அல்ல, கையல்ல, தோளல்ல: பின்னை என்ன?

இந்திர நீலத்(து)
　　இருண்ட குஞ்சியும்,—
சந்திர வதனமும்,—
　　தாழ்ந்த கைகளும்,—
சுந்தர மணிவரைத்
　　தோளு மேஅல ;—
முந்தி என் உயிரை அம்
　　முறுவல் உண்டதே!

என் உயிரை அந்தப் புன்னகை உண்டு விட்டது. பிறகு உண்ணுவதற்குக் குஞ்சி, வதனம் எல்லாம் வரத்தான் செய்கின்றன. உயிர் அவைகளுக்கு எங்கே இருக்கிறது மிச்சம்!

செய்யுளைப் பாடப் பாட, காதலானது அபார வேகத்துடன் சீதையின் உள்ளத்தில் வேலை செய்கிறது என்று தெரிகிறது. அந்த வேகத்துக்கு முடிவே இல்லை



என்றும் தோன்றுகிறது. அந்த வேகமே அபலை சீதையை அபூர்வமான துணிவோடு ராமனுடன் காட்டுக்குள் செலுத்துகிறது. மேலும்,—சகல பராக்கிரமமும் கொண்ட ராவணனை ஒரு துரும்பாக நினைத்து உதறிப் பேசச் செய்கிறதும் அந்தக் காதலின் வேகந்தான்.

* * *

மார்லோ, ஷேக்ஸ்பியர், கம்பர் மூவரும் காதல் தத்துவத்தைப் பார்த்துப் பார்த்து ஒத்துப் பேசிச் சொல்லுகிறார்கள். வாஸ்தவம்.

"கண்டதும் காதலியார்
　　யாரே காதலித்தார்"

* * *

அட்டைப் படத்தில் ராமன் தெய்வ ஓவியமாகவே காட்சி அளிக்கிறான் சீதையின் உள்ளத்தில். சீதையின் முகமோ உள்ளத்திலுள்ள ஆனந்தத்தையும் ஆசையையும் அப்படியே வெளியிடுகிறது.

கவிக்கான படம், படத்துக்கான கவி, என்று சொல்லும்படி யிருக்கிறது.

* * *

இத்தகைய எத்தனையோ அருமையான பாடல்களைக் கம்பர் பாடியிருக்கிறார். ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு விழாக் கொண்டாடலாம். எல்லாப் பாடல்களுக்குமாகச் சேர்த்துக் காரைக்குடியில் நாலு தினங்கள் 'கம்பர் விழா'க் கொண்டாடுகிறார்கள்.

மார்ச்சு மீ 31உ. கம்பர் விழா ஆரம்பமாகிறது. நம் அருமைத் தலைவர் ராஜாஜி முதல் நாள் விழாவுக்குத் தலைமை வகிக்கிறார்கள். வானொலி நிலையத்தார் விழா நிகழ்ச்சிகளை ஒலி பரப்புகிறார்கள். தமிழ் மக்களின் கவனமெல்லாம் அன்று காரைக்குடி கம்பர் விழாவில் ஈடுபட்டிருக்கும் என்று நம்புகிறோம். -டி. கே. சி.

புன்னகை உண்டு விட்டதே உயிரை

காதல் பிறந்த விஷயமாக எத்தனை எத்தனையோ அனுபவங்கள். அனுபவங்களைவிட அதிகமாகக் கதைகளும் இதிகாசங்களும் உண்டாகியிருக்கின்றன.

ஆண் பெண் இருவரும் குழந்தைப் பருவத்திலிருந்தே பழக நேரிட்டுக் கடைசியில் காதலர் ஆனார்கள் என்று சொல்லுவார்கள். இனி,


அடிக்கடி அங்கே சந்திக்க நேர்ந்தது. இங்கே சந்திக்க நேர்ந்தது. காதலாய் முடிந்தது!—இது ஒரு வகை.

பணம் இருந்தது, பலிக இருந்தது. அது காரணமாகப் பிரியம் உண்டாகிக் காதலாய் விளைந்தது என்பது இன்னொரு வகை.

கலியாணத்தைச் செய்து வைத்து விட்டார்கள், தானகக் காதல் விளைந்தது என்பது சாமான்யமாய் நடக்கிற காரியம்.

ஏதோ சந்திக்க நேர்ந்தது; உடனே சண்டை போடவும் நேர்ந்தது; சண்டை வளர்ந்து கொண்டே போயிற்று; கடைசியில் காதல் வெறிக்கு உள்ளானர்கள் என்பது இன்னொரு ரகம்.

இத்தனை வகையான காதல் விளைவுகளையும் கேட்கிறோம்; பல சமயம் பார்க்கவும் செய்கிறோம்.



ஆனாலும் காதலின் உண்மை வேகத்தைக் கூர்ந்து பார்த்துப் பேசியவர்களில் பூர்வமான ஆங்கிலக் கவிஞர் மார்லோ என்பவர் ஒருவர். அவர்,

"கண்டதும் காதலியார்
யாரே காதலித்தார்!"

என்று பாடிவிட்டார். அவரை ஒட்டி வந்த ஷேக்ஸ்பியர், காதல் தத்துவத்தையும், அதன் வேகத்தையும் ஆராய்ந்து அதே முடிவுக்கு வந்தார்.

அடடா! எப்படிக் கண்டு சொல்லி விட்டார் மார்லோ!—என்று வியந்தார்.

"கண்டதும் காதலியார்
யாரே காதலித்தார்"

("Who ever loved that loved not at first sight!")

என்ற அடியை ரொம்ப ரொம்ப அனுபவித்தார் ஷேக்ஸ்பியர். அப்படியே மேற்கோளாகக் கையாண்டார் நாடகத்தில்.

கம்பரும், கண்டதும் காதல் என்ற உண்மையையும் அதன் வேகத்தையும் தெரிந்து கொண்டார்.

ராமாயணக் கதைக்கே அதுதான் வேகத்தைக் கொடுக்கும் என்று கண்டார்.

• • •

மாளிகையில் ஒரு கன்னிமாடம். அதை அடுத்து அகழி. அகழியில் தாமரைப் புஷ்பங்கள். புஷ்பங்களின் ஊடே அன்னங்கள் ஆணும் பெண்ணுமாக அழகாய் நீந்தித் திரிகின்றன.

கன்னி மாடத்து உப்பரிகையில் மாலை நேரத்தின் பொன் நிற ஒளியில் விளங்கி நிற்கிருள் சீதை.

அந்தத் தருணம், ராமன் கன்னி மாடத்தையடுத்த ராஜ வீதி வழியாக நடந்து வருகிறான்.

அகழியில் அன்னங்களைப் பார்த்துக் கொண்டிருந்த ராமன் கண்களுக்குத் தண்ணீரில் ஒரு பெண் உருவம் தோன்றியது.

ஏறிட்டுப் பார்த்தான். சீதையின் தெய்வீக அழகு ராமனது கண்ணையும் கருத்தையும் கொள்ளை கொண்டு விட்டது. சீதையும் ராமனைப் பார்த்தாள். அவளும் ராமனது கண் கொள்ளா அழகில் ஈடுபட்டவளாய் ஒரு மயக்கத்துக்கு உள்ளானுள்.

ராமனது உள்ளத்திலும் ஆனந்தம் பிறந்தது. அந்த ஆனந்தம் முகத்தில் ஒரு புன்னகையாய்ப் பொலிந்தது.

தக்கபடி பந்தோபஸ்து செய்யாமல் கொஞ்சங்கூடப் பொறுப்பின்றி நடந்து கொள்கிறீர்கள். இனிமேல் இந்தமாதிரி நடந்து கொள்வதில்லையென்று வாக்குறுதி கொடுங்கள். முப்பது கோடி மக்களின் கோரிக்கை இது. அந்த வாக்குறுதி கொடுப்பீர்களா?..."

"வாக்குறுதி கொடுத்தால் நீ பதிலுக்கு என்ன செய்வாய்?" என்றார் பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜி.

" தங்களுக்கு ஒரு நல்ல செய்தி கூறுகிறேன். கிழக்கு வங்காளத்தைப் பற்றி நீங்கள் அதிகமாகக் கலங்க வேண்டாம். சீக்கிரத்தில் விமோசனம் பிறக்க வழி ஏற்படும்!" என்றேன்.

" அது என்ன வழி, அப்பனே?"

" பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் தங்களைச் சந்தித்துப் பேச டில்லிக்கு வருவார். சென்ற வாரத்தில் அவரைப் பேட்டி கண்டு, சாட்டை வாங்கிவிட்டு வந்திருக்கிறேன். கட்டாயம் தங்களை வந்து பார்ப்பார். இப்போது நான் கேட்ட வாக்குறுதியைக் கொடுங்கள்......!" என்றேன்.

இந்தச் சமயத்தில் சற்றுத் தூரத்தில் தெரு வீதியில் நாலைந்து டோங்காவாலாக்கள் சண்டை பிடிக்கும் காட்சி தென்பட்டது. பண்டிட்ஜி அந்தக் காட்சியைப் பார்த்தார். உடனே கைச் சட்டை விளிம்பை முழங்கை வரை சுருட்டி விட்டுக் கொண்டு பாய்ந்து ஓடினார். சண்டைக்காரர்களின் நடுவில் பாய்ந்து அவர்களை விலக்கி விட்டார். அவர்கள் பிரதம மந்திரிக்குச் சலாம் போட்டு விட்டு நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள்.

பிரதம மந்திரி என்னைப் பார்த்துக் காந்தி குல்லாவைத் தூக்கி ஆட்டி விடை பெற்றுக் கொண்டார். மோட்டாரில் பாய்ந்தேறிப் பார்லிமெண்டுக்கு விரைந்தார். அவர் தலையில் அப்படி எழுதியிருக்கிறது! என்ன செய்யலாம்? பார்லிமெண்டு அங்கத்தினர் பலர் அசட்டுக் கேள்விகளுடன் காத்திருப்பார்கள் அல்லவா?

சென்னையில் ஹைட்ரஜன் குண்டு!



சென்னை மந்திரிகள் மீது ஸ்ரீ டி. பிரகாசம் சாட்டிய குற்றச் சாட்டுகளைக் காங்கிரஸ் மேலிடத்தார் நிராகரித்து விட்டார்கள். ஆயினும் ஸ்ரீ பிரகாசம் "மந்திரிகளை விசாரணை செய்ய வேண்டும்" என்ற பிரேரணையை சென்னைச் சட்ட சபையில் கொண்டு வந்து சபாநாயகர் உள்பட எல்லாரையும் கதிகலங்க வைக்கிறார்.

"அந்தக் குற்றச்சாட்டையும் நானே ஒப்புக்கொள்கிறேன். சொல்லும்போது எல்லாம் எளிதாயிருக்கிறது. காரியத்தில் வரும்போது பல சங்கடங்கள் குறுக்கிடுகின்றன. தற்சமயம் தேசத்தின் தொழில் அபிவிருத்திக்கு மூலதனம் வேண்டியிருக்கிறது. முதலாளிகளைச் சரிக்கட்டா விட்டால் மூல தனம் வெளியில் வராது என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். நான் என்ன செய்வேன்?"

"சரி! வெளி நாடுகளில் இந்தியாவுக்குச் சாதகமான பிரசாரம் சரியாக நடைபெறவில்லையாமே?"

"அந்தத்தவறும் என்னுடையதுதான்."

"ரயில்வேக்களில் நாலு வகுப்புகளை மூன்று வகுப்பு ஆக்கி மறுபடியும் பழைய பெத்தானே பெத்தான் என்று நாலு வகுப்புகள் ஆக்குகிறார்களே?"

"அதற்கும் நான்தான் ஜவாப்தாரி."

"நம்முடைய குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திரர் சினிமாத் திரையில் இந்தியச் செய்திப் படங்களில் வரும்போதெல்லாம் ஏன் அவ்வளவு சோகமான முகத்துடன் வருகிறார்? கொஞ்சம் முக மலர்ச்சி காட்டக் கூடாதா?"

"அதுவும் என்னுடைய தவறுதான்; என்னுடைய மனோ நிலையை அவருடைய முகம் பிரதிபலிக்கிறது."

"லைக் அலி ஹைதராபாத்திலிருந்து தப்பிச் சென்றாரே? அதனால் எவ்வளவோ கெடுதல்கள் ஏற்படலாமே?"

"வேறு யாரும் அந்தப் பொறுப்பை ஒப்புக் கொள்ளாதபடியால் அதுவும் என்னுடைய குற்றந்தான்."

"தபால் இலாகாவில் இப்படிக் குட்டை குழப்புகிறார்களே? இனிமேல் ஞாயிற்றுக்கிழமை தபால் டெலிவரி இல்லையென்கிறார்கள்! இந்தியா சுதந்திரம் அடைந்தும் ஜனங்களுக்கு எவ்வளவு கஷ்டம் உண்டாக்கலாமோ அவ்வளவையும் உண்டாக்கப் பார்க்கிறார்களே!"

"தபால் இலாகா மந்திரி கித்வாய் என் அத்தியந்த நண்பர். ஆகையால் அதுவும் என்னுடைய தவறுதான்."

"சென்னையில் காங்கிரஸ் கட்சி நிலைமை மேலும் மோசமாகி வருகிறதே? ஸ்ரீ பிரகாசம்காரு குட்டிக் கலகம் செய்ய ஆரம்பித்திருக்கிறாரே?"

"என்னுடைய தவறுதான். ஒப்புக் கொள்கிறேன்."

"கறுப்பு மார்க்கெட் ஒழியவில்லையே? பலவிதக் கண்ட்ரோல்களினால் லஞ்சம் நிலைபெற்று வருகிறதே!"

"ஆமாம்; அதையும் நான் உணர்ந்து மிகுதியும் வருத்தப்படுகிறேன்."

"சென்னையில் மூன்று வருஷமாய் மழை பெய்யவில்லையே?"

"என்னுடைய தவறுதான்; உங்கள் மாகாண ஜனங்களை என்னை மன்னிக்கும்படி சொல்லுங்கள்!"

"இலங்கை இந்தியர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்களே?"

"அதுவும் என் தவறுதான்; மிக்க வருத்தமாயிருக்கிறது."

"போனதெல்லாம் போகட்டும்; இனிமேல் இந்தமாதிரி தவறுகள் நேராமலிருக்குமென்று உங்களால் உத்தரவாதம் கொடுக்க முடியுமோ?"

"முடியாது; அப்படி உத்தரவாதம் கொடுக்க யாராவது முன் வந்தால் அவர்களிடம் என் பிரதம மந்திரி வேலையை ஒப்புவிக்கத் தயாராயிருக்கிறேன்."

"கூடாது, பண்டிட்ஜி! கூடாது! நீங்கள் எந்த உத்தரவாதமும் கொடுக்காவிட்டாலும் நீங்களே இந்தியாவின் பிரதம மந்திரியாயிருக்கவேண்டும். மற்றவர்கள் எப்படிப்பட்ட உத்தரவாதம் கொடுத்தாலும் அதை மக்கள் நம்பமாட்டார்கள்."

"இதற்குத்தானா இவ்வளவு ரகளை? என்னுடைய உத்தியோகத்தை எடுத்துக் கொண்டு என்னை விட்டு விடுவாய் என்றல்லவா பார்த்தேன்?"

"அதெல்லாம் முடியாது. தங்களை விடவே முடியாது. என் பெயர் விடாக்கண்டன். தங்கள் விஷயத்தில் இந்திய மக்கள் மிகப் பெரும்பாலோர் விடாக்கண்டர்கள்தான். இன்னொரு விஷயம். மேலே தாங்கள் உங்களுடைய தவறுகள் என்று ஒப்புக் கொண்டவையெல்லாம் உண்மையில் உங்களுடைய தவறுகள் அல்ல. மற்றவர்களுடைய தவறுகளைத் தங்களுடைய பெருந் தன்மையினால் உங்கள் தலையில் போட்டுக் கொள்கிறீர்கள். ஆனால் தங்களிடம் உண்மையில் ஒரு பெரிய தவறு இருக்கிறது. அது மன்னிக்க முடியாத பெரிய குற்றம். அந்தக் குற்றத்தின்பொருட்டே ஜனங்கள் உங்கள் பேரில் மிகவும் கோபம் கொண்டிருக்கிறார்கள்."

"ஐயையோ! அது என்ன அப்படிப்பட்ட குற்றம்?"

"நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் விஷயத்தில் மிகவும் அசிரத்தையாயிருக்கிறீர்கள். அனாவசியமான ஆபத்துக்களில் சிக்கிக் கொள்கிறீர்கள். வேண்டுமென்றே அபாயகரமான இடங்களுக்குப் போகிறீர்கள். தங்களுடைய உயிர் இந்தியா தேசத்தின் மிகச் சிறந்த விலை மதிக்கவொண்ணாத பொக்கிஷம். அப்படிப்பட்ட பொக்கிஷத்தை நீங்கள்

"இன்னும் ஒரு கேள்விகூடக் கேட்ட பாடில்லையே? இனிமேல்தான் கேட்கப் போகிறேன். கிழக்கு வங்காளத்தில் ஹிந்துக்களின் நிலைமை பரிதாபமாயிருக்கிறதே? அதற்கு யார் பொறுப்பு?"

"என்னுடைய பொறுப்புத்தான்; ஒப்புக் கொள்கிறேன். கிழக்கு வங்காளத்து ஹிந்துக்களை நாம் கைவிட முடியாது. அவர்களைக் காப்பாற்ற வேண்டியது இந்திய சர்க்காரின் பொறுப்புத்தான். ஆனால் அதைச் சரிவர நிறைவேற்ற முடியாததற்கு வருந்துகிறேன். எந்தப் பக்கம் பார்த்தாலும் கஷ்டமாயிருக்கிறது. பாகிஸ்தான் அரசியல்வாதிகளிடம் எவ்வளவு நல்ல வார்த்தை சொன்னாலும் அவர்கள் கேட்பதில்லை..."

"நல்ல வார்த்தைகள் பிரயோஜனப்படாவிட்டால்......"

"காரசாரமான வார்த்தைகளைச் சொன்னாலும் அவர்கள் உடம்பில் கொஞ்சங்கூட உறைப்பதில்லை......"

"வெறும் வார்த்தைகளைத் தவிர வேறு உபாயம் ஒன்றுமில்லையா?"

"எல்லாரும் உளறுவதுபோல் நீயும் 'யுத்தம்' என்று உளறுகிறாயாக்கும். யுத்தம் என்றால் ஏதோ கிள்ளுக்கீரை என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் ஆரம்பித்த இருபத்து நாலு மணி நேரத்துக்குள் இங்கே ருஷியாவும் அமெரிக்காவும் தலையிடும். அணுகுண்டையும் ஹைட்ரஜன் குண்டையும் நம்முடைய தேசத்தில் போட்டு அவர்கள் பரீட்சை பார்ப்பார்கள்......"

"அதற்காக என்னதான் செய்வது? பாகிஸ்தானின் அக்கிரமத்தை யெல்லாம் பொறுத்துக் கொண்டு எத்தனை காலம் சும்மா யிருப்பது?"

"ஏன் சும்மா இருக்க வேண்டும்? காந்தி மகான் காட்டிய வழி ஒன்று இருக்கத்தானே இருக்கிறது?"

"இருக்கிறது; அதைக் கடைப்பிடிப்பதற்கு யார் இருக்கிறார்கள்?"

"காந்திஜி உயிரோடிருந்தபோது நவகாளி யாத்திரைக்குப் போனார். அப்போது அவருடைய அந்தரங்க சீடர்கள் ரொம்பப் பேர் அவருடன் போவதாகச் சொன்னார்கள். காந்திஜி 'வேண்டாம், வேண்டாம்' என்றார். இப்போது அவர்களெல்லாரும் எங்கேயோ தெரியவில்லை."

"எல்லாரும் சௌக்யமாக இருக்கிறார்கள். பாதிப்பேர் சர்வோதய சமாஜத்திலும் பாக்கிப் பாதிப் பேர் பார்லிமெண்டிலும் இருக்கிறார்கள். யாரோ ஒரு பார்லிமெண்ட் மெம்பர், ஷிபன்லால் ஸாக்ஸேனா என்பவர், சர்க்கரைத் தொழிலாளிகளுக்குச் சம்பளம் போதவில்லை யென்று மூப்பது நாள் உண்ணாவிரதம் கிடந்தாராமே? கிழக்கு வங்காளக் கொடுமைகளுக்காக யாராவது ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினர் உண்ணாவிரதம் இருக்கக் கூடாதோ?"

"வேண்டாம், வேண்டாம்! உண்ணாவிரதம் என்கிற பேச்சே எனக்குப் பிடிப்பதில்லை!"

"உண்ணாவிரதம் வேண்டாம்! ஆசாரிய கிருபாளினி, டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, ஸ்ரீ சங்கரராவ் தேவ், டாக்டர் பி. ஸி. கோஷ் போன்ற மகாத்மாவின் பக்தர்கள் கிழக்கு வங்காளத்தில் சிலகாலம் தங்கியிருக்கக் கூடாதோ?"

"அல்லது மேற்கு வங்காளத்தில் இருந்து கொண்டே அவர்கள் மகாத்மாவின் கொள்கையை நிலைநாட்டப் பார்க்கலாம். மேற்கு வங்காளத்தில் நடக்கும் அக்கிரமங்களைப் பார்! இப்படியெல்லாம் நம்முடைய நாட்டிலேயே முட்டாள்தனங்கள் நடந்தால் சர்வதேச அபிப்பிராயம் நமக்கு எப்படிச் சாதகமாயிருக்கும்? நாளைக்கு யுத்தம் என்று ஒரு வேளை ஏற்பட்டால்கூட......"

"அது எப்படி ஏற்படும்? நீங்கள்தான் யுத்தமே கூடாது என்கிறீர்களே?"

"எந்த நிலைமையிலும் யுத்தம் ஏற்படாது என்று நான் சொல்லவில்லையே? ஒரு வேளை பாகிஸ்தானே அக்கிரம யுத்தத்தைத் தொடங்கினால் அப்போது நாம் எப்படிப் பின்வாங்க முடியும்? அந்த நிலைமையில் நாம் பின் வாங்குவதை மகாத்மாவும் விரும்பமாட்டார். காஷ்மீரில் பாகிஸ்தான் அக்கிரமமாகப் படையெடுத்தபோது மகாத்மாஜி என்ன சொன்னார்? ஞாபகம் இருக்கிறதா?"

"இருக்கிறது, பண்டிட்ஜி! அது போகட்டும்! காஷ்மீர் பிரச்னை இன்னும் தீராமல் அழுது வடிந்து தீராத தொல்லையாக இருந்து வருகிறதே! அதற்கு யார் பொறுப்பாளி?"

"வேறு யார்? நான்தான். காஷ்மீர் பிரச்னை விஷயத்திலும் அநேகம் பிசகுகள் நடந்திருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறேன்."

"சரி! சுதந்திர இந்தியாவில் இன்னமும் தரித்திரம் நீங்கவில்லையே? பெரிய தொழில்கள் தேசப் பொதுத் தொழில்கள் ஆகவில்லையே? மிகப் பெரிய லட்சாதிபதிகள் ஒரு பக்கமும் பரம தரித்திரர்கள் ஒரு பக்கமுமாய் இருக்கிறார்களே! மேலும் மேலும் சண்டித்தனம் செய்து முதலாளிகளே சலுகைகளைப் பெற்று வருகிறார்களே! இதற்கு யார் பொறுப்பு?"

பிரதம மந்திரி பேட்டி

(நமது விசேஷ விடாக்கண்ட நிருபர்)

பண்டித ஜவாஹர்லால் நேரு அவருடைய மாளிகையிலிருந்து இந்தியப் பார்லிமெண்டுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தபோது நான் எதிரில் போய் நின்றேன். அவர் என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டு தப்பித்துப் போகப் பார்த்தார். அது முடியாமற் போகவே என் மீது தாண்டிக் குதித்து அப்பாற் போகப் பிரயத்தனம் செய்தார்.

"பண்டிட்ஜி! இது தர்மமல்ல!" என்று நான் சோகமான குரலில் முறையிட்டதும் அவர் என்னை உற்றுப் பார்த்து, "நீ யார்?" என்றார்.

"நான் ஒரு அகதி......" என்று மேலே சொல்லுவதற்குள் இந்தியாவின் பிரதம மந்திரி என்னை அப்படியே தாவிப் பிடித்துக் கொண்டார். ("நான் ஒரு அகதிப் பத்திரிகை நிருபன்!" என்று சொல்ல எண்ணினேன். பாதி சொல்வதற்குள் பிரதம மந்திரி என்னைப் பாகிஸ்தானிலிருந்து தப்பி ஓடி வந்த அகதி என்று தவறாக எண்ணிக் கொண்டார். அந்தத் தவறை நானும் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தேன்.)

என்னை அகதி என்று நினைத்துக் கட்டிக்கொண்ட பிரதம மந்திரி தம் கண்களில் நீர் ததும்ப என்னைப் பார்த்து, "என் அருமை அகதியே! உனக்கு என்ன வேண்டும்? ரொட்டி வேண்டுமா? சாதம் வேண்டுமா? தங்க இடம் வேண்டுமா? உடுக்கத் துணி வேண்டுமா? 'அம்பாஸடர்' வேலை வேண்டுமா? அல்லது என்னுடைய பிரதம மந்திரி உத்தியோகந்தான் வேண்டுமா? எது வேண்டுமானாலும் சங்கோசப் படாமல் கேள்! சீக்கிரம்! சீக்கிரம்! நான் பார்லிமெண்டுக்குப் போகவேண்டும்" என்றார்.

"ஐயா! அதெல்லாம் எனக்கு ஒன்றும் வேண்டாம். முக்கியமாக, உங்கள் பிரதம மந்திரி உத்தியோகம் வேண்டவே வேண்டாம். நீங்களே அதைக் கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள். என்னிடமும் கொடுக்க வேண்டாம்; வேறு யாரிடமும் கொடுக்க வேண்டாம். எனக்கு வேண்டியது என்னவென்று சொல்லட்டுமா? நான் உங்களைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். அவற்றுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். அவ்வளவுதான் நான் வேண்டுவது."

"பேஷாகக் கேள், சொல்கிறேன். பார்லிமெண்டுக்குப் போவதில் கொஞ்சம் நேரமாகி விடும். ஆனால் ஆகட்டும். அங்கேயும் அங்கத்தினர்கள் ஏதேனும் அசட்டுக் கேள்விகள்தானே கேட்கப் போகிறார்கள்? அந்தக் கேள்விகளை நீதான் கேளேன்!" என்றார் பிரதம மந்திரி.

"பண்டிட்ஜி! பார்லிமெண்டு அங்கத்தினரைப்போல் நானும் அசட்டுக் கேள்வி கேட்கலாம் என்று தாங்கள் சொல்வதை ஆட்சேபிக்கிறேன். தாங்கள் மிக்க மரியாதைக்காரர். யாரையும் தாங்கள் மன மறிந்து திட்டுவதில்லை. ஒரே ஒரு சமயம் பம்பாய் 'பிளிட்ஸ்' நிருபரை மட்டும் நன்றாய்த் திட்டி விட்டீர்கள்..."

"அடடா! அப்படியா? என்னவென்று திட்டினேன்?"

"மூடன், மடையன், முழு மூட்டாள் தடியன், மூர்க்கன், பொய்யன்......"

"அடாடா! இப்படியெல்லாம் நான் மரியாதையின்றித் திட்டினேனா?"

"இல்லை, மன்னிக்க வேணும். அப்படி மரியாதைக் குறைவாகத் திட்டவில்லை. 'மூடர், மடையர், முழு மூட்டாள் தடியர், மூர்க்கர், பொய்யர்' என்று மரியாதையாகவே திட்டினீர்கள்......"

"சிலசமயம் அப்படி எனக்குக் கோபம் வந்துவிடுகிறது! ஆனால் இப்போது என்ன அதைப்பற்றி?"

"அவ்வளவு மரியாதைக்காரரான தாங்கள் பார்லிமெண்டு அங்கத்தினர் 'அசட்டுக்கேள்வி' கேட்பதாகச் சொன்னதைக் குறித்து வருந்துகிறேன். அப்படி அசட்டுக் கேள்வி கேட்கிற அங்கத்தினர் இந்தியப் பார்லிமெண்டில் இருந்தால் அந்தக் குற்றம் யாருடையது?"

"என்னுடையதுதான்; ஒப்புக் கொள்கிறேன்; அதற்காக ரொம்பவும் வருத்தப்படுகிறேன்" என்றார் இந்தியாவின் பிரதம மந்திரி. நம் ஜவாஹர்லால்ஜியின் பெருமையே இதுதான். தம்முடைய குற்றத்தை மட்டுமல்ல, — பிறருடைய குற்றத்தைக் கூடத் தம்பேரில் எடுத்துப் போட்டுக்கொண்டு அதற்காக மிகவும் வருத்தப்படுவார். இந்த அவருடைய குணம் எவ்வளவு தூரந்தான் போகிறது என்று பார்க்க விரும்பினேன்.

"போகட்டும்; குற்றத்தை ஒப்புக் கொள்கிற ஆசாமி தாங்கள் ஒருவராவது இருக்கிறீர்களே?" என்றேன்.

"ஆமாம்; குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன். அதற்காக வருந்துகிறேன். இன்னும் ஏதாவது கேள்வி இருக்கிறதா?"

கடினமான கணக்குகளைப் பார்த்த மாணவர்களுக்கு மூளை குழம்பியிருக்கும். உருளைக் கணக்கு ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அவ்வுருளைக் கணக்கு என்ன வென்றே தெரியவில்லை. சில மாணவர்கள் அந்தக் கணக்குக்குக் கன பரிமாணம் (Volume) கண்டு பிடித்திருக்கிறார்கள். சில மாணவர்கள் அதைப் படித்துப் பார்த்து விட்டு ஒன்றும் புரியாமல் வெளியே வந்து விட்டார்கள். கணக்குப் பரீட்சை அன்றே மாணவர்களின் உற்சாகம் குறைந்து விட்டது. எந்த வருடத்திலும் இதைப் போல் பாடத்தில் இல்லாத மூன்று கணக்குகளும், பின்ன விடையுள்ள இரண்டு கணக்குகளும், கடினமான ஒரு கணக்கும் கொடுக்கப்பட்டதில்லை. கணக்குக் கேள்வித் தாள்கள்தான் இப்படியென்றால், மற்றக் கேள்வித் தாள்களும் அதைப் போலவே மோசமாக இருக்கின்றன....''

திருச்சிராப்பள்ளியிலிருந்து மற்றொரு மாணவர் மனம் வெதும்பி எழுதியிருப்பதைப் பாருங்கள் :

''யாதொரு பயமுமின்றி நான் பரீட்சைகளுக்குச் சென்று எழுதிப் பாஸ் செய்வது வழக்கம். இந்த வருஷமும் அவ்வாறே பயமின்றித்தான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குச் சென்றேன். ஆனால் அங்கு கணித வினாத்தாளைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பாஸ் செய்யும் நம்பிக்கையை இழந்தேன். எல்லாக் கணக்குகளும் மிகக் கடினமாக இருந்தன. விடைகளும் பின்ன எண்களாக இருந்தன. பின்ன எண் வந்ததால் தாங்கள் ஏதோ தவறு செய்திருப்பதாக நினைத்துப் பல மாணவர்கள் தாங்கள் போட்டிருந்த கணக்குகளை அடித்து விட்டார்கள். அதிகாரிகள் இனி மேலாவது கேள்வித் தாள்களை இவ்வளவு மோசமாகக் கணித்து வழைக்காதிருப்பார்களா ?''

இதுபோல இன்னும் எத்தனையோ மாணவர்கள் மனம் உடைந்து எழுதியிருக்கிறார்கள். இவ்வாறாக, சென்னை மாகாணப் பரீட்சகர்கள் தயாரித்த கேள்வித் தாள்களின் கண்ணராவி பதினாயிரக் கணக்கான மாணவர்களின் கண்ணீரில் வந்து முடிந்திருக்கிறது.

இப்படி 68,000 பிள்ளைகளின் இளம் உள்ளங்களைப் புண்படுத்தி அவர்களுடைய தன்னம்பிக்கையைக் கொலை செய்த பாதகர்களுக்குத் தண்டனை ஒன்றும் கிடையாதா ? அவர்கள் இன்னும் கல்வி இலாகாவில் இருக்கலாமா? அவர்கள் ஆசிரியர்களாயிருந்தால், அப்படிப்பட்ட சிரத்தையற்ற பாதகர்களிடம் நம்முடைய அருமைக் குழந்தைகளை ஒப்புவிக்கலாமா?

• • •

இந்த வருஷத்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குச் சென்று எழுதிய சிறுவர் சிறுமிகளுக்கெல்லாம் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம்.

பரீட்சை எழுதியபோது அவர்கள் பட்ட கஷ்டங்களுக்காக நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அப்படிப்பட்ட பரீட்சைத் தாள்களைத் தயாரித்தவர்களை மன்னிக்கும்படியாகக் கடவுளைப் பிரார்த்திக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

பரீட்சை எழுதிய பிள்ளைகளில் எத்தனை பேர் தேறுவார்கள், எத்தனை பேர் தவறுவார்கள் என்று நாம் இப்போது சொல்ல முடியாது.

பரீட்சைத் தாள்கள் இவ்வளவு கொடுமையாக இருந்ததை முன்னிட்டு ஒருவேளை திருத்துகிறவர்கள் தாராளமாகவே மார்க்குகள் கொடுக்கலாம். ஆகையால் வழக்கம்போல் பாதிக்குப் பாதியாவது தேறலாம்.

எப்படியானாலும், தேறியவர்கள் எல்லாரும் தகுதி பெற்றவர்கள் என்றும் தேறாதவர்கள் தகுதி பெறாதவர்கள் என்றும் ஏற்படாது.

பரீட்சையில் நன்றாக எழுதவில்லையே என்று யாரும் ஒடிந்தும் மனம் வருந்தவேண்டாம்.

பரீட்சை தேறவில்லையென்று ஏற்பட்டாலும் மனதைப் புண்படுத்திக் கொள்ள வேண்டாம்.

பள்ளிக்கூடத்தில் பரீட்சையில் தேறாதவர்கள் எத்தனையோ ஆயிரம் பேர் உலகமெங்கும் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்.

படுகொலை செய்யும் பள்ளிக்கூடங்களின் மண்ணை உதறிவிட்டு ஏதேனும் ஒரு வாழ்க்கைத் துறையில் இப்போதே ஊக்கத்துடன் ஈடுபடுங்கள்.

விவசாயம், வர்த்தகம், கைத் தொழில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதில் பயிற்சி பெறுங்கள்.

இந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறியவர்கள் பி. ஏ. பாஸ் செய்துவிட்டுக் காலேஜிலிருந்து வெளி வருவதற்குள் வாழ்க்கைத் துறையில் ஈடுபட்ட நீங்கள் நிச்சயம் வெற்றி அடைந்திருக்கக் காண்பீர்கள்.

மாணவர்கள் சோர்வும் மனக்குழப்பமும் அடைந்து விட்டார்கள்.

3. அல்ஜீப்ரா, ஜியாமெட்ரி கேள்வித்தாள்கள் கடினமாகவும் நீளமாகவும் இருந்தன. அவற்றின் தெலுங்கு மொழி பெயர்ப்பில் ஒரு கணக்கையே காணவில்லை!

4. சரித்திரக் கேள்வியின் தமிழ் மொழி பெயர்ப்பு ஆண்டவனைத் தவிர வேறு யாருக்கும் சுலபமாகப் புரியக் கூடியதாய் இல்லை.

5. ஸயன்ஸ் கேள்வித்தாளில் அடங்கியிருந்த வார்த்தைகள் மாணவர்களுக்குப் புதிர்போல் இருந்தன.

6. சம்ஸ்கிருத, தெலுங்கு கேள்வித்தாள்களிலும் மாணவர்களைப் பிரமிக்க வைக்கும் தவறுகள் இருந்தன.

இந்த லட்சணத்தில், பரீட்சை ஆரம்பமான அன்றே கணக்குப் பரீட்சையை வைத்து விட்டார்கள். கணக்குக் கேள்விகள் குளறுபடியாக இருந்ததால் திகைப்பும் சோர்வும் அடைந்து போன மாணவர்கள் பின்னால் வந்த பரீட்சைகளில் எவ்வாறு தெளிவாக எழுதியிருக்க முடியும்? அதிலும் மேற்கூறிய பல குற்றங்கள் நிறைந்திருந்த கேள்வித்தாள்கள் மாணவர்களை என்ன பாடு படுத்தியிருக்கும்?

"ஸெலெக்ஷன் பரீட்சையை மறுபடியும் புகுத்த வேண்டும்" என்று கேட்கும் நிலைமை உபாத்தியாயர்களே சகிக்க முடியாமல் பரீட்சைத் தாள்களைக் கண்டிக்க முன் வந்திருக்கிறார்கள் என்றால், அவை எவ்வளவு மோசமாக இருந்திருக்க வேண்டும்?

* * *

இந்தப் படுமோச அக்கிரமத்தைக் கண்டித்து மாணவர்களிடமிருந்து ஏராளமான கடிதங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

"இவ்வருடம் கேள்வித்தாள்களைத் தயாரித்துள்ள ஆசிரியர்கள் தங்கள் மனம் போன போக்கில் தயாரித்திருக்கிறார்கள். எல்லாக் கேள்விகளும் கடினமாகவும் புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கின்றன. பௌதிகப் பாடத்தில் வகுப்பிலே புதிய வார்த்தைகளைச் (New terms) சொல்லிக் கொடுத்து விட்டு, கேள்வித்தாளில் பழைய வார்த்தைகளை (Old terms) உபயோகித்திருக்கிறார்கள். சிற்சில வார்த்தைகளுக்கு மட்டும் ஆங்கிலப் பதங்களைக் கொடுத்துள்ளனர். சம்பந்தமில்லாத கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் மீது ஏன் இவ்வளவு கோபம் அவர்களுக்கு?" என்று வலங்கைமானைச் சேர்ந்த ஒரு மாணவர் மனம் உடைந்து எழுதியிருக்கிறார்.

"இந்த வருஷம் நடந்த எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் கேள்வித்தாள்கள் பொருள் விளங்காதபடி மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. எங்களுக்குத் தமிழில் பூகோளக் கேள்வித்தாள் கிடைத்தது. அதில் பூகோளப் படம் சம்பந்தமான இரண்டு கேள்விகள் இருந்தன. அவை இரண்டிலும் 'வேண்டுமானல் குறித்துக் கீழே வருவனவற்றின் பெயரைக் கொடுக்கப்பட்ட படத்தில் குறிக்கவும்' என்று எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்தவுடன், இந்தக் கேள்விக்கு விடையளிப்பது நம்முடைய இஷ்டம்போலிருக்கிறது என்றுதான் முதலில் எண்ணத் தோன்றும். ஆனல் அதே கேள்வித்தாளில் 'எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்கப்பட வேண்டும்' என்று எழுதப்பட்டிருந்தது. உடனே ஆங்கில வினாத்தாளை வாங்கிப்பார்த்ததும் அதில் 'அவசியமான இடத்தில் குறித்துப் பெயரிடவும்' என்று பொருள்படும்படி "Mark wherever necessary and name..." என்று எழுதியிருந்தது. மாணவர்களுள் ஒரு சிலரே என்னைப்போல் ஆங்கிலத் தாளைப் பார்த்துத் தங்கள் சந்தேகத்தைப் போக்கிக் கொண்டனர். மற்றவர்கள் என்ன செய்வதென்று அறியாமல் விழித்தனர். ஆகையால் இனி மேலாவது பல ஆயிரக்கணக்கான மாணவர்களைத் திகைக்க வைக்கும்படி கேள்வித் தாள்களை மொழி பெயர்க்காமல் இருக்க வேண்டும்" என்று குன்னூரிலிருந்து ஒரு மாணவர் கண்ணீர் விட்டு எழுதியிருக்கிறார்.

கரூரிலிருந்து ஒரு மாணவர் எழுதியுள்ள கணக்குத்தாள் விவரங்களையும் இங்கே குறிப்பிடுகிறோம்:

"இவ்வருடம் எலிமெண்டரி கணிதம், இஷ்டபாட கணிதம், பௌதிகம் முதலிய கேள்விகள் மிகவும் கடினம். எலிமெண்டரி கணிதக் கேள்வித்தாளில் பதினைந்து கணக்குகள் உள்ளன. அதில் மூன்று கணக்குகள் ஆறாம் வகுப்பு வாசிக்கும் மாணவர்களின் அறிவுக்கு மேம்பட்டது. இரண்டு கணக்குகள் பின்னம். ஒரு கணக்கு கடினம். இந்த ஆறு கணக்குகளுக்கு மொத்தம் மார்க் 41. இதே தேறுவதற்குரிய மார்க்கை விட அதிகமாயிருக்கிறது. மீதி ஒன்பது கணக்குகளையும் சரியாகப் போட்டால் கூட போதிய மார்க் வருமா என்பது சந்தேகம்தான் ...... அந்தக்

பாதகர்களுக்குத் தண்டனை இல்லையா?

சில நாளைக்கு முன்னால் ஏற்பட்ட கல்கத்தா மெயில் விபத்தில் ஆறு பேர் மாண்டதும் நூறு பேருக்குமேல் காயமடைந்ததும் எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்காகத் தேச மக்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர். அந்த விபத்து ஏற்படும்படி செய்த சதிகாரர்களின் பாதகச் செயல் இந்தியா முழுவதும் மிகுந்த மனக் கொதிப்பையும் ஆத்திரத்தையும் உண்டு பண்ணியது.

ஆனால் இப்போது சென்னை மாகாணத்திலே அதைக் காட்டிலும் கோரமான வேறொரு விபத்து நேர்ந்திருக்கிறது. அந்த விபத்தின் விளைவாக 68,000 இளம் பிள்ளைகள் கடுமையாகக் காயமடைந்திருக்கிறார்கள்.

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள மனப் புண்ணையே குறிப்பிடுகிறோம்.

தேகத்திலே ஏற்படும் அற்பமான காயங்களைக் காட்டிலும் குழந்தைகளின் இளம் மனதிலே ஏற்படும் புண் கோரமானது அல்லவா?

ஏக காலத்தில் 68,000 குழந்தைகளின் மனதை வாட்டி வதைத்தவர்கள் எவ்வளவு இரக்கமற்ற பாதகர்களாக இருக்க வேண்டும்?

அதிலும், அந்தச் செய்கைக்குக் காரணமானவர்கள் கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைக்கும்போது யார்தான் கொதிப்பு அடையாமல் இருக்க முடியும்?

பதினாயிரக் கணக்கான மாணவர்களைப் பரிதவிக்கும்படி செய்தவர்களுக்குக் கல்வி இலாகா உத்தியோகங்களைக் காட்டிலும் ஜெயில் வார்டர் பதவியோ, அல்லது காட்டு மிருகங்களைக் கட்டி ஆளும் சர்க்கஸ் உத்தியோகஸ்தர் பதவியோதான் பொருத்தமாக இருக்கும்.

"பரீட்சை முறையே ஒரு பாதகம்" என்று உலகத்து அறிவாளிகள் சொல்லிவரும் இந்தக் காலத்தில், பரீட்சையில் கொடுக்கப்படும் கேள்வித் தாள்கள் மிகக் கடினமாகவும் எளிதில் புரியாமலும் இருந்து விட்டால் இன்னஞ் சிறு பிள்ளைகளை வதைக்க வேறு வினை என்ன வேண்டும்?

இந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் கொடுக்கப்பட்ட கேள்வித் தாள்கள் எல்லாம் அந்த லட்சணத்தில் இருக்கின்றன.

கேள்வித் தாள்களைக் கடினமாகவும் புரியாமலும் இருக்கும்படி தயாரிப்பதே மன்னிக்க முடியாத குற்றம். அத்துடன் அந்தத் தாள்களில் மாணவர்களின் தலை சுற்றும்படியான தவறுகளும் இருந்துவிட்டால் அவர்களின் கதி என்ன ஆவது?

பரீட்சை முறையிலுள்ள கேடுகளை நாம் எப்போதுமே வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆகவே அந்தப் பொதுக் கொள்கையையொட்டி இந்த வருஷத்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைத் தாள்களைப் பற்றியும் குறை கூறுகிறோம் என்று சில நேயர்கள் நினைக்கக் கூடும். ஆனால் அது சரியல்ல.

சென்ற வருஷத்தில் நாம் பரீட்சை முறையைக் கண்டித்தபோது நாம் தன்னந்தனியாக இருந்தோம்.

இந்த வருஷமோ பல உயர்தரப் பாடசாலைகளின் பொறுப்பு வாய்ந்த ஹெட்மாஸ்டர்கள் நம்முடன் ஓரளவு சேர்ந்திருக்கிறார்கள்!

சென்னை நகரிலுள்ள ஹைஸ்கூல்களின் தலைமை உபாத்தியாயர்கள் சென்றவாரம் எம். ஸி. டி. முத்தையா செட்டியார் ஹைஸ்கூலில் ஒரு கூட்டம் கூட்டினார்கள். இந்த வருஷத்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் கொடுக்கப்பட்ட கேள்வித் தாள்களை அவர்கள் நிதானமாக ஆராய்ச்சி செய்து, அவற்றிலுள்ள குற்றங்களை எடுத்துக் காட்டினார்கள்.

குற்றம் என்றால் ஒன்று இரண்டல்ல; பற்பல குற்றங்கள்.

1. கேள்வித் தாள்களின் தமிழ், தெலுங்கு மொழி பெயர்ப்பு மோசமாக இருந்தது. அதனால் மாணவர்கள் மிகவும் தத்தளித்து விட்டார்கள்.

2. கணக்குப் பரீட்சையில் மூன்று கேள்விகள் என். எஸ். எல். ஸி. மாணவர்களுக்குப் புரியக் கூடியவையாக இல்லை. மற்றும் சில கணக்குகளின் விடை பின்ன எண்ணாக வந்ததால்

இந்தியாவின் எதிர்கால அபிவிருத்தி இந்தியக் கிராமங்களின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது என்று சர்க்கார் அதிகாரிகள் உள்பட எல்லாரும் சொல்லுகிறார்கள். கல்வியறிவு இல்லாதவர்களின் தொகை கிராமங்களிலேயே மிகவும் அதிகம். எனவே, கிராம மக்களுக்கு அறிவையூட்டி கிராமங்கள் முன்னேற்றம் அடைவதற்கான பல்வேறு முறைகளையும் சர்க்கார் தாமதமின்றிக் கைக்கொள்ள வேண்டும். அத்துடன் பிறர் செய்துவரும் கிராம முன்னேற்றத்துக்கான காரியங்களுக்கு முட்டுக்கட்டை போடாமலும் இருக்க வேண்டும். எனினும் கூடார சினிமாக்களின் இன்றைய நிலைமையைக் கவனிக்கும்போது, சர்க்கார் அத்தகைய முட்டுக்கட்டைக் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

நசுக்க வேண்டாம்

கிராம மக்களின் முன்னேற்றத்துக்கான சாதனங்களில் கூடார சினிமாவும் ஒன்று. நவீன வசதிகள் இல்லாத கிராம ஜனங்கள் சிறிது நேரமாவது சந்தோஷமாகப் பொழுது போக்குவதற்குக் கூடார சினிமா உதவியாக இருக்கிறது. அத்துடன் அவர்களுக்குச் செய்திப் படங்களைக் காட்டுவதன் மூலம் அரசியல், பொருளாதாரம், சுகாதாரம் முதலிய பல்வேறு துறைகளிலும் அவர்கள் தங்களுடைய அறிவை விருத்தி செய்துகொள்வதற்கு வழி ஏற்படும்.

தற்போது இந்திய சர்க்காரின் ஆதரவில் செய்திப் படங்கள் தயாராகி ஜனங்களுக்குக் காட்டப்படுகின்றன. அவற்றைப் பெரிய நகரங்களிலுள்ள ஜனங்கள் மாத்திரம் பார்ப்பதால் சர்க்காரின் நோக்கம் நிறைவேறாது. கோடிக் கணக்கான கிராம மக்கள் பார்ப்பதற்கு வசதி அளிக்க வேண்டும். உதாரணமாக, இப்போது "கிராமப் பஞ்சாயத்து" என்ற தலைப்புடன் கிராம முன்னேற்றத்தைப் பற்றி இந்திய சர்க்கார் தயாரித்த படம் ஒன்றைச் சென்னை நகரிலுள்ள சினிமாக்களில் வாரக்கணக்காகக் காட்டி வருகிறார்கள். இதனால் நகர வாசிகளுக்கு என்ன பலன்? கிராமப் பஞ்சாயத்தின் சிறப்பைக் கிராம ஜனங்கள் அல்லவா உணர்ந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்? அவ்வாறு செய்வதற்கு இன்றியமையாத சாதனமாக இருந்துவரும் கூடார சினிமாவுக்கு சர்க்கார் ஆதரவு அளிக்க வேண்டாமா? ஆதரவு அளிக்க முன்வரா விட்டாலும் அதற்குக் கேடு செய்யாமல் சும்மா இருக்கலாமல்லவா?

லைசென்ஸ் கஷ்டம் தீருமா?

"இந்த நிலைமை இப்படியே நீடிக்குமாயின் இன்னும் சிறிது காலத்தில் கூடார சினிமாக்களில் தொண்ணூறு சதவிகிதம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். அவ்வாறு மறையாமல் இருக்க வேண்டுமானால் லைசென்ஸ் கொடுக்கும் முறையை மாற்றி அமைக்க வேண்டும். லைசென்ஸ் பெறுவதற்காக சினிமா சொந்தக்காரர்கள் வெவ்வேறு இடங்களிலுள்ள ஒரு டஜன் அதிகாரிகளைத் தேடிக் கொண்டு ஓடும்படி செய்யக் கூடாது" என்று கூடார சினிமா சொந்தக்காரர் சங்கத்தினர் பிலிம் விசாரணைக் கமிட்டியிடம் முறையிட்டுக் கொண்டார்கள். சில தினங்களுக்கு முன் திருப்பாதிரிப்புலியூரில் நடந்த தென்னிந்திய கூடார சினிமா சொந்தக்காரர் விசேஷ மகாநாட்டிலும் அவர்கள் தங்களுடைய குறைகளை எடுத்துக் கூறினார்கள்.

லைசென்ஸ் பெறுவதில் ஏற்படும் கஷ்டமே கூடார சினிமாக்களின் தொகை குறைந்து வருவதற்குக் காரணம் என்று தெரிகிறது. மேற்படி சினிமா சொந்தக்காரர்கள் பத்து ஐம்பது வீடுகள் உள்ள சிறிய கிராமங்களில் சினிமாக்களைக் காட்டப் போவதில்லை. அவ்வாறு காட்டுவதால் அவர்களுக்கு நஷ்டமே ஏற்படும். பதினாயிரம் ஜனங்களாவது வசிக்கும் சிறிய பட்டணங்கள் அல்லது பெரிய கிராமங்களிலேயே சொந்தக்காரர்கள் சினிமா கூடாரத்தை அமைப்பார்கள். நகரங்களில் இருப்பதைக் காட்டிலும் கிராமங்களில் கட்டணங்கள் மிகக் குறைவாதலால், ஏழை எளியவர்கள் சினிமாவைக் கண்டு களிக்கவும் செய்திப் படங்களின் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் வசதி ஏற்படுகிறது. அவ்வளவு பிரயோஜனகரமாக இருக்கும் கூடார சினிமாவுக்கு லைசென்ஸ் பெறுவதற்கு அளவில்லாத அநாவசியமான கஷ்டங்களையெல்லாம் ஏற்படுத்துவானேன்? ஆங்காங்கு நகரங்களிலுள்ள நிரந்தரமான சினிமா தியேட்டர்களின் சொந்தக்காரர்கள் செல்வாக்குள்ளவர்களாக இருப்பதால், கூடார சினிமாக்களை ஓங்க விடாமல் செய்வதற்கு அவர்கள் சூழ்ச்சி புரிவதாகக் கூடப் புகார் கிளம்புகின்றது. அத்தகைய புகாருக்கு இடமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது சென்னை சர்க்காரின் கடமையாகும். கிராம ஜனங்களின் கல்வியறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத கூடார சினிமாக்களுக்கு ஆதரவு அளிப்பதுடன், லைசென்ஸ் பெறுவதில் உள்ள கஷ்டங்களுக்கு உடனடியாகப் பரிகாரம் செய்ய முன்வர வேண்டும்.

மலர் 9

கல்கி

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா

இதழ் 35

என்ன சேதி?

என்னவென்று சொல்வது?

ஐரோப்பிய வர்த்தகச் சங்கத் தலைவர் ஸ்ரீ ஏ. எல். கேமரானையும் அவருடைய முஸ்லிம் டிரைவரையும் கல்கத்தாவுக்கு அருகில் வகுப்பு வெறியர்களில் சிலர் கொன்று விட்டார்கள். புனித இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காகக் கூடப் பலாத்காரத்தில் இறங்கக்கூடாது என்று காந்தி மகாத்மா உபதேசித்த நாட்டில், எவ்வித இலட்சியமும் இல்லாத இந்த வெறியர்களின் விபரீதச் செய்கையை என்னவென்று சொல்வது?

பாரத நாட்டின்மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி பாகிஸ்தான் பத்திரிகைகளும் தலைவர்களும் பல மாதங்களாகப் பித்தலாட்டப் பிரசாரம் செய்து வருகிறார்கள். அப்படியிருந்தும் அவர்களால் இந்தியாவின் நற்பெயரைக் கெடுக்க முடியவில்லை. எனினும் கல்கத்தா வகுப்பு வெறியர்களின் மேற்படி ஒரே செய்கை பாகிஸ்தானிகளின் நோக்கத்தை நிறைவேற்றியிருக்கிறது; அதாவது இந்தியாவின் பெருமையைக் குறைப்படுத்தியிருக்கிறது. பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள மதவெறிக் கொடுமையைத் தணித்து அங்குள்ள இந்துக்களைக் காப்பாற்றுவதற்காக இந்திய சர்க்கார் தலைவர்கள் இராப்பகலாக உழைத்து வருகின்றனர். அவர்களுடைய முயற்சி வெற்றிபெற வேண்டுமாயின் இந்தியாவில் அமைதி நிலவ வேண்டும்; வகுப்புவெறி லவலேசமும் தலை காட்டக் கூடாது. கல்கத்தாவில் நிகழ்ந்துள்ள சம்பவத்தைக் காட்டிலும் இந்திய மக்களுக்கும் தலைவர்களுக்கும் செய்யக்கூடிய துரோகம் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதை வகுப்பு வெறியர்கள் உணர வேண்டும்.


கொஞ்சம் வந்தனம்

கனம் கோபால ரெட்டி சென்னைச் சட்டசபையில் பேசும்போது நாடக சபைகளும் சங்கீத சபைகளும் அடைந்திருக்கும் துர்க்கதியைப் பற்றிக் குறிப்பிட்டார். அவற்றுக்குத் தமாஷா வரியை அடியோடு எடுத்து விடுவதுபற்றி யோசிக்க வேண்டியதுதான் என்றும், ஆனால் மேற்படி வருமானத்தில் பெரும் பகுதி நகர சபைகளுக்கும் ஜில்லா போர்டுகளுக்கும் போவதால் அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்க வேண்டும் என்றும் சொன்னார். இத்தமட்டிலாவது நாடக சபைகள் சங்கீத சபைகள்மீது கருணைகூர்ந்து கனம் கோபால ரெட்டி நல்ல வார்த்தை சொன்னதன் பொருட்டு நாம் கொஞ்சம் மகிழ்ச்சியடைந்து அவருக்கு இப்போதைக்குக் கொஞ்சம் வந்தனம் செலுத்திவைக்கிறோம்.

முட்டுக்கட்டைக் கைங்கர்யம்!

தென்னிந்தியாவில் 1946-47-ம் ஆண்டில் சுமார் 850 டூரிங் சினிமாக்கள் அதாவது கூடார சினிமாக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் இப்போதோ 250 கூடார சினிமாக்கள் கூட இல்லை. அதிலும் சென்ற ஒன்றரை மாதத்துக்குள் 37 சினிமாக்கள் மூடப்பட்டு விட்டன. ஏப்ரல் மாதத்துக்குள் மேலும் 25 கூடார சினிமாக்களை மூடப்போகிறார்கள் என்று தென்னிந்திய கூடார சினிமா சங்கத்தினர் அறிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறாக, தென்னிந்தியாவில் கூடார சினிமாக்களின் நிலைமை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இருக்கிறது. இத்தகைய பிற்போக்கான நிலைக்குக் காரணம் என்ன?



மகாத்மா காந்தி ஸ்தூபி நிதி உதவிக்காக

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

ஸ்ரீமதி டி. ஏ. மதுரம்

கோஷ்டியார்

ஐம்பதும் அறுபதும்

என்னும் நவீன நாடகத்தை நடத்துவார்கள்.

23-4-1950 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு
சென்னைக் கார்ப்பொரேஷன் ஸ்டேடியம்
மைதானத்தில் நாடகம் ஆரம்பமாகும்.

டிக்கட்டுகள்: ரூ. 25, ரூ. 10, ரூ. 5, ரூ 1, அணா 8

டாக்டர் பி. வி. செரியன்,
மேயர்.



கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 35 — ஏப்ரல் 2 — விரோதி௵ பங்குனி 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


புதிய "எச்.எம்.வி." வெளியீடு!
ஸ்ரீமதி ஜி. ராஜாமணி
N 28156
வாழ்வினிதாமோ
துள்ளுதெந்தன்
('குமரன்' இயற்றியவை)
ஸ்ரீ சிதம்பரம் ஜெயராம்
N 28158
யாருக்கும் அடிமையாகாதே
குற்றம் புரிந்தவன்
(கு. சா. கிருஷ்ணமூர்த்தி இயற்றியவை)
முருகன் டாக்கீ பிலிம் கம்பெனியாரின்
"ரத்னகுமார்"
பாட்டுகள்
N. 28137
ஸ்ரீமதி பானுமதி
கலை மானும்
ஸ்ரீமதி கே. மாலதி
ஏனடி கிளியே
முன் வெளியீடுகள்: N 28135 & N 28136
பாலாஜியின் "லைலா மஜ்னு"
பாட்டுகள்
பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி)
N 28128
நீதி ஆகுமோ
(சங்கீதம்: எஸ். வி. வெங்கடராமன்)
கண்ணால் என்னை பாராய்
(சங்கீதம்: B. தாஸ் குப்தா)
நாதஸ்வர ராஜா திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை
N 18971
பதவினி - சாளகபைரவி
தல்லி தண்ட்ருலு - பலஹம்ஸ
ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்


விஜயகுமாரி
காட்சியழகு நிரம்பிய
கலை விருந்து
தென்னாடெங்கும் இப்பொழுது
நடைபெறுகிறது......
மார்ச் முதல்
சென்னை பிரபாத்·
கெயிட்டி·ஸரஸ்வதி
டாக்கீஸில்....
ஜூபிடர்
தயாரிப்பு
டைரக்ஷன்—
ஏ.எஸ்.ஏ.சாமி
ஸ்டுடியோ·சென்ட்ரல்

ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபா, திருவல்லிக்கேணி

(ரிஜிஸ்டர்டு)

பொன் விழாக் கொண்டாட்டம் 1950

கட்டிட நிதிக்காக உதவிக் கச்சேரிகள் - 7-4-50 முதல் 16-4-50 வரை

திருவல்லிக்கேணி, டாக்டர் பெஸண்ட் ரோடிலுள்ள
நேஷனல் பெண்கள் பாடசாலையில் நடைபெறும்


7—4—50 வெள்ளிக்கிழமை மாலை 5-30	சங்கீத சாம்ராட் சூரத் பண்டிட் ஓம்கார்நாத்ஜி டாகூர் ஸ்ரீ எம். எஸ். கோபாலகிருஷ்ணன் ஸ்ரீ சித்திஷ் குமார் ஸ்ரீ பல்வந்த்ரி பாட்	ஹிந்துஸ்தானி பாட்டு பிடில் தபேலா தனபூரா
8—4—40 சனிக்கிழமை மாலை 6-30	ஸ்ரீ கே. சாரங்கபாணி ஸ்ரீ பந்துலு கோஷ்டியார்	வரதக்ஷிணை நாடகம்
9—4—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30	நிருத்ய கலா ரஞ்சனி குமாரி வைஜயந்திமாலா	நூதன நடனங்கள்
10—4—50 திங்கட்கிழமை மாலை 6-30	சங்கீத கலாநிதி பல்லடம் ஸ்ரீ சஞ்சீவி ராவ் திருவாலங்காடு ஸ்ரீ சுந்தரேசய்யர் ஸ்ரீ எஸ். வி. எஸ். நாராயணன் ஸ்ரீ ஆர். எஸ். கிருஷ்ணமூர்த்தி ராவ்	புல்லாங்குழல் பிடில் மிருதங்கம் கஞ்சிரா
11—4—50 செவ்வாய்க்கிழமை மாலை 6-30	கான கலாதர மதுரை ஸ்ரீ மணி அய்யர் மாயவரம் ஸ்ரீ கோவிந்தராஜ பிள்ளை பழனி ஸ்ரீ சுப்ரமணிய பிள்ளை	பாட்டு பிடில் மிருதங்கம்
12—4—50 புதன்கிழமை மாலை 6-30	காயக சிகாமணி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார் ஸ்ரீ பாப்பா வெங்கட்டராமய்யர் பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர்	பாட்டு பிடில் மிருதங்கம்
13—4—50 வியாழக்கிழமை மாலை 6	நாதஸ்வர சக்ரவர்த்தி ஸ்ரீ டி. என். ராஜரத்னம் & பார்ட்டி.	நாதஸ்வரம்
14—4—50 வெள்ளிக்கிழமை மாலை 6-30	லலிதா, பத்மினி & ராகினி	இந்திய நடனங்கள்
15—4—50 சனிக்கிழமை மாலை 6-30	குமாரி (பேபி) கமலா (நடன ஆசிரியர்: வழுவூர் ஸ்ரீ ராமய்யா பிள்ளை)	பரதநாட்டியம்
16—4—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30	ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி மைசூர் ஸ்ரீ டி. சௌடய்யா கல்பாத்தி ஸ்ரீ ராமநாதன் ஆலங்குடி ஸ்ரீ ராமச்சந்திரன்	பாட்டு பிடில் மிருதங்கம் கடம்

சீஸன் டிக்கட்டுகள்: ஸ்பெஷல் ரிஸர்வ்டு (சேர்கள்) ரூ. 25/-
ரிஸர்வ்டு ரூ. 15/- முதல் வகுப்பு ரூ. 10/-


22-3-50 முதல் கீழ்க்கண்ட இடங்களில் டிக்கெட்டுகள் கிடைக்கும்:

1. சபை காரியாலயம், 68, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்
2. ஸ்ரீ தியாகப்ரும்ம கான சபை, வாணி மஹால், தியாகராயநகர், மதராஸ்
3. மியூஸிக் மான்ஷன், 124, பிராட்வே 4. ரஸிக ரஞ்சனி சபா, மயிலாப்பூர்


ஜல தோஷம், மார்-சளி உடம்பு வலிகளுக்கு நிவாரணமளிக்கிறது
'ஜீவான்ஜன்'
சரீரத்தின் மேல் தடவி தேய்ப்பதற்கும் ஆவியாக சுவாசிப்பதற்கும் உபயோகரமானது ரஸாயனக் களிம்பு, மிருக கொழுப்பு சேராதது
தயாரிப்பவர்கள்
ஜீவான்ஜன் லாபொரட்டரீஸ் லிட்.
மதராஸ்-14
ஜீவான்ஜன்
ஸோல் ஏஜண்டுகள்
கே.கே.பிள்ளை & கோ
ராயப்பேட்டை, மதராஸ்-14
ஜீவான்ஜன்


EWI LTD.
phoenix
FANS
AC/DC
மிகச் சிறந்தவை என இந்தியா எங்கும் "போனிக்ஸ்" மின்சார விசிறிகள் பெயர் பெற்றுவிட்டன. நீண்ட வருஷ சேவைக்கானபடி மிக உறுதியாக அமைக்கப்பட்ட போனிக்ஸ்மின்சாரவிசிறிகள் உங்கள் பணத்துக்கு உகந்த மதிப்புள்ளவை. இரண்டு வருஷம் உத்தரவாதமுள்ளது
RM. S. & CO. LTD,
16. BROADWAY. MADRAS. 1
சப டிஸ்ட்ரிப்யூடர்கள் :
சேலம் ஜில்லா : எஸ். எம். டி. வேலு அண்டு கம்பெனி, சேலம் டவுன்
மதுரை ஜில்லா : இந்தியா எலெக்ட்ரிக் கம்பெனி, 154, தெற்கு மாசி வீதி, மதுரை
திருநெல்வேலி ஜில்லா : மெஸர்ஸ். மோட்டார் ஹவுஸ், ரதவீதி திருநெல்வேலி டவுன்
கோயமுத்தூர் ஜில்லா : மெஸர்ஸ். ஷண்முகம் & கோ., ஜெயில்ரோடு, கோயமுத்தூர்
வட ஆற்காடு ஜில்லா : எலெக்ட்ரிகல் & மெஷினரி சிண்டிகேட், திருப்பத்தூர்
மேற்கு ராமநாதபுரம் ஜில்லா :
ஜெனரல் & எலெக்ட்ரிக் டிரேடிங் கம்பெனி - கோவில்பட்டி
கிழக்கு ராமநாதபுரம் ஜில்லா :
ஜெனரல் சேல்ஸ் & சர்வீஸ் கம்பெனி - காரைக்குடி


இந்திய திரைப்படச் சரித்திரத்தில் கடந்த
30 வருஷங்களாக யாரும் கண்டிராத
அரும் பெரும் சாதனைகளைச் சாதித்த
அதி அற்புதச் சித்திரம் . . . . . .
ஜெமினியின்
சந்திரலேகா
மீண்டும் உங்களை மகிழ்விக்க
தமிழ் வருஷப் பிறப்பன்று
தமிழ் நாடெங்கும் வெளிவருகிறது.


உங்கள் ரசிகத்தன்மைக்கு நன்றி
வாழ்க்கை
100 வது நாள் !
சென்னை.........பாரகன்
மஹாராணி · லக்ஷ்மி
மதுரை..........சென்ட்ரல்
கோவை............கர்நாடிக்
திருச்சி..............ஸ்டார்
சேலம்............சென்ட்ரல்
திருநெல்வேலி...... பாபுலர்
வேலூர்.............நேஷனல்
காஞ்சிபுரம்.........முருகன்
காரைக்குடி.......சரஸ்வதி
புதுக்கோட்டை......வெஸ்ட்
கும்பகோணம்... விஜயலக்ஷ்மி
ஈரோடு..........டவுன் ஹவுஸ்
AVM
மற்றும் 50 ஊர்களில் வெற்றியுடன் !

மைசூர் - ராஜ்கமால்